பசும் படம்
ம்பர் '54 • 12 அணா
வைத்யா பிலிம்ஸாரின்
வைரமாலை
ஒரு சிரிப்பூட்டும் திரைச்சித்திரம்..
PSR
டைரக்ஷன்: N. ஜகன்னாத், B.A.
ஸ்டுடியோ: வ

ஆகஸ்ட் 26 முதல்
தமிழ்நாடெங்கும்
சென்னை
வெலிங்டன்
ஸ்ரீ கிருஷ்ணா
சயானி
அருணா பிலிம்ஸ்
தூக்கு தூக்கி
சிவாஜி கணேசன் ★ பாலையா
லலிதா ★ பத்மினி ★ ராகினி
..... மற்றும் பலர் .....
டைரக்ஷன்
R.M.கிருஷ்ணசாமி
புரொடக்ஷன்
M.ராதாகிருஷ்ணன்
ARUNA FILMS
VENDHAN

செப்டம்பர்
வெளியீடு

அசோகா பிக்சர்ஸ் தயாரிக்கும்

என் மகள்

ரஞ்சன் • நம்பியார் • எஸ். வரலக்ஷ்மி • மைனாவதி

மற்றும் பலர் நடிப்பது

அசோகா பிக்சர்ஸ் 18 லஸ் அவின்யூ மயிலாப்பூர் சென்னை 4

REGISTRAR OF BOOKS

925
3-54

செப்டம்பர் ரிலீஸ்



ஸன்ரைஸ் புரொடக்ஷன் அளிக்கும்

நல்லவன்

தமிழ்

நடிகர்கள்: மனோஹர், நம்பியார், சாமா, முஸ்தபா, நந்தாராம், சாயராம், சந்தானம், தோடி கண்ணன், P. K. சரஸ்வதி, S. ரேவதி, S. R. லக்ஷ்மி

டைரக்ஷன்: M. திருவேங்கடம்

விவரங்களுக்கு: ஸன்ரைஸ் புரொடக்ஷன், மதராஸ் - 24.

சென்னை-600 0

அமோக வெற்றியுடன்.
இப்பொழுது நடைபெறுகிறது
காலத்துக்கேற்ற
கதை
கருத்தைக்கிளறும்
வசனம்
மெய்சிலிர்க்கும்
நடிப்பு
அவ்வை புரடக்ஷன்ஸ்
ரக்த பாசம்
கதை, வசனம்
ஸ்ரீதர்
டைரக்ஷன்
R S. மணி
ஸ்டுடியோ
நெப்ட்யூன்

ஆனந்தா ப்ரொடக்ஷன்ஸ்
மறுமலர்ச்சி
ஜி. வரலக்ஷ்மி.. ஸ்ரீராம்.
நம்பியார்.. C.S R.. E.V. ஸரோஜா
டைரக்ஷன்
K.S. பிரகாஷ்ராவ்

சிகரத்தில் உயர்ந்தது

எவரெஸ்ட்

பட்டணம்பொடியில் உயர்ந்தது

என்.வி.எஸ்

N.V.S



வெற்றி காண விரும்புவது

எவரெஸ்ட் சிகரம்!

அதற்குறுதுணையானது **N. V. S.** பட்டணம் பொடி. எனவே அன்பர்கள் என்றும் **N. V. S.** பட்டணம் பொடியே பெறுக!

N.V. ஷண்முகம் கம்பெனியார்

தந்தி: மூக்குத்தூள் — போன்: 4071

த.பெ. 555. வண்ணாரப்பேட்டை, மதறாஸ் — 21.

மலைக்கள்ளன்!
அவனுக்கு யார் எதிர்?
அந்தப் பெயரே ஒரு புதிர்!
அந்தத் தாமரைக்கு அவன்தான் கதிர்!
பக்ஷிராஜாவின்
மலைக்கள்ளன்
டைரக்ஷன்: S.M. ஸ்ரீராமுலு நாயுடு
இப்பொழுது நாடெங்கும் நடைபெறுகிறது
BHARAT STUDIO

படம் 13

காட்சி 1

பேசும் படம்

செப்டம்பர் 1954

1. ஒய்வு வேண்டும் ... 9
2. எனது முதல் அனுபவம் (கிருஷ்ணகுமாரி) ... 14
3. நம்பியார் – மைனாவதி (மூவர்ணப் படம்) ... 17
4. சுலோசனா (மூவர்ணப் படம்) ... 20
5. 'மாங்கல்யம்' சுலோசனா (வாழ்க்கைச் சித்திரம்) ... 21
6. ரத்தபாசம் (திரைக்கதை, வசனம்) ... 31
7. வைரமாலை (இரு வர்ணப்பட அநுபந்தம்) ... 37
8. நக்ஷத்திரங்களின் கிரகங்களிலே... ... 46
9. ஸ்டூடியோ விஜயம் ... 48
10. செய்திச் சுருள் ... 54
11. இது சரியல்ல (டி. எஸ். பாலய்யா) ... 58
12. சினிமா டெக்னீஷியன்கள் சங்க ஆண்டு விழா ... 62
13. தபால் பெட்டி ... 64
14. நான் ரஸித்த காட்சி ... 66
15. கேள்வி—பதில் ... 74
16. என்மகள் (படக் காட்சிகள்) ... 77
17. தூக்கு தூக்கி (படக்காட்சிகள்) ... 81
18. தூக்கு தூக்கி (திரைக்கதை, வசனம்) ... 105

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 188, Royapettah High Road, Madras - 14. (Phone: 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor: T. V. Ramanath. Sole Agents for Ceylon: Mohan & Co., Ltd., 66, First Cross Street, Colombo. Sole Agent for Malaya: P. Sivaguru, 27, Scott Road, Kuala Lumpur and 8, China Street, Penang.

Editorial & Publication Offices:

188, Royapettah High Road, Madras - 14

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

இப்பொழுது தென்னாடெங்கும்
நடைபெறுகிறது
ஆர்.ஆர்.பிக்சர்ஸ்
கூண்டுக்கிளி!
திரைக்கதை வசனம்: விந்தன் டைரக்ஷன் ராமண்ணா

ஓய்வு வேண்டும்!

லலிதா – பத்மினி – ராகினி

நாங்கள் சினிமா உலகிலிருந்து ஓய்வுபெற விரும்பியதன் காரணத்தைக் கேட்டு, நேரிலும், டெலிபோனிலும், கடிதமூலமாகவும் விசாரித்து, தங்கள் அன்பைக் காட்டி வரும் அன்பர்களுக்குத்தான் சொல்கிறோம், 'அவர்கள் எங்கள் ஓய்வுக்கான காரணத்தை'த் தெரிந்து கொள்ளத் தான் இக்கட்டுரையை எழுதியிருக்கிறோம். அவர்கள் எங்கள்மீது செலுத்தி வரும் அன்புக்கும் எங்கள் நன்றியை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

படவுலகிலே நாங்கள் ஈடுபட்டு சுமார் எட்டு ஆண்டுகளில் நாங்கள் எண்பது படங்களில் நடனமாடியிருக்கிறோம். நாற்பது படங்களில் நடித்திருக்கிறோம்.

படவுலகம் எங்களை 'வெளியே போ!' என்று வசைபாடவில்லை; ரஸிகர்கள் 'வேண்டாம் உங்கள் தோற்றம்'என்று எங்களை வெறுத்து ஒதுக்கவில்லை. ஆனால் நாங்கள்தான் எங்களுக்கே ஓய்வு அவசியம் தேவை என்று நினைத்தோம் எங்கள் நலனில் அக்கறைகொண்ட எங்கள் தாயார்தான் இந்த யோசனையைத் தெரிவித்தார்கள். இதயமென்னும் எங்கள் சட்டசபையில் அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. சென்ற மாதமுதல் அமலுக்கும் வந்து விட்டது!

இந்த யோசனை பிறக்கக் காரணங்கள்? அதை விளக்கத்தானே இக்கட்டுரையையே நாங்கள் எழுதுகிறோம். நாங்கள் மேற்கொண்ட இம்முடிவுக்கு எங்கள் உடல் நலம்தான் முதல் காரணம்.

இந்த எட்டு ஆண்டுகளில் எங்களுக்கு ஓய்வு என்பதே ஒரு நிமிஷமும் கிடையாது; தூக்கம் எங்கள் தினசரி கடமைகளில் ஒன்று என்பதையே மறக்கச் செய்து விட்டன படப்பிடிப்புகள். இவை தவிர சதா சர்வமும் 'மேக்–அப்' எங்கள் முகத்தை ஆக்ரமித்துக் கொண்டது. அத்துடன் மட்டுமல்லாமல் பல ஆயிரம் ஓல்டுகள் சக்தி வாய்ந்த மின்சார விளக்குகளின் தீக்ஷண்யமும் எங்கள் உடலை தன் கிரணங்களால் தழுவிக் கொண்டே இருந்தன.

சதாசர்வ காலமும் முகத்தில் மேக்–அப், உஷ்ண தீக்ஷண்யம் நிறைந்த மின்சார விளக்குகளின் அனல் இவை எங்கள் உடலை பாதிப்பது இருக்கட்டும். இப்படி சதாசர்வ காலமும் 'படப்பிடிப்பு படப்பிடிப்பு' என்று அலைந்து கொண்டிருந்தால் எங்களுக்கு ஓய்வுதான் எப்போது கிடைக்கும்? சலியா உழைப்புடன் கூடிய எங்களுக்கு ஓய்வும் அத்தியாவசியமாகத் தேவைப்பட்டது. பெண்களின் நலனில் ஒரு தாயாருக்கு அக்கறை உண்டல்லவா? ஆகவேதான் அவர் அன்புக்கட்டளை இட்டார்; நாங்களும் அடிபணிய வேண்டி நேர்ந்தது.

கட்டுரையின் முற்பகுதியில் நாங்கள் நடித்த படங்களின் எண்ணிக்கையைப் பற்றிக் கொடுத்திருக்கிறோம். உங்கள் கவனத்தை மீண்டும் அதில் கொண்டுவரும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

ஆம், எண்ணிக்கையிலே இவை பெரிய அளவுதான்; அதே சமயம் வருமானத்திலும் தொகை பெரிதாகத் தான் இருக்கும் என்று நீங்கள் எதிர்பார்க்கலாம். இந்த அளவிலேதான் எங்களுக்கு வருமான வரியும் விதிக்கப்படுகிறது. ஆனால் உண்மை நிலை?

படத்திலே நடிக்க வேண்டும் என்று படத்தயாரிப்பாளர் கேட்பார். நாங்கள் சம்மதிப்போம். அட்வான்ஸாம் தருவார், அதற்கு அடையாளமாக. படத்தில் நாங்கள் நடிப்போம். காண்டிராக்ட் செய்தபடி எங்கள் மீதி தொகையை இறுதியில் தருவதாகச்

சொல்வார். ஆனால் அவர் அம்மாதிரி நடந்து கொள்ள முடியாதபடி படத்தின் தலைவிதி அமைந்துவிடும். இம்மாதிரி எங்களுக்குப் பூராத் தொகையும் கிடைக்காத படங்கள் இதில் சில உண்டு. இது தவிர அட்வான்ஸ் கொடுத்து சிலர் எங்களை ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். அவர்கள் படமெடுக்க முடியாத நிலையில் சந்தர்ப்பம் அவர்களைக் கொண்டு வந்து வைத்துவிடும். நாங்கள் வாங்கிய அட்வான்ஸ்தொகையையே அவர்களுக்குத் திருப்பித் தரும்படி நேர்ந்து விடும். இப்படி சில படங்கள் எங்களுக்கு !

இவை தவிர சில படங்களில் நாங்கள் இலவசமாகவும் நடித்திருக்கிறோம். குறிப்பிட்ட அப்பட முதலாளிகள் எங்கள் ஆரம்ப காலத்தில் மிகவும் உதவியிருப்பவர்கள். அவர்களுக்கும், அவர்கள் கஷ்டப்படும் போது, நாங்கள் கைம்மாறு செய்ய வேண்டாமா? ஆனால் வருமான வரியோ காண்டிராக்ட் தொகைப்படி எங்களுக்கு விதிக்கப்பட்டு விடுகிறது. படத்துறையில் எங்களுக்கு ஓரளவு பணம் கிடைத்ததென்பது உண்மைதான்! ஆனால் யாவரும் எதிர்பார்க்கும் பெரிய அளவில் அல்ல என்பதைத் தான் நாங்கள் குறிப்பிட விரும்புகிறோம். ஆகவே இந்த ஓய்வினால் வருமான வரித் தொல்லையும் எங்களுக்கு நீங்கும் என்று நினைத்தோம்.

இப்பொழுது நீங்கள் ஒரு கேள்வி கேட்கலாம். "நீங்கள் ஓயாத படப்பிடிப்பினால் உடல் நலம் குன்றி விட்டது என்கிறீர்கள். அதிகப்படியான படங்களில் நடிப்பதனால்தான் வருமானவரித் தொல்லையும் அதிகமாகி விட்டது என்று சொல்கிறீர்கள். ஆனால் வருஷத்திற்கு ஒன்று அல்லது இரண்டு படங்களுக்கு மேல் நடிப்பதில்லை என்று நீங்கள் ஏன் முன்னரே முடிவு செய்து கொள்ளக் கூடாது? உங்கள் பேராசையைத்தானே இது காட்டுகிறது!" என்று நீங்கள் கேட்கலாம்; அதற்கு உரிமையும் உண்டு.

அதற்கான பதிலையும் நாங்கள் தர விரும்புகிறோம். படவுலகில் நாங்கள் நுழைந்த போது மேற்படி முடிவுடன் தான் இறங்கினோம். அடுத்தடுத்து பலர் எங்களைப் படங்களில் ஆட அழைத்தார்கள். ஆரம்ப காலத்திலேயே விரோதம் கூடாது என்பதற்காக எங்கள் முடிவையும் சற்று மூட்டை கட்டி வைக்க நேர்ந்தது. 'ஆரம்பத்திலேயே திட்டமும் சட்டமும் போட ஆரம்பித்து விட்டார்களே' என்று யாரும் எண்ணக் கூடாது என்று நாங்கள் அப்போது எண்ணினோம். முடிவிலே எங்களை அழைத்த படமுதலாளிகளெல்லாம் எங்கள் நண்பர்களாகவும் மாறி விட்டார்கள். எங்கள் முன்னேற்றத்திற்குக் காரணமான அவர்கள் அடுத்தடுத்து மேலும் மேலும் படங்களில் நடிக்க அழைத்த போது எங்களால் தட்ட முடியவில்லை. ஓயாத படப்பிடிப்புதான் நாங்கள் மேற்கொள்ள முடிந்தது.

இன்று நான்(லலிதா)இரண்டு படங்களில் நடித்து வருகிறேன், எனக்கு (பத்மினி)ஒன்பது படங்கள் இருக்கின்றன. எனக்கு சுமார் (ராகினி) இரண்டு படங்கள் இருக்கின்றன. இந்நிலையில் மேலும் சில படத் தயாரிப்பாளர்கள் நடிக்க அழைத்த போதுதான் எங்கள் நிலையும் தர்ம சங்கடமாகி விட்டது; அதுவும் அவர்கள் நாங்கள் ஆரம்ப நாட்களில் முன்னேற அருந்துணையாக இருந்தவர்கள். அவர்களை எப்படித்தட்டிக் கழிக்க முடியும்? அதே சமயம் தொல்லைப் படுவது யார்? இதற்கு மேலும் கடுமையாக எப்படி எங்களால் உழைக்க முடியும்? ஆகவே "இதுவரை ஒப்பந்தம் செய்த படங்களைத் தவிர, இனி சில புதுப் படங்களிலேயே நடிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்து விட்டால்" என்று நாங்கள் எண்ணினோம் !

எங்கள் உடல் நலம், தேவைப்பட்ட ஓய்வு, வருமான வரியினின்றும் விடுதலை—ஆகியவற்றோடு இதுவும் பக்கபலமாக அமைந்தது. இந்த யோசனை பிறந்ததற்கான நாலாவது காரணம் இது !

மேலே தொடருவோம் !

நடிகன் அல்லது நடிகை என்போர் யார்? அவர்களது மதிப்பு என்ன? சுதந்திரம் என்ன?

இம்மூன்றில் முதலாவதற்கு எளிதிலேயே விடை கூறி விடலாம். நாடகங்களிலோ, திரைப் படங்களிலோ

நடிப்பவன்தான் நடிகன்; அதாவது நடிப்பைப் பிரதிபலிப்பவன். 'சரியான விடை; பொருத்தமான விளக்கம்' என்று நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள். ஆனால் இதைத் தொடர்ந்து வரும் இரு கேள்விகளுக்கு? அவற்றுக்குத்தான் எங்களால் பதிலே காண முடியவில்லை. ஆனால் நாங்கள் அந்த வகையில் எதிர்பார்ப்பது என்ன என்பதை மட்டும் விளக்கி விடுகிறோம்.

நடிப்பைத் தொழிலாகக்கொண்ட நடிகனுக்கு சமூகத்திலே சம அந்தஸ்தும் உரிமையும் தரப்படுகின்றனவா? எங்களைக் கேட்டால் 'இல்லை' என்றுதான் பதில் சொல்வோம். நடிகன் என்றாலே ஒரு இழிவான போக்கு—தவறான அபிப்பிராயம் இரண்டும் சமூகத்திடையே நிலவி வருகின்றன. இத்தகைய விசித்திர வரவேற்பை இத்தொழில் சமூகத்திடம் பெற்றிருக்கிறது.

மேலை நாடுகளில் நடிகர்கள் எப்படி நடத்தப்படுகிறார்கள்; அவர்களுக்கெல்லாம் எவ்வளவு மதிப்பு அங்கு வைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும் போது நாம் வெட்கித் தலை குனிய வேண்டித்தான் வருகிறது!

தொல்லை தரும் மேக்-அப், அனலை அள்ளி வீசும் மின்சார விளக்குகள், மற்றும் பல கஷ்டங்கள்-இவற்றிடையே அவதிப்பட்டு உழைத்து விட்டு ஒரு நடிகனோ, நடிகையோ ஓய்வு பெற விரும்பி சிறிது காற்றாட வெளியே போக முடியுமா? அவ்வளவு தான், அமைதியைத் தேடி வந்த அவனைச் சுற்றி ஒரு ஜனத்திரள்; அவர்கள் சும்மாவும் இருக்க மாட்டார்கள்! நடிகையாக இருந்து விட்டாலோ கேட்கவே வேண்டாம். ஆக இந்தத் தொல்லைக்குப் பயந்து இரவு வேலைகளில் துணை கொண்டு வெளியே சென்றோமானால் வந்தது ஆபத்து! அவ்வளவுதான், தவறான ஒரு திரை எங்களைச் சுற்றி அமைக்கப்பட்டு விடும். இதற்காக எங்கள் வீட்டிலேயோ, அல்லது சக நடிகை வீட்டிலோதான் நாங்கள் பொழுதைக் கழிக்க வேண்டி வரும். அங்கேயும் தொழில் பற்றிய பேச்சுத்தான் பிறக்கும். எதை மறக்க விரும்புகிறோமோ அதுதான் முதலில் வந்து நிற்கும்!

சினிமா, நாடகம் மற்றும் எந்த நிகழ்ச்சியானாலும் இப்படித்தான். நாங்கள் முடிவைக் காணாத சினிமாக்கள் எவ்வளவு தெரியுமா? நாடகங்கள் எவ்வளவு தெரியுமா? ஏனெனில் அவை முடியும் முன்னரே எழுந்து வந்தால் தான் நாங்கள் தப்ப முடியும்!

ரஸிகர்கள் எங்கள் மீது பாய்ந்து வரலாம். 'எங்கள் அன்பைக் காட்டத் தானே அப்படிச் சூழுகிறோம்' என்று. நாங்களும் அதை ஆமோதிக்கிறோம்; ஆனால் அன்பைக் காட்ட மேலே விழவேண்டாமே; கூச்சல் போட்டுக் கத்த வேண்டாமே; கண்டபடி பேச வேண்டாமே! இதர சகோதரிகளிடம் உங்கள் அன்பை இப்படித்தானா வெளியிடுகிறீர்கள்?

தனிப்பட்ட ஒரு மனிதன் அனுபவிக்கும் சுதந்திரத்தை நாங்கள் அனுபவிக்க முடிவதில்லை. இந்த நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க எங்கள் யோசனை உதவும் என்று எதிர்பார்த்தோம்.

படவுலகிலே நுழையும் போது நாங்கள் ஒரு லக்ஷியத்துடன் தான் பிரவேசித்தோம். எங்கள் நடிப்பின் மூலம் உங்களைக் கவர்ந்து வெற்றியின் சிகரத்திற்குச் சென்றுவிட வேண்டும் என்று திட்டமிட்டோம்; எங்கள் எதிர்காலத் தேவைக்கேற்ற பொருளும் திரட்ட விரும்பினோம்.

நாங்கள் படவுலகில் நுழைந்து எட்டாண்டுகளில் எங்கள் லக்ஷியம் ஓரளவுக்குப் பூர்த்தியாகி விட்ட தென்றே சொல்ல வேண்டும். ஓயாத படப்பிடிப்பு காரணமாக படவுலகமும் எங்களுக்கு அலுத்து விட்டது.

இதையெல்லாவற்றையும் விட முக்கியமானது இதுதான். நாங்களே தொடர்ந்து நடித்து வந்தால் புதிய முகங்கள் தான் எங்கே தோன்றுவது? எங்களுடைய நாட்டிய கோஷ்டியிலே துடிப்பும், ஆர்வமும், அழகும் கொண்ட பல நடிகமணிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் பிரதான பாகங்களில் நடிக்க சந்தர்ப்பம் வேண்டாமா? நாங்கள் நடிக்கும் படங்களில் கோஷ்டி நடனங்களில் அவர்களுக்கு சந்தர்ப்பம் பெற்றுத் தருகிறோம். ஆயினும் அவர்கள் பிரதான பாகங்களில் எப்படி நடிப்பது? இவர்களைப் போன்று இன்னும் எத்தனை பேர்?

படவுலகமே ஒரு நடிகையை வெறுத்து வெளியேபோகும்படியான நிலை ஏற்படுவதைவிட, கௌரவமான முறையில், புகழுடன் விலகுவது மேலும் நல்லதல்லவா?

புது முகங்களுக்கு இடமளிக்கவேண்டும், கௌரவமான நிலையில் விலக வேண்டும் ஆகிய இரண்டும் எங்க

'பேசும் படம்'

தீபாவளி விசேஷ இதழ்

விலை ரூ. 1-4-0

★ 200-க்கு அதிகமான பக்கங்கள்
★ ஏராளமான வர்ணப படங்கள்
★ பல நூதன அம்சங்கள்

நவம்பர் மாத "பேசும் படம்" இதழ் தீபாவளி மலராக வெளிவருகிறது. சந்தாதாரர்கள் இதற்காக அதிகத் தொகை செலுத்த வேண்டியதில்லை. புது சந்தாதாரர்களுக்கும் தீபாவளி இதழ் அனுப்பப்படும்.

'பேசும் படம்' : : சென்னை-14

ளது இந்த யோசனைக்கு காரணமாக இருந்தன.

நாங்கள் ஏன் இனி படங்களில் நடிக்கப் போவதில்லை என்று சொல்லி விட்டோம். அடுத்தபடியாக உங்களிடமிருந்து "நீங்கள் இனி என்ன செய்யப் போவதாக உத்தேசம்?" என்ற கேள்வி நிச்சயம் கிளம்பும். அதற்கான பதிலையே இக்கட்டுரையின் முடிவுரையாகவும் அமைத்து விடுகிறோம்.

எங்களுக்கு முதன் முதலாகத் தேவைப்படுவது பூரண ஓய்வுதான். அந்த ஓய்வுக் காலத்திலேதான் எங்கள் எதிர்கால திட்டங்களைப் பற்றி யோசிக்கப் போகிறோம்.

ஆனால் நாங்கள் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடப் போவதாலும், படத்தயாரிப்பில் இறங்கவிருப்பதாலுமே இம் முடிவுக்கு வந்து விட்டதாக சிலர் வதந்தியைக் கிளப்பி விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இவை தவிர சமீபத்தில் சில தினசரிகளில் எங்கள் 'கடைசி நடனம்' என்பதாக விளம்பரம் செய்யப்பட்டிருக்கின்றன. இவை முற்றிலும் தவறான செய்தியைத்தான் வெளியிட்டிருக்கின்றன. நடன உலகிலிருந்து எங்களது ஓய்வு தற்காலிகமானதே என்பதை வலியுறுத்துகிறோம்.

மீண்டும் எட்டு வருஷங்களுக்குமுன் உங்கள் கவனத்தைத் திருப்புகிறோம். அன்று நாங்கள் படவுலகில் காலடி எடுத்து வைத்தபோது 'உங்கள் ஆதரவு எங்களுக்குத் தேவை' என்று நாங்கள் கோரினோம்.

"திருவாங்கூர் நடன சகோதரிகளுக்கு கலை ஆர்வமுள்ள ஒவ்வொரு இந்தியனும் ஆசி கூற வேண்டியது அவசியம்' என்று 'பேசும்-பட'மும் அன்று எழுதியது.

ஆம்; இன்று எட்டு வருஷங்களுக்குப் பின்னர் 'பேசும்-படம்' மூலமாக நாங்கள் மீண்டும் உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம், "உங்கள் ஆதரவும் அன்பும் தொடர்ந்து நிச்சயம் தேவை" என்று. அன்று கிடைக்கும் என்று நம்பினோம்; எங்கள் நம்பிக்கை வீண் போகவில்லை. அந்த நம்பிக்கை இன்றும் இருக்கிறது. நமஸ்காரம்!

எனது முதல் அனுபவம்

பிரம்மாண்டமான அந்த அரண்மனையின் அந்தப்புரத்தில் தாதியர்கள் புடைசூழ மகாராணி உட்கார்ந்திருந்தார். அவர் முன்னே ஓரே வேப்பிலை கொத்தும், குங்குமம்–விபூதியும், ஒரு தட்டில் எண்ணெயும் வைக்கப்பட்டிருந்தன. எதிரே சாம்பிராணி புகை அலை அலையாகச் சுருண்டபடி சென்று கொண்டிருந்தது. ராணியோ ஓரேயடியாகக் கத்திக்கொண்டு வெறியாட்டம் ஆடிக்கொண்டிருந்தாள். பாவம்! மண்டலாதிபதியின் மனைவியான அவளைப் பேய் பிடித்து விட்டது!

மகாராணியின் பேயை நீக்கும் பணியில் ஒரு மந்திரவாதி ஈடுபடுகிறான். அவனுக்கு ஏராளமான சிஷ்யர்கள். அந்த சிஷ்ய கோடிகளிலே ஒருத்திதான் நான்! என்னிடம் ராணியின் பேயை ஓட்டும் பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது!

எனக்கு குறத்திகள் அணிவது போல் விசித்திர உடைகள் அணிவித்திருந்தார்கள்.

பயங்கரமே உருவான அநத ராணியைப் பார்க்கும்போதே எனக்கு உடல் நடுங்கியது. தவிர, அன்றுதான் என் வாழ்நாளிலேயே நான் முதன் முதலாகக் காமிராவின் முன் நிற்கப் போகிறேன்! எனக்கு ஸெட்டுக்குள் நுழையவே பயமாயிருந்தது! அப்போதுதான் விஜயா புரொடக்ஷன்ஸ் பாகஸ்தர்களுள் ஒருவரான ஸ்ரீ சக்ரபாணி அவர்கள் என்னை நெருங்கி வந்தார்கள்.

"இன்றுதான் முதல் நாளா? பயப்படாமல் செய்!" என்று தைரியம் கூறினார். ஸெட்டிலே ஸ்ரீ நாகிரெட்டி அவர்களும் இருந்தார்கள். விசித்திர கோலத்தில் நான் மெள்ள ராணியின் முன் போய் நின்றேன். ஸ்ரீ கே. ராமச்சந்திரராவ் அப்படத்தை டைரக்ட் செய்து வந்தார். அவர் என்னை நடிக்கச் சொல்லி உத்தர விட்டார். ஸ்ரீ போலோ சுப்பராவ் காமிராவை ஓட விட்டார்.

நான் ராணியின்மீது குங்குமம், விபூதி இவற்றை அர்ச்சித்தேன்: வேப்பிலையால் தடவினேன். பின்னர் மெள்ள அவரிடம் "என்னையே பாருங்க ராணி!" என்று அவர் எதிரிலிருந்த தட்டைச் சுட்டிக் காட்டிச் சொன்னேன். நான் முதல் முதலாக உச்சரித்த வசனம் அதுதான்.

இந்தக் காட்சிதான் முதன் முதலாக என் படவாழ்க்கையில் படமாக்கப்பட்டது. இந்தக் காட்சி முடிந்ததுமே டைரக்டர் உட்பட எல்லோருமே என்னிடம் வந்து நான் நன்றாக நடித்திருப்பதாகச் சொன்னார்கள். அன்று பிற்பகல் இரண்டு மணி முதல் இரவு ஒன்பது மணி வரை படப்பிடிப்பு இருந்தது. அன்று எனக்கு மகிழ்ச்சி பிடிபடவே இல்லை. இரவு திரும்பி படுக்கையில் படுத்தவள் பல மணி நேரம் தூங்காமலேயே 'என் முதல்' அனுபவத்தை நினைத்து நினைத்து ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தேன்.

ஆமாம், இந்தக் காட்சி எந்தப் படத்தில என்று சொல்ல மறந்து விட்டது. 'மந்த்ர தண்ட'த்தில் தான் இக்காட்சி வருகிறது. நான் முதன் முதலில் நடிக்க ஒப்பந்தமானது 'நவ்விதே நவரத்னுலு' என்ற படத்திற்குத் தான் என்றாலும், முதன் முதலாக காமிராவின் முன் நின்றது ஞானாம்பிகாவின் 'மந்த்ர தண்டத்'திற்காகத்தான். எனக்கு இதிலே கொடுக்கப்பட்டிருந்த ஜிப்ஸி வேஷத்தை நான் மிகமிக விரும்பினேன்.

நான் நடித்த முதல் தினத்தில், முதல் 'ஷாட்டே' சரியாக அமைந்து விட்டது. இதிலேதான் எனக்கு பரம சந்தோஷம். முன்பின் படப்பிடிப்பையே பார்த்தறியாத, நடிப்புத் துறை

★ டி. கிருஷ்ணகுமாரி ★

யிலே அனுபவமற்ற என் முதல் நாளே குற்றமற்று—குறையற்று அமைந்து விட்டதில் எனக்கு மகிழ்ச்சி ஏற்படாமலிருக்குமா !

மந்த்ர தண்டத்திலே மந்திரவாதியாக லிங்கமூர்த்தியும், ராணியாக ஹேமலதாவும் நடித்தார்கள்.

ஒரே ஒரு விஷயம்; அதையும் விளக்கி விட விரும்புகிறேன். நான் முதல் நாள் காமிராவின் முன் நின்றதை விட தற்போதுதான் அதிகமாகப் பயப்படுகிறேன்! உங்களுக்கு இது விசித்திரமாகப் படலாம்!

அன்று முதல் நாள்; என்னைப்பற்றி ரஸிகர்களுக்கு அதிகம் தெரியாது; எனக்கு இத்தொழிலைப் பற்றி அதிகம் தெரிந்திருக்கவில்லை. ஆகவே நான் என் நடிப்பைப் பற்றி அதிகம் கவலைப்படவில்லை. இப்போதுதான் எனக்கு அதைப் பற்றி அதிகம் கவலை வந்து விட்டது! என்னைப் பற்றி ரஸிகர்களுக்கு இப்போது தெரியும். தொழிலைப் பற்றியும் எனக்கு ஓரளவுக்கு தெரிந்து விட்டதால் இப்பொழுது நான் காமிராவின் முன் நிற்கும் போதெல்லாம் "என் நடிப்பு நன்றாக அமைய வேண்டும்" என்று உண்மையிலேயே பயப்படுகிறேன்! இப்போது காரணம் புரிகிறதா !

பிரசித்தி பெற்ற 'வாஹினி'யிலே 'என் முதல் அனுபவம்' ஆனது பற்றி நான் பூரிப்புத்தான் அடைகிறேன்!


இந்தியாவின் தலை சிறந்த பட்டணம் பொடி
அதிகமணமுள்ளது..
ஆயாசம் தீர்ப்பது..
இன்பம் தருவது...
ஈடில்லாதது.....
உலகம் புகழ்வது.
ஊக்கமளிப்பது..
எதிலும் சிறந்தது.
ஏற்றம் கொண்டது.
ஐஸ்வரியம் போன்றது.
ஒளி நிறைந்தது.
ஓங்கி நிற்பது. ..
ஔடதம் போன்றது.
புகையிலையிலிருந்து பொடியாகும் வரை சகல கட்டத்திலும் சர்வாதக் கேறி புதுமணம் பூண்டு பொன்நிறம் கொண்டு உயர்குணம் பெற்று வெளிவரும்
REGISTERED TRADE MARK
T.A.S. ரத்தினம்
பட்டணம் பொடி
கபால் பெட்டி 1151 மதராஸ்

'என் மக'ளில் நம்பியாரும் மைனுவதியும்

கண்ணுக்கு தெரியும் நான்கு தோற்றங்களில் கண்ணுடியில் தெரியும் இரண்டும் பொய்- முகந் தெரியாத மற்ற இரண் டும் தான் மெய்.

வைத்யா பிலிம்ஸாரின் 'வைரமாலை'யில் ராகினி

ஜம்பனு-நந்தியின் 'குடும்ப'த்தில் சாவித்திரி

சுலோசனு பரமசிவம்

"மாங்கல்யம்" சுலோசனா

சென்னை திருவல்லிக்கேணி 1-ம் நம்பர் பஸ்ஸிலிருந்து பாரிஸ் செல்லும். இதே 1-ம் நம்பர் பஸ்தான மின்னல் வேகத்தில் முன்னேறி வரும் ராஜசுலோசனாவின் காதலுக்குக் காரணமாயிருந்தது! அந்த பஸ் ஸ்டாண்டு காதலைக் கல்யாணம் வரைக்கும் கொண்டு வந்து விட்ட பெருமையும் சென்னை பஸ்ஸையே சேரும்.

இந்த ராஜசுலோசனா காதலித்தவரையே கடிமணம் புரிய காரணமாயிருந்தது அவர் பிறந்த தேதிதான். ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி சுதந்திர தினமாகும்! சுலோசனா பிறந்ததும் அதே ஆகஸ்ட் 15-ம் தேதியாகையால் சுதந்திர உணர்ச்சியோடு நடந்து கொண்டு பரமசிவம் என்ற இளைஞரை-காதலரை மணந்து கொண்டார்! மாங்கல்யம் கட்டிக் கொண்ட இந்த ராஜசுலோசனாதான் 'மாங்கல்யம்' படத்தில் லக்ஷ்மியாக வந்து சக்கைபோடு போட்டிருக்கிறார்.

வாழ்க்கைச் சித்திரம்

தெலுங்கு நாயுடு வகுப்பைச் சேர்ந்த பி. பக்தவத்ஸலம் நாயுடு அப்போது சென்னை எம். எஸ். எம். (இப்போது தக்ஷிண ரயில்வே) ரெயில்வே ஆபீஸ் ஜெனரல் மானேஜரின் பிரதம உதவியாளராக வேலை பார்த்து வந்தார். அவர் பெங்களூரைச் சேர்ந்த தேவகி அம்மாளை மணந்தார். அவர்களது ஏகபுத்திரியாக 1936-ம் வருஷம் ஆகஸ்ட் 15-ல் பிறந்தார் ராஜசுலோசனா. தகப்பனார் சென்னையில் வேலை பார்த்து வந்தார். விஜயவாடாவில் மாமா வீட்டில் பிறந்த ராஜசுலோசனா சென்னைக்கு வந்தார். ஒரே குழந்தை. நாள் கழித்துப் பிறந்தது. செல்லம் கொடுத்து வளர்ப்பதற்குக் கேட்கவும் வேண்டுமா? அந்தச் செல்லம்தான் பிடிவாதத்தில் ஆரம்பித்து காதல் கல்யாணத்தில் முடிந்தது!

குழந்தை சுலோ பால பருவ சுலோசனாவானதும் பள்ளியில் சேர்க்கப்பட்டார். திருவல்லிக்கேணியில் ஸி. எஸ். எம். ஆரம்பப் பள்ளியில் சேர்ந்த சுலோசனா அங்கு ஐந்தாவது வகுப்பு வரை படித்தார். தாய் மொழி தெலுங்கானாலும் தமிழில் நல்ல ஆர்வமும் உற்சாகமும் காட்டிப் படித்தார். ஆரம்பப் படிப்பு முடிந்ததும் திருவல்லிக்கேணி தேசிய பெண்கள் உயர்தரப் பாடசாலையில் ஆறாம் வகுப்பில் சேர்ந்தார். அப்போதே அவருக்கு நாடகத்தில் கொஞ்சம் ஆசை ஏற்பட்டது. இருந்தாலும் வீட்டாரிடம் பயந்து கொண்டு அந்த ஆசையை உள்ளடக்கிக் கொள்ள முயன்றார். அவர் இரண்டாம்பாரம் படிக்கும் போது ஒரே ஒரு முறை தெலுங்கு நாடகம் ஒன்றில் நடித்தார். அவ்வளவுதான். அவரது மனம் நாடகத்தில் போகாமலிருக்க வேண்டுமென்பதற்காகவோ என்னவோ, அவரது பெற்றோர் அவருக்கு வயலின் சிக்ஷை சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்தனர். ஆனால், ஏனோ சுலோசனாவுக்கு வயலின் கற்பதில் சிரத்தை யிருக்கவில்லை. இதற்கிடையே பள்ளிப் படிப்பும் வீட்டுச் செல்லமும் அவருக்குத் தைரியத்தை வரவழைத்திருந்தன.

அன்று வீட்டில் ஏதோ விசேஷம். தேவகி அம்மாள் பக்ஷணங்களைத் தயார் செய்வதில் ஈடுபட்டிருந்தார். பள்ளியிலிருந்து திரும்பிய சுலோசனா அவரிடம்வந்து மெதுவாக, "அம்மா!" என்றார். "என்னம்மா?" என்று வாஞ்சையோடு கேட்டார் தாயார். "ஒன்



ணுமில்லேம்மா'' என்று மென்று விழுங்கியபடி சற்று தள்ளிப் போய் நின்று கொண்டார் சுலோசனு. அம்மா அடிக்கப் போகிருர்களே என்ற பயம்! அங்கிருந்தபடி "அம்மோவ்'' என்ருர் மீண்டும். "என்ன என்றுதான் சொல்லேன், பூர்வபீடிகை போடாமல்'' என்ருள் தாய். "நானு... நானு...டான்ஸ் கத்துக்கப் போறேம்மா!'' என்று கூறி நிறுத்திவிட்டு அம்மாவையே உற்றுப் பார்த்தார் சுலோசனு. அம்மா விடுவிடென்று பக்தவத்ஸலு நாயுடுவிடம் போனுர். ராஜசுலோசனுவுக்கு நடனம் கற்றுத் தருவதென்ற முடிவுக்கு வந்தனர். ஒரே பெண்ணைப் பெற்ற பெற்ரோர்.

1947-ம் வருஷம் சரஸ்வதி கான நிலையத்தில் பரதநாட்டியம் கற்க ஆரம்

பித்தசர் சுலோசனு. பள்ளிப் படிப்பும் நடனமும் சேர்ந்தே நடந்தன. சுமார் இரண்டே வருஷங்களுக்குள் 'சுலோசனுவை ஒரு தேர்ந்த நடன மணியாக்கி விட்டது சரஸ்வதி கான நிலையம். இதனிடையே நடனப்பள்ளியோடு ஏராளமான நடன நிகழ்ச்சிகளில் சுலோசனு பங்கு கொண்டார். இரண்டு வருஷங்களுக்குள் தேர்ந்த நடன மணியாகி பள்ளியின் நடனப் பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறிய சுலோசனுவின் சம்பிரதாய அரங்கேற்றம் 1949-ம் வருஷம் ஜூன் ாதம் 18-ம் தேதி சங்கீத கலாநிதியும் சுப்ரீம் கோர்ட் நீதிபதியுமான டி. எல். வெங்கட்ராமய்யர் அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. வெங்கட்ராமய்யர் அவர்கள் அந்த விழாவில் முதல் வகுப்பில் தேறிய சுலோசனுவைப்

பாராட்டி ஆசீர்வதித்தார்கள். இதனிடையே அவருக்கு வீணையிலும் ஆசையில்லாததால் அதையும் ஆரம்பித்த வேகத்தில் நிறுத்திக் கொண்டு விட்டார். நடனத்தில் இருந்த ஆசை பள்ளிப் படிப்பில் கூட இல்லை.

படிப்பை நிறுத்தி நடனத்தை அபிவிருத்தி செய்து கொள்வது எப்படி என்று யோசித்தார். அம்மாவிடம் போனார். "ஏம்மா! நான் படிச்சு பாஸ் பண்ணி என்னம்மா செய்யப் போறேன்? எனக்கு பள்ளிக்கூடம் போக வெக்கமா இருக்குதம்மா!" என்று சொன்ன பெண்ணைப் பார்த்தாள் தாய். "சரி, அதுக்கும்தான் வயசாயிட்டுதே. ஏதுக்கு வூட்டை விட்டு வெளியே போவணும்?" என்று பொது உத்திரவு போட்டு விட்டார்.

மூன்றும் பாரத்துடன் சுலோசனாவின் பள்ளிப் படிப்பு நின்றது. நடனப் பள்ளிக்குப் போவதையும் நிறுத்திக் கொண்டு வீட்டிலேயே சாதகம் செய்ய ஆரம்பித்தார்.

தன்னுடன் பள்ளியில் நடனம் கற்ற ஆர். லலிதா என்பவருடன் சேர்ந்து ராஜகோபால் என்ற மிருதங்கக்காரரிடம் ஓரியண்டல் நடனம் பயின்றார். இருவரும் பிறகு நடன ஆசிரியர் மூர்த்தியிடம் பயின்றனர்.

வீட்டிலேயே சுமார் பத்து பெண்களுக்கு நடனம் சொல்லிக் கொடுத்து வந்தார் சுலோசனா. அத்துடன் டவுனில் ஒரு சிஷ்யையும் கிடைத்தது. அரண்மனைக்கார தெருவிலுள்ள அந்த சிஷ்யைக்கு நடன பாடம் கற்பிக்கச்



செல்லும் பஸ் பிரயாணி ராஜசுலோசனுவுக்குக் காதல் பாடம் கற்பிக்க வந்து சேர்ந்தார் பரமசிவம்! தஞ்சாவூரில் பிள்ளைமார் வகுப்பைச் சேர்ந்தவர் பரமசிவம். ஐந்தாம் பாரம் வரை படித்தவர் அவர். ஏவி. எம். பிரகதி ஸ்டூடியோவை தஞ்சாவூர் கந்தசாமி பிள்ளை என்பவருக்கு விற்ற போது தஞ்சை ஆட்கள் பலர் அங்கு வேலைக்கு வந்தனர். பரமசிவம் ஸ்டோர் கீப்பராக வந்து சேர்ந்தார். அதற்கு முன் ராணுவத்தில் வேலை செய்து வந்த அவருக்கு ஸ்டோர் கீப்பர் உத்தியோகம் கொஞ்சம் அகௌரவமாகப் பட்டிருக்கலாம். இருந்தாலும் அந்த உத்தியோகத்தில் அவரிடம் ராணுவ கண்டிப்பு இருந்ததை முதலாளி வரவேற்றுர். சுமார் மூன்று வருஷ காலம் அதிலிருந்த பரமசிவம், பிரகதி மூடப்பட்டதும் வெளியேறி நேஷனல் பிக்சர்ஸில் கௌரவ பிரதிநிதியாக இருந்தார். ஆமாம், அதற்காக அவர் சம்பளமே வாங்கவில்லை! அப்போது திருவல்லிக்கேணியிலிருந்த பரமசிவம் சுலோசனு ஏறும் பஸ்ஸுக்காகக் காத்திருந்து, பாரிஸ் செல்லும் 1-ம் நம்பர் பஸ்ஸில் ஏறிநைநனியப்பன் தெருவுக்குச்செல்ல ஆரம்பித்தார். ஊரில் எல்லோரும் புழுங்கித் தவித்தபோது அவர்களிடையே மட்டும் தென்றல் வீசியது! பஸ்தூது சென்றது. காதல் கனிந்தது!

சுலோசனு குலம் விட்டுக் குலம் மணக்க விரும்பியபோது வீட்டார் முதலில் ரொம்பவும் மனமுடைந்து போனுர்கள். ஆனுல், ஒரே பெண்; அவள் வாழ்க்கையை அவளே நிர்ணயித்துக் கொள்வது நியாயம் என்றுணர்ந்து பின்னர் மகிழ்ச்சியோடு சம்

மத மளித்தனர். 1951-ம் ஹு செப்டம்பர் மாதம் 11-ம் தேதி சென்னை செயின்ட் மேரீஸ் ஹாலில் மு. கருணாநிதி தலைமையில் தெலுங்கு நாயுடு வகுப்பைச் சேர்ந்த ராஜசுலோசனாவுக்கும் கே. பரமசிவம்பிள்ளைக்கும் சீர்திருத்த திருமணம் நடைபெற்றது. மதியழகன், அரங்கண்ணல் ஆகியோர் மணமக்களை வாழ்த்தியும் கலப்பு மணத்தின் அவசியம் பற்றியும் பேசினர். திருமணம் நடக்கும் போது "குணசாகரி" படத்தில் நடித்துக் கொண்டிருந்தார் சுலோசனா.

நடனத்தில் ஆர்வம் கொண்டிருந்த சுலோசனாவுக்குப் பட உலகில் சந்தர்ப்பம் பெற்றுத் தரக் காரணமாயிருந்தவர் நடன ஆசிரியர் மூர்த்திதான். டைரக்டர் எச். எல். என். சிம்ஹா அப்போது மூர்த்தியுடன் ஒரே அறையில் தங்கியிருந்தார். மூர்த்தி சிபாரிசு செய்யவே சிம்ஹா 1951 ஜனவரி 8-ம் தேதி சுலோசனாவிடம் வந்து கமலா என்ற பாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தம்

செய்து கொண்டார். ஏவி. எம்., குப்பி கர்னுடைகாவின் கூட்டுத் தயாரிப்பான குணசாகரி தமிழில் சத்யசோதனை என்ற பெயரில் வெளிவந்தது. அப்போதே அவரது நடிப்பில் திருப்தியடைந்த ஸ்ரீவள்ளி புரொடக்ஷன்ஸார் அவருக்குச் சந்தர்ப்பமளிக்க விரும்பினர். அதன் பலனுக "வேலைக்காரன்" படத்தில் சுலோசனுவுக்கு நடனமாடச் சந்தர்ப்பம் கிடைத்தது.

அடுத்ததுதான் நேஷனல் பிக்சர்ஸ் 'பராசக்தி'. சுமார் இரண்டாயிரம் அடிவரை சுலோசன நடித்த காட்சிகள் படமாக்கப்பட்டன. சுலோசன அப்போது கர்ப்பமுற்றிருந்தார். சந்திரசேகரனின் மனைவியாக 'பராசக்தி'யில் நடித்து வந்த அவரால் தொடர்ந்து நடிக்கமுடியவில்லை. அதனுல் அவருக்குப் பதில் சுசீலா அந்தப் பாத்திரத்தில் நடித்தார். இடையே சிறிது ஓய்வு பெற்றபின் மினர்வா பிக்சர்ஸ் தயாரித்த 'சித்ராங்கி' படத்தில் நடித்தார். சுலோசனவும் சாரங்கபாணியும் நடிக்கும் கட்டம் சுமார் ஐயாயிரம் அடி



ஷன் மானேஜராக இருந்த ரகுவீர், சுலோசனாவுக்குச் சந்தர்ப்பம் வாங்கிக் கொடுத்தார். மறு மாதமே மாடர்ன் தியேட்டர்ஸார் சுலோசனாவை மூன்று படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

வரை படமாக்கப்பட்டது. ஆனால், அதற்குள் படமுதலாளி காலமாகி விட்டதால் அப்படம் பப்படமாகி விட்டது. பட உலக சம்பந்தம் அற்றுப் போய் விடுமோ என்று நினைத்தார் சுலோசனா. 'வேலைக்காரன்' படத்தில் மாதுரிதேவியுடன் நடனமாடிய சுலோசனாவைப்பற்றி அப்படக் கதாநாயகன், டி. ஆர். மகாலிங்கம் அறிந்திருந்தார். ஆகவே அவர் தயாரிப்பு-டைரக்ஷன்-நடிப்பு பொறுப்புகளோடு தயாரித்த 'சின்னதுரை'யில் சுலோசனாவுக்கு நடனமாடச் சந்தர்ப்பமளித்திருந்தார். அப்போதுதான் என். எஸ். கிருஷ்ணன் "மானத்தோடு வாழ்வோம்" என்ற நாடகத்தை நடத்தி வந்தார். மு. கருணாநிதி எழுதிய அந்த நாடகத்தில் டி. ஏ. மதுரம் நெல்லாகவும் சுலோசனா கரும்பாகவும் நடித்தனர். சென்னை மியூஸியம் தியேட்டர், திருச்சி தேவர்ஹால், பாண்டமங்கலம் முதலிய இடங்களில் அந்த நாடகம் நடைபெற்றது. சுலோசனாவுக்கு ரசிகர்களிடமிருந்தும் என். எஸ். கே. குழுவினரிடமிருந்தும் பிரமாதமான பாராட்டு கிடைத்தது.

பட உலகில் புகுந்து முதலில் நடித்தது கன்னடப் படம். பிறகு தகுந்த சந்தர்ப்பம் பெற்றது தெலுங்குப் படத்தில். 1952-நவம்பர் 19-ம் தேதி 'பெற்ற தாய்','கன்னதல்லி' படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டார் சுலோசனா. ஏவி. எம்.மிலிருந்து விலகி பிரகாஷ் புரொடக்ஷன்ஸில் புரொடக்

இனி வரும் மாடர்ன் தியேட்டர்ஸ் படங்களில்தான் சுலோசனா நடிக்கக் கூடும். 'மனிதன்' படத்தில் குமாரி கமலாவுடன் (சாமியாராக) நடனமாடினார் சுலோசனா. அடுத்து பிரசாத் ஆர்ட்பிக்சர்ஸின் 'பெம்புடுகொடுகு' தெலுங்குப் படத்தில் நடனமாடினார். 'பெற்ற மனம்' தமிழ் படத்தில் நடித்தார். பெற்ற மனம் திரையிடப்படவேயில்லை. ஆந்திர நாட்டில் திரையிடப்பட்ட 'பெம்புடு கொடுகு' படத்தில் ராஜசுலோசனாவின் நடனத்திற்குப் பிரமாதமான பாராட்டு கிடைத்தது.

தெலுங்குப் படங்களில் சுலோசனா மிகவும் புகழ்பெற்றது சாரதி பில்ம்ஸாரின் 'அன்தா மனவாள்ளே'யில்தான். ரங்க ராவ் வில்லனாகவும் சுலோசனா வில்லியாகவும் நடித்தனர். அதில் சுலோசனா ஒரு பரதநாட்டியமும் ஆடினார். ஆந்திர நாட்டில் மகத்தான வெற்றிபெற்ற அப்படம் 'சமூகத் துரோகிகள்' என்ற பெயரில் தமிழ் விளக்கத்துடன் திரையிடப் பட்டது. கிருஷ்ண குமாரி, ஜமுனா, ஸி. எஸ். ஆர். முதலியோரும் நடித்த அப்படத்தை தாபிசாணக்கியா டைரக்ட் செய்தார். அந்தப் படத்தில் சுலோசனா நடிப்பதை முதலில் முதலாளி விரும்பவில்லை. ஆனால்,சாணக்கியாவின் உறுதியின் பேரில் நடிக்கச் செய்தார். பிறகு தெலுங்கை அழகாகப் பேசி அருமையாக நடித்த சுலோசனாவை அவர் மிகவும் பாராட்டினார்.

ஸ்ரீராம் முயற்சியில் கோவையில்

உருவான நவஜீவன் புரொடக்ஷன் ஸாரின் படத்தில் நடிக்க சுலோசனு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டார். அவர் கதாநாயகியாகவும் சந்திரபாபு கதாநாயகனுகவும் நடித்த அப்படம் சுமார் ஐயாயிரம் அடி வளர்ந்து நின்று விட்டது. ஸ்ரீராம், ஜி. வரலக்ஷ்மி இருவரும் அதில் நடிக்க விருந்தனர். ஆனாலும் சுலோசனு இதற்காகக் கோவை சென்ற பிறகுதான் அவருக்குக் கோவை வாசமும் பல படங்களுக்கான சந்தர்ப்பமும் கிடைத்தன.

அப்போது சங்கீதா பிக்சர்ஸார் 'நால்வர்' படப்பிடிப்பில் ஈடுபட்டிருந்தனர். சுலோசனுவுக்கு அதில் நடனமாடச் சந்தர்ப்பமளித்தனர். குப்பி கர்னுடகா புரொடக்ஷன்ஸார் "பேடர கண்ணப்பா' என்ற கன்னடப் படத்தைத் தயாரித்தனர். சுலோசனு நிறைய சந்தர்ப்பங்களுடன் அருமையாகவும் நடித்த கன்னடப் படம் இது தான். ஹொன்னப்ப பாகவதர், பண்டரிபாய் முதலியோர் நடித்த இப்படம் மைசூரில் இன்னும்கூட வெற்றிகரமாக ஓடுகிறது. பின்னர் ஏவி. எம். "பெண்'ணில் வைஜயந்திக்கு எதிராக ஆண் வேஷத்தில் நடனமாடினுர் சுலோசனு. ஆனல், பல காரணங்களை முன்னிட்டு பின்னர் வைஜயந்தி ஆண்-பெண் இருபாகத்தில் நடனமாடி படமாக்கப்பட்டது. அப்போது மாதுரியின் மதராஸ் ஆர்ட் புரொடக்ஷன்ஸார் தயாரித்து வந்த "ரோஹிணி"யிலும் நடன மாடினுர் சுலோசனு.

அதுவரை பல படங்களில் நடித்தாலும் சுலோசனு ஒரு நிரந்தர நடிகை ஸ்தானத்தையோ நடனமணி ஸ்தானத்தையோ அடைய முடியவில்லை. ரோஹிணிக்குப்பின் கோவை சென்டிரலில் தயாராகும் ஈஸ்வர் புரொடக்ஷன்ஸ் "மனச்சாட்சி" மலையாளப்படத்தில் கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தமானுர் சுலோசனு. ஆரம்பத்தில் குமரேசன் அதில் கதாநாயகனுக நடித்தார். தற்போது அவருக்குப் பதில் பிரேம்நஸீர் நடித்து வருகிருர். அவரையும் சுலோசனுவையும் கதாநாயக—நாயகிகளாகக் கொண்ட அப்படத்தில் கொட்டாரக்கரை ஸ்ரீதரன் நாயர், எஸ். பி. பிள்ளை, ஓமனு முதலியோர் நடிக்கின்றனர். ஜி. விஸ்வநாத்தின் டைரக்ஷனில் தயாராகும் இப்படம் தற்போது சென்டிரல் ஸ்டூடியோவின் பொறுப்பிலிருக்கிறது. ஓணம் பண்டிகையின்போது 'மனச்சாட்சி' திரையிடப்படுமாம்.

சுலோசனுவின் நெருங்கிய உறவினர், எம். ஏ. வி. பிக்சர்ஸாரிடம் சுலோசனுவை அறிமுகப்படுத்தி சிபாரிசு செய்தார். அதன் பலனுக "மாங்கல்யம்" தமிழ்ப் படத்தில் லக்ஷ்மி என்ற பிரதான பாத்திரத்தை ஏற்று நடிக்கும் வாய்ப்பு சுலோசனுவுக்குக் கிடைத்தது. "சுலோசனு என்ற இளம் நடி ஒருவர் இருக்கிருர். அவர் எந்தப் பாத்திரத்தையும் தாங்கி அனுயாசமாக நடிக்கும் ஆற்றல் பெற்றவர்" என்பதை அறிவுறுத்தியது மாங்கல்யம் படம்தான். தாயிடம் தான் மண விஷயத்தைச் சொல்லும் கட்டத்திலும், காதல் பேசும் 'பட்டணத்தா'ரிடம் கொஞ்சும்போதும் ஒரு கபடற்ற அடக்கமான கிராமாந்திர குடும்பப் பெண்ணுக அருமையாக நடித்தார் சுலோசனு. ஏ. பி. நாகராஜன், எம். ஏ. வேணு இருவரும் சுலோசனுவின் திறமையைப் பரிமளிக்கச் செய்வதில் பெரிதும் பாடுபட்டனர். அதற்குப்பின் சுலோசனு 'கற்கோட்டை'யில் நடனமாட ஒப்பந்தமானுர். ஆனல், கற்கோட்டை முன்னதாக வெளியாகியது.

சுலோசனு நடித்து பாராட்டப் பெற்ற படங்கள் அன்தாமனவாள்ளே, பேடர கண்ணப்பா, மாங்கல்யம் இவைகளாகும். தமிழ், தெலுங்கு, மலையாளம் கன்னடம் ஆகிய நான்கு பாஷைப் படங்களிலும் அவர் நடித்து விட்டார். தற்போது டைரக்டர் பத்மனுபனின் 'எல்லாம் இன்பமயம்' படத்தில் ஜெமினி கணேஷ், சிவதாணு முதலியோருடன் சுலோசனு நடித்து வருகிருர். பேடர கண்ணப்பா தெலுங்கில் கே. மாலதியைக் கதாநாயகியாகக் கொண்டு 'காளஹஸ்தி மகத்துவம்' என்ற பெயரில் தயாராகிறது. அதில் இரண்டாவது கதாநாயகியாக சுலோசனு நடிக்கிருர். விக்டரி பிக்சர் ஸாரின் 'ஆவதும் பெண்ணுலே' படத்தில் ருக்மிணியோடு சுலோசனுவும் பிரதான பாகத்தில் நடிக்கிருர். ஜனதா பிக்சர்ஸார் தெலுங்கில் தயாரித்து வரும் 'பரிவர்த்தனு'வில் சுலோசனு நடித்தார். ஆனல், சுரபி பால சரஸ்வதியை நீக்கி சுலோசனுவை ஏற்பாடு செய்த தயாரிப்பாளர்கள் மீண்டும் சுலோசனுவுக்குப் பதில் பால சரஸ்

வதியை ஏற்பாடு செய்து விட்டார்கள்! பம்பாய் கிதார் ஆர்ட் பிக்சர்ஸின் படத்திலும் சுலோசனா நடித்து வருகிறார்.

மைசூர் மகாத்மா பிக்சர்ஸாரின் 'கந்தர்வ கன்யா' கன்னடப் படத்தில் சுலோசனா கந்தர்வ கன்னிகையாக நடித்து வருகிறார். அப்படத்தின் நடன டைரக்ஷனையும் அவரே கவனிக்கிறார். லலிதகலா பிலிம்ஸாரின் 'கவிரத்ன காளிதாஸ்' கன்னடப் படத்தில் ஹொன்னப்ப பாகவதருடன் நடித்து வருகிறார் சுலோசனா. அதன் தயாரிப்பாளரும் ஹொன்னப்ப பாகவதர்தான்.

எஸ். ஏ. நடராஜனின் முயற்சியில் உருவாகியிருக்கும் கோவை பார்வேட் ஆர்ட் பிக்சர்ஸாரின் 'நல்ல தங்கை' படத்தில் நடராஜன், மாதுரிதேவி, நம்பியார், ஏழுமலை, ஏ. கருணாநிதி ஆகியோருடன் சுலோசனாவும் நடித்து வருகிறார். ஏ. பி. நாகராஜன் கதை–வசனம் எழுதும் படம் இது. இவை தவிர, எம். ஏ. வி. பிக்சர்ஸாரின் 'பெண்ணரசி', 'டவுன்பஸ்' இரு படங்களிலும் சுலோசனா நடித்து வருகிறார்.

சுலோசனாவுக்கு 'கலையழகன்' என்ற புனைப் பெயர் கொண்ட ஷ்யாம்சுந்தர் என்ற ஆண் குழந்தை இருக்கிறது. இந்தக் குழந்தைக்கு நாளைய 5-ம் தேதி இரண்டு வருஷம் ஆகிறது. படங்களில் நடிக்கும் நேரம் போக மிகுதி ஓய்வு நேரங்களில் பரதநாட்டியம் ஆடிப் பழகிக் கொள்ள நினைக்கும் சுலோசனாவை தடுத்து ஆட்டி வைக்கிறான் இந்தக் கலையழகன்! தையல் வேலை, புத்தகம் படிப்பது, கணவன் குழந்தையோடு தினசரி உலாவச் செல்லுதல் இவைதான் மிகவும் பிடித்தமான பொழுது போக்குகள் சுலோசனாவுக்கு. அவர் அனேகமாக எல்லாப் படங்களையுமே பார்க்கிறார். தமிழ், தெலுங்கு இரு பாஷைகளையும் எழுதப் படிக்கத் தெரியும் அவருக்கு. கன்னடம் படிப்பார்; பேசுவார்; எழுத வராது. மலையாளம் நன்றாகப் புரியும். கேள்வி ஞானத்தைக் கொண்டுதான் பாடம் செய்து 'மனச்சாட்சி'யில் நடித்தார்.

கார் ஓட்டுவது என்றால் சுலோசனாவுக்கு ரொம்பப் பிடிக்கும், ஆக்ஸிலேடரில் காலை அழுத்த அழுத்த கார் காற்றாய்ப் பறப்பதைக் கண்டு அனுபவிப்பதில் அலாதி இன்பம் காண்கிறார் அவர்! காதல் மணம் செய்து கொண்ட சுலோசனாவுக்கு பிரம்மச்சாரிப் பிள்ளையாரிடம்தான் அபார பக்தி. வெள்ளிக்கிழமை தவறினாலும் தவறும், சுலோசனா பிள்ளையார் கோவிலுக்குப் போவது தவறாது. கிராமப் பெண்ணாக நடித்த சுலோசனாவுக்கு நிஜவாழ்க்கையிலும் கிராம வாழ்க்கையே ரொம்பவும் பிடிக்கும். ஆறு, குளம் இருக்கும் தஞ்சையில் அதற்காகத்தான் நிலம், வீடு எல்லாம் வாங்கியிருக்கிறார் போலும்! கிரிக்கெட் ஆட வேண்டுமென்று கொள்ளை ஆசை, சுலோசனாவுக்கு.

பத்தொன்பதாவது வயதை அடைந்திருக்கும் ராஜசுலோசனா பருவத்தின் சோபையுடன் வாளிப்பான உடற்கட்டும் பெற்றிருக்கிறார். சிவந்த நிற மேனியும் கவர்ச்சிகரமான தோற்றமும் கொண்ட ராஜ சுலோசனா சுமார் ஐந்தேகாலடி உயரம் உள்ளவர். துருதுருவென்றிருக்கும் அவரது சுபாவமும் கள்ளங் கபடமற்ற உள்ளமும் யாவரையும் கவர்ந்து விடும். சரளமாகப் பழகும் தன்மையும், அடக்கமும் கொண்ட ராஜசுலோசனா சதா கலகலவென்று பேசுவார்.

திறமையின் மூலம் மின்னல் வேகத்தில் முன்னணிக்கு வந்துவிட்ட ராஜ சுலோசனா ஒரு அடக்கமான குடும்பப் பெண்; பட உலகிற்குக் கிடைத்த பரிசு.

— எஸ். வி. ஸம்பத்குமார்.

ஏ. டி. எம். தோழனில்
ஒரு புது முகம்.

காட்சி 1

நாடோடி வாழ்க்கை நடத்தும் ராணி தன் நாட்டியத்தினுல் கூடியிருந்த கும்பலின் கவனத்தைக் கவர்ந்து விடுகிருள். பிக்பாக்கெட் அடித்த ராஜாவும் நின்று நாட்டியத்தை ரஸிக்கிருன். நாட்டியம் முடிந்து கூட்டம் கலைந்து செல்கிறது. ராணியும் அவள் வயோதிகத் தந்தையும் நாட்டியம் ரஸித்த ரஸிகர்கள் போட்டுச் சென்ற சில்லறைகளை சேகரிக்கின்றனர். ராஜா அவர்களை நெருங்குகிருன்.

ராஜா : நீங்க எங்கே தங்கி யிருக்கீங்க?

கிழவன் : நௌரோஜி தோட்டத்திலே குடிசை போட்டிருக்கிரும் பாபு.

ராணி : எங்க விலாசத்தைப்பத்தி உனக்கென்னய்யா அக்கறை?

ராஜா : ஏன், தெரிஞ்சுக்கப் படாதோ?

கிழ : கோவிச்சுக்காதிங்க பாபு, சின்ன பொண்ணு.

ராஜா : சரி தாத்தா ... மன்னிச்சுட்டேன்.

ராணி : அப்பா. இவரு நான் டான்ஸ் ஆடிக்கிட்டிருக்கும் போது...

ராஜா : அப்படியே மெய்மறந்து ரஸிச்சுக்கிட்டிருந்தேன். ரொம்ப ஜோர் — ரொம்ப ஜோர், இந்தா...!

ராஜா ராணியிடம் ஒரு ரூபாய் கொடுக்கிருன்.

ராணி : தூ......

ராஜா : வேணுமா...போயேன்... இந்தா தாத்தா!

கிழவன் அதை வாங்கிக் கொள்ளுகிருன்.

கிழ : நீங்க மகராஜனு இருக்கணும் பாபு!

ராஜா : சும்மா மனுஷனுவே இருந்தா போதுமய்யா!

ராணி : அப்பா, அதை திருப்பிக் கொடுத்துடுங்க. அந்த நோட்டு...

கிழ : புது நோட்டுதான் குழந்தை ...பாபு பெரிய மனுஷன்.

ராணி : ஆமா ஆமா...பெரிய மனுஷர் எல்லாம்!

ராஜா : நான் போயிட்டு வரேன் தாத்தா...

கிழவன் ராணியுடன் கிளம்புகிருன்.

பாத்திரங்கள்

டி. கே. ஷண்முகம்	ராஜா
டி. கே. பகவதி	ரகு
டி. எஸ். பாலய்யா	மது
அஞ்சலிதேவி	ராணி
வித்யாவதி	மனேரமா

டைரக்ஷன் :
ஆர். எஸ். மணி

திரைக்கதை, வசனம் :
ஸ்ரீதர்

காட்சி 2

பம்பாயிலுள்ள பிரான்ஞ் சைக்கிள் கம்பெனியின் மானேஜர் மதுவுக்கு சென்னையிலிருந்து கம்பெனி முதலாளி ரகு, கம்பெனி கணக்குகளைப் பார்வையிட வரப்போவதாகக் கடிதம் எழுதுகிருர். வேலையாள் நந்தி அதை போஸ்ட்மேனிடமிருந்து வாங்கி மதுவிடம் கொடுக்கிருன்.

மது : மகா

தொந்திரவு, மகா தொந்திரவு!

அவன் காதலி மனோரமா வருகிறாள்.

மனோ: ஏன்? என்ன?

மது: மெட்ராஸிலிருந்து ஆள் வருதாமே! உம்.

மனோ: எதுக்கு வருதாம்?

மது: கணக்கெ செக் பண்ணுவதற்கு.

மனோ: இவ்வளவுதானே? செக் பண்ணினால் பண்ணிக்கிட்டுப் போகட்டுமே!

மது: பண்ணிட்டுப் போகட்டுமா...கணக்கைப் பார்த்தாயா? கம்பெனிப் பணம் ஐம்பதாயிரம் எங்கே இருக்கு? என் காதலி மனோரமாவின் காதிலும் கழுத்திலும் ஜொலிக்குது அந்தப் பணம். அதனுடைய கணக்கு இருக்குது பாரு, எங்கே கொண்டு போய் எழுத...?

மனோ: ம்... இவ்வளவு தானா? என்னமோ பெரிய விஷயம்னு நெனைச்சேன்.

மது: பெரிய விஷயமில்லை. அந்தக் கணக்கை அட்ஜஸ்ட் பண்ணறதுக்குள்ளே வந்து தொலையுறானே... அதுதானே பயப்படுறேன்.

மனோ: ஆமா, யார் வர்ரது? மேனேஜரா, ஆடிட்டரா?

மது: ஆடிட்டருமில்லே...மானேஜருமில்லே...முதலாளி ரகுதான்.

மனோ: ம்...முதலாளி ரகுவேவா?

காட்சி 3

சைக்கிள் கம்பெனி முதலாளி ரகு, பம்பாய் பிராஞ்ச் கம்பெனி கணக்குகளைப் பார்வையிட பம்பாய்க்குக் கிளம்பிக் கொண்டிருக்கிறான்.

சரளா: இந்தா பாருங்கோ, திங்கட்கிழமை திரும்பி வந்திடணும்.

ரகு: பின்னே, புதன்கிழமை மோகனுக்கு பிறந்த நாளாச்சே, கண்டிப்பா வந்துடுவேன்.

சர: என்னுங்க, நம்ம ராஜாவுக்கு இங்கே கிடைக்காததா அதிசயமா வாங்கி வாருங்கோ..

ரகு: பம்பாயிலிருந்து உனக்கு என்ன வாங்கிவரட்டும் சரளா? இன்னொரு சின்ன பாப்பா வாங்கி வரட்டுமா?

சர: நீங்க சீக்கிரமா வந்தா அதுவே போதும்!

ரகு வீட்டைவிட்டுக் கிளம்பும்போது தானும் தன்சகோதரன்ராஜாவும் சிறு வயதில் எடுத்துக் கொண்ட புகைப்படத்தை ஓர் வினாடி உற்றுப்

பார்க்கிருன்.

சர: ஏன் உங்க தம்பி படத்தை அப்படிப் பார்க்கிறீங்கோ ?

ரகு: பாவம், என் தம்பி எங்கே இருக்கானே?

விடை பெற்றுச் செல்கிருன் ரகு.

காட்சி — 4

பம்பாய் சென்றதும், பிராஞ்ச் மானேஜர் மது ரகுவை வரவேற்கிருன். தன் காதலி மனேரமாவை, ரகுவிடம் தன் சகோதரி என்று கூறி அறிமுகப்படுத்துகிருன்.

மது: இவள் எனக்கு ஒரே ஸிஸ்டர்.

ரகு: ஆஹா...

மது: ஆமா...பீ.ஏ. பாஸ் பண்ணியிருக்கா. ஆடுவா, பாடுவா, ரொம்ப ஸோஷியலா...

ரகு: ஓகோ...

மது: ஆமா,

மனே: போ அண்ணு.

ரகு: மிஸ்டர் மது, கம்பெனி கணக்கெல்லாம் இன்னிக்கே செக் பண்ணிடலாம்னு நினைச்சுக்கிட்டு இருக்கேன்.

மது: கணக்கா, இன்னைக்கா, சரி ஸார்!

ரகு: ஆமா...நான் தங்கறதுக்கு எந்த ஓட்டலிலே ஏற்பாடு பண்ணியிருக்கீங்க?

மனே: ஓட்டலா? நல்லாருக்கு, சொல்லண்ணு!

மது: நம்ப வீட்டிலேயே ஏற்பாடு பண்ணிட்டேன்.

ரகு: ஆ...உங்க வீட்டிலேயா?

மது: ஆமா.

மனே: ஏன், நானும் அண்ணுவும் மட்டும்தானிருக்கோம். உங்களுக்கு ஒண்ணும் அக்ஷேபனை இல்லையே?

ரகு: எனக்கு ஒண்ணும் ஆக்ஷேபனை இல்லை.

மது: அப்படியானு ரொம்ப தாங்ஸ்.

காட்சி 5

ராணியைச் சந்திக்க அவள் இருப்பிடம் தேடிவரும் ராஜா, அவள் தந்தை திடீரென்று மோட்டார் விபத்துக்குள்ளாகிவிட்டதை யறிந்து, பதறித்துடிக்கும் ராணிக்கு ஆறுதல் கூறி, அவள் கிழத்தந்தையைக் காப்பாற்றும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளுகிருன்.

ராணி: டாக்டர், ஆஸ்பத்திரியிலும் இடம் கிடைக்கில்லே. இந்த நிலைமையிலே இப்படி ஆபத்

ராஜா: என்ன செல வாகும்?

டாக்: நூறு ரூபாய் செலவாகும்.

ராஜா: நூறு ரூபாயா, இப்போ அவசரமா ஏதாவது செய்யணுமானு செய்துவிட்டுப் போங்க டாக்டர், நாளைக்கு கார்த்தாலே நூறு ரூபாயோடு உங்களைச் சந்திக்கிறேன்.

டாக்: சரி, இந்தாப்பா ......மூணு மணிக்கு ஒரு தடவை கொடு. நாளைக்கு காலையிலே வரேன்.

ராஜா: டாக்டர், ஆகாரம் என்ன கொடுக்கலாம்?

டாக்: குளுக்கோஸ், பார்லிவாட்டர், ஆரஞ்சு, ஆப்பிள், சாத்துக்குடி, ரொட்டி எல்லாம் குடுக்கலாம்.

ராணி: நூறு ரூபாயா?

ராஜா: மூர்ச்சை போட்டு விழுந்திடாதே! உங்கப்பா உயிருக்கு நூறு ரூபாய் மதிப்பு இருக்கும் போது அதைக் கேட்டு பெருமைப் படவேண்டாம்? என்னமோ திடுக்

தாயிருந்தாளப்படி டாக்டர்? சீக்கிரம் குணமாவதற்கு ஒண்ணும் வழி இல்லையா?

டாக்: இருக்கம்மா... ஆனா, உங்க நிலைமைக்கு அது சாத்தியமான்னுதான் சந்தேகம்.

ராஜா: நீங்க சொல்வது புரிகிறது டாக்டர். பணத்தைப் பற்றித்தானே யோசனை பண்ணறீங்க? அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். என் உயிரைக் கொடுத்தாவது அவரைக் காப்பாற்ற முயற்சி பண்ணறேன், சொல்லுங்கோ.

டாக்: எனக்கு ஒண்ணும் வேண்டாம், மருந்து வாங்கிக் கொடுத்தால போதும்.



கிடுறியே.

ராணி : நூறு ரூபாய்க்கு எங்கே போறது?

ராஜா : அந்தப் பொறுப்பை நம்ம கிட்டே விட்டுடு.

ராணி : எங்களுக்காக இவ்வளவு தூரம் பாடுபடுற உங்களுக்கு நாங்க என்ன கைம்மாறு செய்ய முடியும்?

ராஜா : கைம்மாறு, ஏன், கைக்கூலி வாங்கிற கயவன்னு நெனேச்சுக்கிட்டியா என்னை? என்னமோ அறைதையா திரிஞ்சுகிட்டு இருந்த எனக்கு அனுதாபம் காட்ட நீயாவது இருக்கியே, அதுவே பெரிய ஆனந்தமா இருக்கு.

ராணி : ஆமா ... பணத்துக்காக நீங்க?

ராஜா : திருடறேன். அதுக்கு என்ன?

ராணி : அதிலே எவ்வளவு அபாயம் இருக்கு தெரியுமா?

ராஜா : ஹூம்! அப்படி ஒரு வார்த்தை நான் படிச்ச பள்ளிக்கூடத்திலே கத்துக் கொடுக்கவே இல்லியே.



இந்த ரெண்டு ரூபாயை வச்சுக்க. நாளேக்குக் கார்த்தாலே வர்றேன்.

ராணி ரூபாயை வாங்கிக் கொள்கிருள். அவன் செல்வதையே பார்த்துக்கொண்டு நிற்கிருள்.

ராணி : தங்கமானவர்!

காட்சி 6

ரகுவை வீட்டுக்கு அழைத்துச் சென்ற மது அவனை நன்ருக உபசரிக்கிருன். ஏற்கனவே மனோரமாவுக்குச் சொல்லி வைத்தபடி மதுவின் வார்த்தைகளைத் தட்டாமல் மனோரமா 'போலி' நாடகம் நடிக்கிருள்.

மது: அப்போ நான் கம்பெனிக்குப் போறேன். பின்னடி வர்ரீங்களா?

ரகு: ஓ...எஸ்!

மனோ: அவரை எங்கே அண்ணு வரச் சொல்றே?

மது: கம்பெனி கணக்கை செக் பண்ண வேண்டாம்?

மனோ: அங்கே வந்துதான் செக்பண்ணனுமா என்ன? அக்கௌண்டு புக்கெல்லாம் கட்டி இங்கேயே அனுப்புங்க...அமைதியா சௌகர்யமா இங்கேயே பார்க்கட்டுமே.

மது: அப்போ நான் வரட்டுமா?

மது, ரகுவை மனோரமாவுடன் விட்டுச் செல்கிருன்.

காட்சி 7

ராணியின் வீட்டுக்கு ராஜா அவள் தந்தையின் உடல் நிலையைக் காண வரும்போது, கிழவன் அவனைப் பற்றி ராணியிடம் விசாரித்துக் கொண்டிருக்கிருன்.

கிழ: ஏம்மா...அந்தப் பிள்ளை எங்கே?

ராஜா: இதோ வட்துட்டேன் தாத்தா!

கிழ: உக்காரு தம்பீ...

ராஜா: உம்...நீங்க உடம்பை அலட்டிக்காதிங்க!

கிழ: தம்பி, எங்களாலே உனக்கு ரொம்ப கஷ்டம். நீ மாத்திரம் இல்லேன்னு எம்பொண்ணு அனாதையா கிட்டிருப்பா தம்பீ. உனக்கு வீடு வாசல் ஒன்றுமில்லையா?

ராஜா: பரந்த வானம், அகன்ற பூமி.

கிழ: என்ன தம்பீ இப்படி சொல்றே?

ராஜா: நான் வந்து...ஒரு அனாதை தாத்தா!

கிழ: உனக்கு யாருமில்லையா?

ராஜா: இருக்காங்களே. நான் சந்திக்கிற மனுஷங்களெல்லாம் உறவு முறைதான்.

கிழ: ஐயோ பாவம். தம்பீ எங்களோடேயே இருந்துடேன் அப்பா.

ராஜா: அதுக்கென்ன ... இருந்தாப் போச்சு, படுத்துக்குங்கோ.

ராஜா, ராணியைத் தனிமையில் சந்திக்கிருன்.

ராணி: ஏய்...ஏய்... உன்னைத் தான்.

ராஜா: ஏன், என் பேரு ஏய்யா?

ராஜா: பின்னே உன் பேரைச் சொல்லேன்...

ராணி: என் பேரு ராணி.

ராஜா: ராணியா...அட!

ராணி: அந்தப்புறம் கிடையாது! அடக்கமிருக்கு...ஆடம்பரம் கிடையாது! அன்பிருக்கு... படாடோபமில்லை! பச்சாத்தாபம் உண்டு.

ராஜா: நீ சாதாரண ராணி இல்லே! நடன ராணி, நாட்டியக் கலாராணி, சங்கீதராணி, சாகித்திய ராணி...இன்னும் என்னென்ன ராணியிருக்கோ அவ்வளவு ராணியும் நீதான் போ...

ராணி: (வெட்கத்துடன்) போங்க பாபு!

ராஜா: அதுதான் இல்லே. என் பேரு பாபு இல்லே, ராஜா...ராஜா.

ராணி: ராஜா...ஹூம் பொய்.

ராஜா: உன்மேலே ஆணையா நான் ராஜாதான். ஆனு, அதிகாரம் கிடையாது. அனுதாபம் உண்டு. இறுமாப்பு இல்லை! இரக்கமிருக்கு. பட்டமகிஷியில்லே. ஆனு ராணி இருக்கா.

ராணி: யார் அந்த ராணி?

ராஜா: நீதான்!

ராணி: ஹு ஹும், நீங்க சாதாரண ராஜாயில்லே. குறும்பு ராஜா, போக்கிரி ராஜா...திருட்டு ராஜா!

ராஜா: ஏய்...அதை மாத்திரம் சொல்லாதே, ஆமா!

ராணி: அப்போ அதை மாத்திரம் விட்டுடுங்க!

கிழவன் ராணியைக் கூப்பிடவே அவள் தந்தையைக்காண ஓடுகிருள்.

(85-ம் பக்கம் பார்க்க)



வைத்யா பிலிம்ஸ்

வைரமாலை

படக் காட்சிகள்



கௌரவமான
குடும்ப மொன்றில்
நடக்கும் சர்வ சாதா
ரணமான ஒரு நிகழ்
ச்சி மிகச் சிறந்த
ஹாஸ்ய நாடகமாக
அமைந்து விடுகிறது
திருட்டுப்போனதாக







கருதப்படும் ஒரு வைர மாலை பல திடீர்ச் சம்பவங்களை உண்டாக்கி ஒரு பரபரப்பை ஏற்படுத்துகிறது. முடிவில் வைரமாலையும் கிடைக்கிறது. திருமணமும் ஆகிறது.

• தோட்டக்கார விஸ்வநாதனின் அப்பழுக்கற்ற இந்த ஹாஸ்யக் கதையை ஓர் அற்புத



திரை ஓவியமாக ஆக்கியிருக்கிறார்கள் வைத்யா பிலிம்ஸார். வாஹினியில், பட்டதாரி ஜெகன்னாதனின் டைரக்ஷனில் வளரும் வைரமாலையில் பிரபல நக்ஷத்திரங்களான மனோஹர், தங்கவேலு, பத்மினி, ராகினி முதலியவர்ககள் நடிக்கிறார்கள்.

கே. ஆர். செல்லம் பயித்தியக்காரியாக வந்து பெருங் களேபரத்தைச் செய்து, எல்லோரையும் அடித்து

நொறுக்கி, பட ரஸிகர் களையெல்லாம் சிரிக்கும் படிச் செய்து விடுகிறார்.

இம்மாத இறுதிக்குள் திரையிடப்பட விருக்கும் வைரமாலை குடும்பத்துடன் பார்க்கக் கூடிய ஒரு நல்ல பொழுது போக்குப் படமாக இருக்கும் என்று நம்பலாம்.



அழகிய போட்டோக்களுக்கும்
அருமையான பிளாக்குகளுக்கும்
கிளான் அண்ட் பெயரல்,
போன்: 84167. 30, மவுண்ட் ரோடு, மதராஸ்-2. தந்தி: கிளான்பெயரல்

நக்ஷத்திரங்களின்

இருக்கும்
சிலருக்குத் தெரியும்...

சிவாஜி கணேசன் சிவாஜி வேஷத்திலிருக்கும் பெரிய வர்ணப்படமொன்றைத் தன் வீட்டின் முன் வராந்தாவிலேயே மாட்டியிருக்கிறார். சிவாஜி வேஷத்தில் அவர் இருப்பதைப் பார்க்கும் போதுதான் அந்தப் பெயர் அவருக்கு எவ்வளவு பொருத்தமானது என்பதும் தெரியும்! அத்துடன் இது யாருடைய வீடு என்று அந்தப் படத்தைப் பார்த்த பின் ஒருவரும் கேட்கமாட்டார்கள்! 'பட'மே 'பேசி' அதைச் சொல்லி விடுமே! இவை தவிர தன் தாயாரின் படம், நண்பர் கருணாநிதியுடன் எடுத்துக் கொண்ட படங்கள், தன் பிரத்தியேக படங்கள் இவற்றுடன் மிகப் பெரிய அளவில் லெனின், ஸ்டாலின் வர்ண ஓவியங்களையும் தம் வரவேற்பு அறையில் மாட்டி வைத்திருக்கிறார் கணேசன்.

* * *

புதுப்பித்து வரும் தன் பங்களாவின் முன்புறமுள்ள திறந்த வெளியில் சிறு பர்ணசாலையை நிர்மாணித்திருக்கிறார் பி. எஸ். சரோஜா. தன் கணவர் போலோநாத்தின் படத்தை அவர் இதில் வைத்திருக்கிறார். பிரதி தினமும் அப்படத்திற்கு மலர் மாலை சூட்டி வணக்கம் செலுத்த அவர் தவறுவதேயில்லை. அதே சமயம் தன்னைத் தேடிவரும் எவரையும் அந்த பர்ணசாலையில் வரவேற்று பேட்டி அளிக்கவும் அவர் தவறுவதில்லை. ஆம், படப்பிடிப்போ, வேறு அவசர ஜோலிகளோ இல்லாமலிருந்தால் தான்!

* * *

பாலய்யா ஒரு சிறந்த நடிகர் என்ற வரையில்தான் ரஸிகர்களுக்கு அவரைப் பற்றித் தெரிந்திருக்கும். ஆனால் அவர் கைதேர்ந்த நாட்டு வைத்தியரும் கூட என்பதை, அவர் வீட்டிலுள்ள மருந்து குழைக்கும் பீங்கான் உரலும் உலக்கையும், இதர உபகரணங்களும் நமக்குச் சொல்லிவிடும்! ஆனால், இவை எல்லாம் லேசிலே நம் கண்களுக்குத் தென்படாது! அப்படித் தென்படும் வகையில் அவர் வீட்டில் இருப்பது ஆறடி உயரமுள்ள லக்ஷ்மியின் வர்ண ஓவியம்தான்!



* * *

குரைக்காத நாயை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அதுவும் அரை டஜன் அல்ஸீஷியன்களாவது நிறைந்திருக்கும் நம் நக்ஷத்திரங்களின் வீட்டில்! இந்த அதிசயத்தை லக்ஷ்மி பிரபா—எம். சரோஜா சகோதரிகளின் வீட்டில் காணலாம். பார்த்தால் அசல் நாய்தான் என்று எண்ணும்படியான அளவுக்கு, ஒரு பீங்கான் நாய் அவர்கள் வீட்டு வரவேற்பு ஹாலில் ஒரு மூலையை ஸ்திரமாக ஆக்கிரமித்துக் கொண்டு, அனுபவமற்ற விருந்தினர்களை வெட்டி மிரட்டல் செய்து, அதிர்ச்சியும் தந்து வருகிறது! பொம்மை வீடுகள் சிலவும் இவர்கள் வீட்டில் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுடன் தங்களது புகைப் படங்களையும் ஹாலைச் சுற்றி அழகாக மாட்டியிருக்கிறார்கள், சகோதரிகள்! சூடான 'பில்டர்' காபியும் அவர்கள் வீட்டில் கிடைக்கத் தவறவே தவறாது!

* * *

ஜெமினி கணேசன் நல்ல நடிகர் மட்டுமல்ல, ஒரு சிறந்த இலக்கிய ரஸிகரும்கூட என்பதை அவர் வீட்டுக்குச் சென்று திரும்பும் ஒவ்வொருவரும் தெரிந்து கொண்டு விடுவார்கள். நம் நாட்டு உயர்ந்த தமிழ், ஆங்கில பத்திரிகைகளுடன் மேலை நாட்டு சஞ்சிகைகளை

கிரகங்களிலே...!



இவைகள் பற்றி....
பலருக்குத் தெரியாது

யும் அவர் வீட்டில் ஏராளமாகக் காண முடியும். அதுமட்டுமல்ல! உயர்ந்த பல புத்தகங்களையும் அழகான முறையில் அலமாரியில் அடுக்கி வைத்து, அருமையுடன் காப்பாற்றி வருகிறார் அவர். நம்முடன் பேசும் போது அவர் குறிப்பிடும் உயர்ந்த உபமானங்களே, அவர் இப்புத்தகங்களை யெல்லாம் அலங்காரத்திற்காக அடுக்கி வைத்திருக்கவில்லை, என்பதையும் சொல்லாமல் சொல்லிவிடும்!

* * *

"சிங்கப்பூரிலே நாங்கள் வாங்கின சீனதேசத்து பொம்மை இது. நூறு வயசாகிறது, இந்தப் பொம்மைக்கு. தெரியுமா?" என்று, திருவாங்கூர் சகோதரிகள் வீட்டில் எடுத்த எடுப்பிலேயே நம் கவனத்தைக் கவரும் பொம்மையைப் பற்றிக் கேட்டோமானால், பதில் கிடைக்கும். இந்த பொம்மை வைக்கப்பட்டிருக்கும் ஜன்னலின் மறு ஓரத்தில் கையில் குழந்தையுடன் மேனகையின் அவதாரத்தில் மற்றொரு அழகிய வெள்ளைச் சிலை இருக்கிறது. "மேனகை அவதாரமோ?" என்று அதைப்பற்றிக் கேட்டோமானால் "அது என்னமோ தெரியாது. எங்களுக்குப் பரிசாக ஹரிபாபு கொடுத்தார்" என்ற பதில்தான் கிடைக்கும். இவை தவிர மனிதகுல மாணிக்கம் நேருஜியுடன் சகோதரிகள் நடன உடையில் அருகே அமர்ந்து சம்பாஷித்துக்கொண்டிருக்கும் பெரிய புகைப் படமும் நம் பார்வையினின்றும் தப்பாது.

* * *

'மாங்கல்யம்' புகழ் 'வ. மு. க.' ஏழுமலை தான் ஊரை விட்டு ஊர் செல்லும் போது தன் வெற்றிலைப் பெட்டியுடன் கூட மற்றொரு பெட்டியையும் எடுத்துச் செல்கிறார். அத்தப் பெட்டியில் அவர் பூஜை செய்து வரும் பாம்பன் குமரகுருபர சுவாமிகளின் படமும், பூஜைக்குத் தேவையான கற்பூரம், வீபூதி முதலியனவும் இருக்கும். குமரகுருபர சுவாமிகளிடம் அவ்வளவு ஈடுபாடு ஏழுமலைக்கு. அவர் வீட்டிலே தங்கியிருக்கும் சமயம் இந்தப் பெட்டியும் அவருடன் ஓய்வெடுத்துக் கொள்ளும். 'சரிதாம்பா' என்கிறீர்களா?



* * *

இடம் மாறியிருக்கும் நடிகை கிருஷ்ணகுமாரி தமது புதிய வீட்டை வெகு அலங்காரமாக வைத்திருக்கிறார். சிலுவை வடிவில் மூங்கிலினால் ஆன தொட்டி யொன்றில் கொடியொன்றைப் படரவிட்டு, தம் வரவேற்பு அறையின் சுவற்றில் மாட்டியிருக்கிறார். இது தவிர மயில் இறகுகளைக் கொண்டே செய்யப்பட்ட மலர்ச் செடிகளை ராஜமகேந்திரபுரத்திலிருந்து வரவழைத்து தன் அறையில் அவர் வைத்திருக்கிறார். அடுத்து நம் கவனத்தைக் கவருவது 'மார்பி' ரேடியோ மீது அவர் வைத்திருக்கும் ஒரு சிறு எனாமல் கூண்டும், அதில் உள்ள குருவியும்தான். கிருஷ்ணகுமாரியின் வீட்டிலிருக்கும் இக் 'கூண்டுக் குருவி' ஒரு கடிகாரம் என்றால் நான்மட்டுமல்ல, நீங்களும்தான் ஆச்சரியமடைவீர்கள். இந்த விசித்திர கடிகாரம் தற்போது 'சத்யாக்ரகம்' செய்து கொண்டிருக்கிறது! 'விடுதலை' வேண்டி அக்குருவி சத்யாக்ரகம் செய்கிறதோ என்னவோ! லக்ஸ் டாய்லெட் சோப்பின் விளம்பரப் படங்களையும் இங்கு மாட்டியிருக்கிறார் 'லக்ஸ் டாய்லெட் சோப்புகளையே தன் கவர்ச்சிக்கு' உபயோகிக்கும் நக்ஷத்திரம் கிருஷ்ணகுமாரி.

மிராசுதார் பாண்டித்துரை மிகவும் முடுக்கான பேர்வழி. ஏராளமான செல்வத்திற்கு அதிபதியான அவரிடம் கணக்கப்பிள்ளையாக வேலை பார்த்து வருகிறான் கண்ணாயிரம். கண்ணாயிரத்தின் மகள் வேணி. பருவம் அவளுக்குப் பூசியிருந்த எழில் முலாமில் பாண்டித்துரை மயங்கி விடுகிறார். மிராசுதாருக்கே தன் மகளை மணம் செய்விக்கலாம் என்ற நோக்கத்துடன், பாண்டித்துரையிடம் தன் மகளை அவனுக்கே மணம் செய்து கொடுப்பதாக உறுதி கூறுகிறான் கண்ணாயிரம்.

கண்ணாயிரத்தின் வார்த்தைகளில் நம்பிக்கை கொண்ட பாண்டித்துரை அவன் மூலம் வேணிக்கு ஏராளமான நகைகளைப் பரிசாகக் கொடுத்தனுப்புகிறான். வேணிக்கு அவ்வளவு பரிசுகளையும் ஆனந்தத்தோடு சுமந்து கொண்டு செல்கிறான் கண்ணாயிரம்.

ஆனால் விஷயமே எதிர்பாராதவகையில் முடிந்து விடுகிறது. கண்ணாயிரத்தை 'சேவல் முட்டையிடும்' நிலையிலும் பாண்டித்துரையை, 'இலவு காத்த கிளி'யின் நிலையிலும் வைத்து விட்டு வீட்டை விட்டே ஓடி விடுகிறாள் வேணி.

வேணி ஓடிப் போன செய்தி தாங்க முடியாத அதிர்ச்சியாக முடிந்து விடுகிறது கண்ணாயிரத்துக்கு. பாண்டித்துரைக்கோ தடுக்க முடியாத கோபத்தை உண்டாக்கி விடுகிறது. இது சம்பந்தமாக கண்ணாயிரத்துக்கும் அவருக்கும் காரசாரமாக வாக்கு வாதம் நடைபெறுகிறது.

மேலே...மேலே...என்ன சொல்வதென்றுதான் எனக்கும் தெரியவில்லை! ஏனெனில் இதற்கு மேல் 'சுகம் எங்கே?' படத்திற்கான இக்காட்சி வளர முடியாதபடி தடுத்து விட்டது டைரக்டரின் 'கட்' என்ற பதம்.

இந்தக் 'கட்' என்ற பதத்திற்குத் தான் என்ன மகத்துவம் பார்த்தீர்களா?

''அட சட்! சுவாரஸ்யமான கட்டத்தில் முட்டுக்கட்டை போட்டு விட்டீரே!'' என்று நீங்கள் என் மீது எரிந்து விழுந்தாலும், உங்களுக்கு ஒரு சந்தோஷமான செய்தியையும் கூடவே சொல்லி விடுகிறேன்! 'சுகம் எங்கே?' செப்டம்பர் முதல் வாரத்திலேயே திரைக்கு வந்து விடுகிறது. ஆகவே மேலே என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ள நீங்கள் அதிக நாட்கள் காத்திருக்க வேண்டியதில்லையே!

'சுகம் எங்கே?' படத்தை கே. ராம்நாத் டைரக்ட் செய்து வருகிறார். மாடர்ன் தியேட்டர்ஸின் சொந்தத் தயாரிப்பாகும் இப்படம்.

பாண்டித்துரையாக டி. கே. ராமச்சந்திரனும், வேணியின் பாத்திரத்தில் சாவித்திரியும், தங்கவேல் கண்ணாயிரமாகவும் தோன்றி இதில் நடித்து வருகிறார்கள். கே. ஆர். ராமசாமிதான் இதன் கதாநாயகன்.

* * *

'மிஸ் அம்மா' ஸெட்டில் அன்று ஜெமினி கணேசனுக்கும் சாவித்திரிக்கும் படப்பிடிப்பு இருந்தது.

"விக்கி விக்கி ஒரே வலி யெடுத்துப் போச்சு!" என்று சொல்லிக் கொண்டே என் அருகில் வந்து உட்கார்ந்தார் கணேசன்.

"விஷயம் என்ன?" என்று நான் அவரைக் கேட்ட போது, அவர் சொல்லி நான் தெரிந்து கொண்ட விஷயங்களைத்தான் கீழே குறிப்பிட்டிருக்கிறேன்.

பாலு என்பது மிஸ் அம்மாவில் கணேசன் தாங்கும் பாத்திரத்தின் பெயர். இதிலே அவரது திரைக் காதலியாக வருகிறார் சாவித்திரி. மேரி என்பது அவரது படப் பெயர்.

பாலு மேரியைக் காதலிக்கிறான். சந்தர்ப்பம் அவர்களை ஒரு நாள் ஒரே இடத்தில் தங்கும்படியான நிலையை உண்டாக்கி விடுகிறது. இரவு வந்தவுடன் தனி அறையில் படுக்கப்போய் விடுகிறாள் மேரி. பாலுவுக்கு இது பெரும் ஏமாற்றத்தை உண்டாக்கி விடுகிறது. ஏமாற்றத்தின் விளைவிலே ஏற்பட்ட ஆத்திரத்துடன் தன் படுக்கையைப் பிரிக்கிறான் பாலு.

அவன் கண்களை ஆச்சர்யம் ஒரு கணம் தாக்குகிறது! காரணம் படுக்கையிலே ஒரே ஜாக்கெட்டும், கவுனுமாகக் காணப்படுகிறது. பாலுக்கு விஷயம் புரிந்து விடுகிறது. அது மேரியினுடையது என்றும், தன் படுக்கை மேரியிடம் தங்கி விட்டது என்பதும் அவனுக்குத் தெரிந்து விடுகிறது.

மேரியோ தன் அறைக் கதவை மூடிக் கொண்டு விடுகிறாள். அவளிடம் எப்படி விஷயத்தைச் சொல்வது? அதுவும் இரவு நேரம். அவள் தவறாக நினைத்துக் கொண்டு விட்டால்? —ஆனால் வேறு வழி?

பாலு துணிந்து மேரியின் அறைக் கதவைத் தட்டுகிறான். கதவைத் திறந்த மேரியிடம் விஷயத்தை விளக்கி அவள் படுக்கையையும் கொடுத்துவிட்டு, தன் படுக்கையுடன் திரும்பி வந்து, படுத்துக் கொள்கிறான். சில நிமிஷங்கள் சென்றிருக்கும். பாலுவுக்கு விக்கல் வந்து விடுகிறது. தண்ணீரைத்தேடும்பாலுவுக்கு மேரியின் அறையில் தண்ணீர் கூஜா இருப்பது நினைவுக்கு வருகிறது. மீண்டும் மேரியை எப்படித் தொந்தரவு செய்வது என்று விக்கலை ஒருவாறு அடக்க முயற்சிக்கிறான் அவன். ஆனால் அவனால் அது முடியவில்லை.

எழுந்து சென்று மேரியின் அறைக் கதவைத் தட்டுகிறான். விஷயம் அறிந்த மேரியும் அவனிடம் தண்ணீர் கூஜாவைத் தூக்கிக் கொடுக்கிறாள். தண்ணீர் கூஜாவை தன் அறைக்குக் கொண்டு வந்து தாகசாந்தி செய்து கொண்டு படுக்கிறான் பாலு.

அவன் படுத்த சில நிமிஷங்களுக்குப் பின் ஒரு விசித்திர சப்தம் மேரியின் அறையிலிருந்து வந்தது! ஆம், மேரியின் விக்கல் சப்தம்தான்!

மேரிக்கு பாலுவை எழுப்பி தண்ணீர் கூஜாவைக் கேட்க கூச்சம்!

'அகங்கார ஸ்திரீ' சிங்களப் படத்திற்கான நடனக்காட்சி ஒளிப்பதிவு செய்யப்படுகிறது.



சென்ற மாதம் சிலோனுக்கு விஜயம் செய்த கணேசனையும், பால சந்தரையும் எஸ். எம். நாயகம் தம் ஸ்டூடியோவில் வரவேற்றார்.

தண்ணீர் கூஜா தன் அறையிலிருந்து விட்டதே என்ற ஆதங்கம் பாலுக்கு!

ஜமுனா 'மேக்-அப்' செய்து கொள்வது 'சந்தேஹி'க்காக.

வினாடிக்கு வினாடி மேரியின் விக்கல் அதிகமானதே தவிர குறையவில்லை. அவளுடைய நிலைமை இப்போது தர்மசங்கடமாகி விடுகிறது. கதவைத் திறந்து கொண்டு பாலுவிடம் தண்ணீர் கேட்கிறாள். பாலு தான் காத்திருக்கிறானே தயாராக! "தண்ணீர்" என்று மேரி கேட்டவுடனே விழுந்தடித்துக்கொண்டு ஓடி அவள் கையில் கண்ணாடி டம்ளரையும் கொடுத்து, தண்ணீர் ஊற்றிக் கொடுக்கிறான். அவள் அதைக் குடித்தவுடன் மீண்டும் அதில் தண்ணீர் கொட்ட பாலு முன்வரும் போது, டம்ளரை ஆத்திரத்துடன் அவன் கையில் அழுத்தமாக வைத்துவிட்டு, கதவையும் படீரென மூடிக் கொண்டு "குட் நைட்" என்று சொல்லிவிட்டுப் போய் விடுகிறாள் மேரி. ஏமாற்றம் முகத்தில் பிரதிபலிக்க "குட் நைட்!" என்று சொல்லிவிட்டுத் திரும்புகிறான் பாலு. பாலு மேரிக்கு தண்ணீர் கொடுக்கும் காட்சிதான் அன்று படமாக்கப் பட்டது.

இதற்காக (நடிப்புக்காக) விக்கி விக்கித்தான் தொண்டையே வலி கண்டு விட்டதாம் கணேசனுக்கு!

சாவித்திரிக்கு சோடாத் தண்ணீரைக் குடித்து தொண்டையும் கட்டி விட்டது!

பாலுவாக கணேசனும், மேரியாக சாவித்திரியும் இதில் நடித்து வருகிறார்கள் என்பதை நேயர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

விஜயா புரொடக்ஷன்ஸ் தயாரிப்பான இப்படத்தை பிரசாத் டைரக்ட் செய்து வருகிறார். தெலுங்குப் பதிப்பில் ஜெமினி கணேசனுக்குப் பதிலாக என். டி. ராமராவ் நடித்து வருகிறார். படம் வெகு மும்முரமாகத் தாயாராகிறது.



நரசிம்ம பாரதியும், ரகுவீரும் நாகூரின் 'சந்தேஹி'யில் தோன்றுகிறார்கள்.

* * *

சமூகத்திலே பசுத்தோல் போர்த்திக் கொண்டு துரோகச் செயல்களை விளைவிப்பவர்களுக்கு யாருமே தண்டனை கொடுக்கத் தயங்கமாட்டார்கள்; தவறமாட்டார்கள்!

இவர்களை யெல்லாம் ரகம் வாரியாகப் பிரித்து "கொடுக்கத்தான் வேண்டுமய்யா அடி" என்று நரக

'எதிரியைப் பதம் பார்க்க வேண்டிய கத்தி என் கையைப் பதம் பார்த்து விட்டதே' என்று 'தூக்கு தூக்கி' செட்டில் 'தமாஷ்' செய்கிறார் சிவாஜி கணேசன்.



'சோடா தண்ணி குடிச்சு என் வயிரே உப்பி விடுமோ?' என்று பிரசாத்திடம் சாவித்திரி சொல்லுகிறாரோ?

—'மிஸ் அம்மா' ஸெட்டில்

ஸ்டூடியோவில் இனிமையாகப் பாடிக் கொண்டிருந்தார் ஏ. பி. கோமளா.

இவ்வளவு அர்த்த புஷ்டியுடன், கர்நாடக சங்கீதத்தில் அமையப் பெற்ற இந்த இனிமையான பாடலை ஸ்ரீ யூனிடி பிக்சர்ஸார் தயாரிக்கப் போகும் படத்திற்காக கோமளா பாடியிருக்கிறார். இதற்கு முன் தினம் சூலமங்கலம் சகோதரிகளின் பாட்டும் பதிவாக்கப் பட்டதாம்.

கோவை சென்டிரலில் இப்படத்திற்கான படப்பிடிப்பு நடைபெறுகிறது. பாட்டுக்கள் மட்டுமே நரசுவில் ஒலிப்பதிவு செய்யப்பட்டன.

படத்தின் தயாரிப்பாளரும், டைரக்டருமான சந்தர் இதன் சங்கீத டைரக்‌ஷனையும் கவனித்து வருகிறார். படத்திற்கான கதையையும் அவர் தான் எழுதி யிருக்கிறார்.

* * *

பிரின்ஸிபல் பிக்சர்ஸாரின் 'வெறும் பேச்சல்ல' படம் வெகு வெகு சுவாரஸ்யமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

ஒரு குகைவாழ் மனிதன் இருக்கிறான். மர்மம் நிறைந்த அவனது நடவடிக்கைகள் வெளியே பரவாமலிருக்க நாகரீகக் கோலத்தில் அவன் உலவி வருகிறான். அவனை நாகரீகக் கோலத்தில் கண்ட ஒரு யுவதி அவன் மீது காதல் கொண்டு விடுகிறாள். அம்மனிதனும் அடிக்கடி அப்பெண்ணைச் சந்தித்து வருகிறான்.

ஒரு நாள் அப்பெண் அவனை எதிர்பார்த்தபடி தோட்டத்தில் பாடிக் கொண்டிருக்கிறாள். அவளது நோக்கத்தை அறிந்த தோழியும் 'அவள்

கும்பகோணத்திலே......

அறுசுவை மிகுந்த சாப்பாடு!
ருசி நிறைந்த சிற்றுண்டி!
குளிர்ந்த இனிய பானங்கள்!
முகமலர்ந்த உபசரிப்பு!

யாவும் ஒருங்கே அமைந்தது.

அன்பர்களுக்கு பூரண திருப்தி ஏற்படும்படி சேவைபுரியும் ஸ்தாபனம்

ஸ்ரீ வெங்கடா லாட்ஜ்

காபி & சாப்பாடு ஹோட்டல்

மடத்து தெரு, கும்பகோணம்.

காதலன் விரைவில் வந்து விடுவான்' என்று அவளைச் சமாதானப்படுத்துகிருள்.

தோட்டத்திலே காதலனின் வரவை எதிர்பார்த்து, அக்கன்னி கீதம் இசைத்த காட்சி சமீபத்தில் 'வெறும் பேச்சல்ல' படத்திற்காக ஒளிப்பதிவு செய்யப்பட்டது.



'மிஸ் அம்மா' காமிராமேன் பார்ட்லே, கதாநாயகன் கணேசன், கதாசிரியர் சக்ரபாணி.

மர்ம மனிதனுக பாலய்யாவும் கன்னிப் பெண்ணுக பத்மினியும் இதில் வருகிருர்கள். நெப்டியூனில் தயாராகும் இப்படத்தில் இவர்களைத்தவிர எஸ். வரலக்ஷ்மி, சுதர்சன் மற்றும் பலரும் தோன்றுகிருர்கள். தயாரிப்பாளரான ஜோஸப் பள்ளிபாட் படத்தையும் டைரக்ட் செய்து வருகிருர்.

* * *

சென்றமாத ஆரம்பத்தில் 'காவேரி' படத்திற்கான இரண்டு பிரம்மாண்டமான காட்சிகள் படமாக்கப்பட்டன.

'காவேரி' குளத்தில் குளிக்கும் காட்சி ஒன்று; மற்றென்று லலிதா—சிவாஜி கணேசன் தோன்றும் கனவுக்காட்சி.

கிருஷ்ணு பிக்சர்ஸ் தயாரிப்பான இப்படத்தில் 'காவேரி'யாக பத்மினி தோன்றுகிருர். லலிதா ஒரு அரசிளங்குமாரியாகவும், கணேசன் இளவரசனுகவும் வருகிருர்கள். ஆரம்பத்திலே அரசிளங்குமாரியை காதலிக்கும் ராஜகுமாரன் முடிவிலே 'காவேரி'யை மணக்கிருன்.

அகம்பாவத்தை அன்பு வென்றுவிடும் என்ற அடிப்படையில் காவேரியின் திரைக்கதை அமைந்திருக்கிறது. தமிழ்-தெலுங்கு இரு மொழிகளிலும் இப்படத்தை தயாரித்து வருகிருர்கள்.

இந்தக் கனவுக் காட்சிக்கு பின்னணியாக அமைந்திருக்கும் பாட்டு அபாரமாக அமைந்திருக்கிறது.

காவேரி திரைக்கதை ஒரு 'ராஜா ராணி' கதை ஏ.எஸ். ஏ. சாமி இக்கதையை எழுதியிருக்கிருர். படத்தின் வசனங்களையும் அவர் பேனுதான் வடித்திருக்கிறது.



ஸ்ரீயூனிடியின் படத்திற்காக பாடும் ஏ. பி. கோமளாவும், ஆண்டாளும்.

செய்திச் சுருள்

ரஸிகர்களுக்கு 'வைரமாலை'!

உண்மைதான்! தமிழ் நாட்டு சினிமா ரஸிகர்களுக்கு இம்மாத முடிவுக்குள் ஒரு வைரமாலை கிடைக்கப் போகிறது! வெள்ளித்திரை மூலம் வைத்யா பிலிம்ஸார் இக்காணிக்கையைச் செலுத்தப் போகிறார்கள். உயர்ந்ததொரு நகைச்சுவை நாடகமான இதை சுவைகுன்றாது படமாக்கியிருக்கிறார் டைரக்டர் ஜகந்நாத். வைரமாலை என்றால் சாதாரணமானதா? அதில் பத்மினி, ராகினி, மனோஹர், தங்கவேலு முதலிய நக்ஷத்திரங்களின் ஒளி கண்களைக் கூசச் செய்து விடுமே! வாஹினியில் உருவாகும் இதன் கதை, வசனம் இரண்டையும் 'தோட்டக்கார' விஸ்வநாதன் எழுதியிருக்கிறார்.

'டாக்டர்' தயாராகிறார்!

ஆபரேஷனுக்கு அல்ல இந்த டாக்டர்; படமாக உருவாவதற்கு மட்டுமே தயாராகியிருக்கிறார்! சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் முத்திரையில் அடுத்தபடி தயாராகும் படங்களில் இதுவும் ஒன்று. எஸ். டி. சுந்தரம் இப்படத்திற்கான வசனத்தை எழுதியிருக்கிறார். டி. கே. ராமச்சந்திரன், தங்கவேலு இருவரும் இதில் நடிப்பதற்கு ஒப்பந்தமாகியிருக்கிறார்கள்.

'மேனகா'வின் மறு அவதாரம்

கஸ்தூரி பிலிம்ஸார் பிலிம் சென்டரில் 'மேனகா'வைப் படம் பிடிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஜூபிடர் பிக்சர்ஸின் முதல் படமாக உருவான அதே மேனகா கதைதான் இது! டி. கே. ராமச்சந்திரன் முதலியோர் இதில் நடித்து வருகிறார்கள். முன்பு அருணா பிலிம்ஸ் தயாரிப்பாளராக இருந்த வி. ஸி. சுப்பராமன்தான் இப்படத்தை தயாரித்து வருகிறார். படத்தையும் அவரே டைரக்ட் செய்து வருகிறார். மறு அவதாரம் எடுத்திருக்கும் இந்த மேனகா துப்பறியும் நவீனமாகும்.

'ரங்கோன் ராதா' வருகிறார்!

ரங்கோனிலிருந்து வரவில்லை இந்த ராதா! அண்ணாதுரையின் பேனா முனையிலிருந்து ஏட்டிலே தவழ்ந்து வெள்ளித்திரையிலே படமாக ஓட வந்திருக்கிறார் இந்த ரங்கோன் ராதா! மேகலா பிக்சர்ஸார் அடுத்து தயாரிக்கப் போகும் படம் இதுதான். இப்படத்திற்கான வசனத்தை மு. கருணாநிதி எழுதப்போகிறார் என்பது மிக மிகக் குறிப்பிடத்தக்க செய்தியாகும். 'ரங்கோன் ராதா'வை ஏ. காசிலிங்கம் டைரக்ட் செய்யப் போகிறார்.

மாடர்னின் 'மகேஸ்வரி'

மாடர்ன் தியேட்டர்ஸில் அடுத்து உருவாகப்போகும் படம் 'மகேஸ்வரி'. ஏ. பி. நாகராஜன் எழுதியிருக்கும் இக்கதை ஒரு சரித்திரக் கற்பனையாகும். கே. ராம்நாத் இப்படத்தை டைரக்ட் செய்வார் என்று தெரிகிறது. இப்படத்தில், தங்கவேலு, வீரப்பா, டி. கே. ராமச்சந்திரன், முதலியோர் நடிப்பார்கள் என்று தெரிகிறது. சுவாரஸ்யமான கதையாம் இது.

மாற்றமடைந்த மிஸ் அம்மா

விஜயாவின் ஹாஸ்யப் படமான மிஸ். அம்மாவின் நடிகர் பட்டியலில் முக்கிய மாறுதலொன்று செய்யப்பட்டிருக்கிறது. பானுமதிக்குப் பதிலாக சாவித்திரி தற்போது இதில் நடித்து வருகிருர். சாவித்திரிக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த பாத்திரத்தில் ஜமுனு நடித்து வருகிருர். ஜெமினி கணேசன், கே. சாரங்கபாணி, நம்பியார், தங்கவேலு முதலியோரும் நடித்துவரும் இப்படம் பிரஸாத்தின் டைரக்ஷனில், தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் தயாராகி வருகிறது.

எல்லாம் இன்ப மயம்!

பெயரிலேயே ஒரு தனிக்கவர்ச்சி இருக்கிறதல்லவா? இதே கவர்ச்சி பி. என். டி. புரொடக்ஷன்ஸ் உருவாக்கும் 'எல்லாம் இன்பமயம்' படத்திலும் இருக்கும் என்று ரஸிகர்கள் எதிர்பார்க்கலாம், நியூடோனில் ஆர். பத்மநபன் டைரக்ஷனில் வளருகிறது இப்படம். ஜெமினி கணேசன் ராஜசுலோசனு, டி. கே. ராமச்சந்திரன் மற்றும் பல முன்னணி நக்ஷத்திரங்கள் 'எல்லாம் இன்ப மய'த்தில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிருர்கள். படம் திரையிடப்படும்போது ரஸிகர்களும் இன்ப வெள்ளத்தில் மூழ்கலாம்!

மாதுரியின் 'தமிழன் தம்பி'

கோவை சென்டிரலில் மாதுரிதேவி சொந்தத்தில் தயாரிக்க விருக்கும் மற்ருெரு படம் இது. ஏ. பி. நாகராஜன் இப்படத்திற்கான கதை, வசனம் எழுதியிருக்கிருர். 'மெட்ராஸ் ஆர்ட் புரொடக்ஷன்ஸ்' என்ற ஸ்தாபனத்தின் பெயரில் இப்படம் தயாராகும். ஸ்ரீமதி பிக்சர்ஸ் என்ற பெயரில் அவர் தயாரிக்கும் 'பலே ஜோ'ரில் நடிக்க கிருஷ்ணன், மதுரம், வி. எம். ஏழுமலை, ஏ. கருணுநிதி, முத்துலக்ஷ்மி, அங்கமுத்து, மற்றும் பல ஹாஸ்ய நடிகர்களும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிருர்கள்.

கல்யாணமாகும் முன்னே!

விசித்திரமான இந்தப் பெயருடன் ஒரு படமும் தயாராகி வருகிறது. லக்ஷ்மிபிரபா சகோதரிகள் மற்றும் பலர் இப்படத்திற்கு ஒப்பந்தமாகியிருக்கிருர்கள்.

அருள் வேண்டும் 'அம்மையப்பன்'

ஆம்; ரஸிகர்களின் அருளைத்தான்



தென்னிந்தியப் படத் தயாரிப்பாளர், விநியோகஸ்தர், தியேட்டர்காரர்கள் மகாநாடு சமீபத்தில் சென்னையில் நடைபெற்றது.

இந்த 'அம்மையப்பன்' பூரணமாக எதிர்பார்க்கிறான். மு. கருணாநிதி சிறைக்கூடத்தில் சித்தரித்த இக்கதை, நியூடோன் கலைக்கூடத்தில் உயர்ந்ததொரு திரை ஓவியமாக அமைக்கப்பட்டு வருகின்றது. எஸ். எஸ். ராஜேந்திரன், ஜி. சகுந்தலா இருவரும் இதன் பிரதம பாகத்தில் நடித்து வருகிறார்கள். துரிதமாகத் தயாராகும் இப்படத்தை பீம்சிங் டைரக்ட் செய்கிறார்.

ஸ்ரீ யூனிடியின் புதுப்படம்

கோவை சென்டிரல் ஸ்டூடியோவில் ஸ்ரீ யூனிடி பிக்சர்ஸ் என்ற புதுப் படக் கம்பெனி தமிழ்ப்பட மொன்றைத் தயாரிக்க ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. இதற்கான பாடல்கள் சென்ற மாத மத்தியில் சென்னை நரசு ஸ்டூடியோவில் பதிவாக்கப் பட்டன. பம்பாய் படத்தயாரிப்பாளரும், டைரக்டரும், ஹாஸ்ய நடிகருமான பகவானுக்கு துணையாக இருந்த சந்தர்தான் இப்படக் கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார். தம் சொந்தப் படத்திற்கான கதை, சங்கீத டைரக்‌ஷன், டைரக்‌ஷன் ஆகிய பொறுப்புகளை சந்தரே ஏற்றுள்ளார்.

'மணி புரொடக்‌ஷன்ஸ்' முதல் படம்

டைரக்டர் ஆர். எஸ். மணி சொந்தமாகப் படம் தயாரிப்பதில் தற்போது ஈடுபட்டிருக்கிறார். இதற்கான கதையையும் அவர் தேர்ந்தெடுத்து விட்டார். சென்னை நெப்டியூனில் இப்படம் தயாராகும் என்று தெரிகிறது. 'மணி புரொடக்‌ஷன்ஸ்' என்ற ஸ்தாபனத்தின் பெயரில் தயாராகும் இப்படத்தில் நடிப்பதற்கு பண்டரிபாய் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

நாகராஜன் எழுதுகிறார்

மனோஹர் பிக்சர்ஸார் தங்கள் அடுத்த தயாரிப்புக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். இவர்களது இரண்டாவது படத்திற்கான கதை, வசனம் இரண்டையும் ஏ. பி. நாகராஜன் எழுதி வருகிறார்.

இதர செப்டம்பர் வெளியீடுகள்

செப்டம்பர் முதல் வாரத்தில் மாடர்னின் 'சுகம் எங்கே?' படமும், ஜம்பனா—நந்தியின் 'குடும்ப'மும் திரையிடப்பட விருக்கின்றன. 'சுகம் எங்கே?' கே. ராம்நாத்தின் டைரக்ஷனில் தயாரான படம். சாவித்திரி, முத்துலக்ஷ்மி, ராமசாமி, தங்கவேலு, டி. கே. ராமச்சந்திரன் முதலியோர் இதில் நடித்திருக்கிறார்கள். ஆங்கிலக் கதை யொன்றின் தழுவலான இதற்கு கண்ணதாசன்—ஏ. கே. வேலன் இருவரும் வசனமெழுதி யிருக்கிறார்கள்.

'குடும்பம்' அன்றாட வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் படம். ஜம்பனா டைரக்ட் செய்திருக்கும் இப்படம் சிறந்ததொரு சமூகச் சித்திரமாகத் திகழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சாவித்திரி, ஜி. வரலக்ஷ்மி, ஸ்ரீராம், டி. கே. ராமச்சந்திரன் முதலியோர் தங்கள் நடிப்புத் திறமையை இப்படத்தில் வெளியிட்டிருக்கிறார்கள்.

ரேவதியில் 'என் மகள்'

எஸ். வரலக்ஷ்மி, ரஞ்சன் பிரதம பாகத்தில் நடித்து வரும் 'என் மகள்' படப்பிடிப்பு முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிறது. ரேவதியில் வளர்ந்து வரும் 'என் மகளை,' சிராட்டிப் பாராட்டிப் பக்குவமாக உருவாக்கிக் கொண்டிருக்கிறார் டைரக்டர் ராஜா சந்திரசேகர். மைனாவதி, நம்பியார், டி. பாலசுப்ரமண்யம், துரைசாமி முதலியோரும் இதில் தோன்றுகிறார்கள். படம் செப்டம்பர் வெளியீடாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிமியர் ஸ்டூடியோஸ்

மைசூரில் சென்ற மாதம் 6-ம் தேதியன்று பிரிமியர் ஸ்டூடியோவின் ஆரம்ப விழா வெகு கோலாகலமாக நடைபெற்றதாம். மைசூர் பிரதம மந்திரி ஹனுமந்தய்யா இந்த ஸ்டூடியோவைத் திறந்து வைத்தாராம்.

இது சரியல்ல

டி. எஸ். பாலய்யா

இந்திய மக்கள் தன்னலமற்ற தியாகிகள். தேசப் பற்றுடையவர்கள். 'எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் இனம்' என்ற பரந்த நோக்கமுடையவர்கள். ஆனால் முன் சொன்னவைகளுக்கெல்லாம் இடமளிக்காத இந்தியச் சினிமாவைப் பற்றிப் புகழ்வதா, இகழ்வதா என்றுதான் எனக்குப் புரியவில்லை. அந்தத் தடுமாற்றத்திற்குக் காரணம், வேற்றுமை அடைந்துள்ள தென்னிந்திய சினிமாவும், வட இந்தியச் சினிமாவுமே! 'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடி பாடு கொண்டாட்டம்' என்று ஒரு பழமொழி உண்டு. அப்பழமொழியை நிருபணம் செய்து காட்டுகிறார்கள் ஹிந்திப்பட கலைஞர்களும், தமிழ்ப்படக் கலைஞர்களும். இது சரியல்ல! முகத்திற்கு முகம் வேற்றுமையே தவிர, முற்போக்கான தொழிலுக்குள் வேற்றுமையில்லை. அது வரவும் கூடாது.

சினிமா முதலாளிகளைப்பற்றி நான் சொல்ல வரவில்லை. அவர்கள் ஒரு பெரும் வியாபாரிகள். நாமெல்லோரும் அவர்கள் செய்யும் வியாபாரச் சரக்குகள். அரிசிக்குள் அரிசி மோதினால் ஒன்று சேருமே தவிர, உள்ளூர் அரிசி, அயலூர் அரிசி என்று வேறுபட்டு தனித் தனியாகப் பிரிந்து நிற்காது. தென்னிந்தியத் தண்ணீரும், வடஇந்தியத் தண்ணீரும், அல்லது எந்தத் தேசத்துத் தண்ணீராக இருந்தபோதிலும் சரிதான் — ஒன்று சேர்ந்தால், அது எவ்வூரைச் சேர்ந்தது என்று பிரிக்க முடியாது. தண்ணீர் பல ஓடைகளில் ஓடினாலும் கடைசியில் அது சாகரத்தைத்தான் போய் அடைகிறது. அதைப்போலவே தான், நமது சினிமாக் கலையும். காய்கறிகள் தோட்டத்தில் மலிந்தால் கடைத் தெருவுக்கு வந்துதான் ஆக வேண்டும். அதுபோலத்தான் நம்முடைய நடிப்புக் கலையும். நாமாக எதையும் தீர்மானிக்க முடியாது. ஏன் என்றால், நம்மைக் கண்டு களிக்கும் பொது ஜனங்களுக்குத்தான் அந்த உரிமையுண்டு. இது தெரியாது வடஇந்தியக் கலைஞர்கள் கொல்லன் தெருவிலேயே ஊசி விற்பது சரியல்ல. ஆனால், நமக்கு அவர்கள் பேரில் எவ்விதமான விரோத மனப்பான்மையும் கிடையாது. ஒரு வேளை, அப்படி ஏற்பட்டாலும், அதற்கு அவர்கள் நடத்தையே காரணமாகும்.

வடஇந்திய சினிமா நடிக, நடிகையர்கள், நம் ஊருக்கு வந்தால், நம் படமுதலாளிகளிலிருந்து, படத் தொழிலாளர்வரை, அவர்களோடு இருந்து அவர்கள் வருகைக்கு நன்றி செலுத்துவதுடன், டீ பார்ட்டி, டின்னர், பொதுக்கூட்டம் முதலியன நடத்தி அவர்களுக்கு நாம் வேண்டிய மரியாதையைக் கொடுக்கிறோம். இதையெல்லாம் கண்டு, 'தென்னிந்திய சினிமாக் கலைஞர்களும், முதலாளிகளும் ஒன்றும் தெரியாதவர்கள், நம்மையும், நம் தொழிலையும் கண்டு வியப்புற்று, நம்மைப் பெரும் மேதாவிகள் என்று கருதி நமக்கு மரியாதை செலுத்துகிறார்கள்' என எண்ணுகிறார்கள். அவர்கள் தொழிலையோ, மேன்மையையோ, தோற்றத்தையோ கண்டு, நாம் அப்படி அவர்களை மதிப்பதாக தவறுதலாக எண்ணுகிறார்கள். நாம் கொடுக்கும் மதிப்பானது நாம் செய்யும் தொழிலுக்கே. இதையுணராது, தென்னிந்தியாவும், வட இந்தியாவும் இந்த சினிமாக் கலையைக் கற்றுக் கொண்டது மேல் நாட்டாரிடம் என்பது ஞாபகமிருக்க வேண்டிய விஷயம். இதை மறந்து அவர்களிடமிருந்துதான், நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம் எனக் கருதி, உதாசினம் செய்வது சரியல்ல.

அவர்களுடைய வேற்று மனப்பான்மையை, எப்படித் தெரிந்து கொண்டேன் என்றால், சில மாதங்களுக்கு முன்பு, டி. கே. எஸ். சகோதரர்களுடைய "ரத்தபாசம்" படப்பிடிப்பு விஷயமாக பம்பாய்க்குச் சென்றிருந்தபோது, அங்கு தெரிந்து கொண்டேன், அவர்கள் 'மனோபா'வத்தை. மேலும், டி. கே. எஸ். சகோதரர்கள், மதுங்காவில் நடத்திய சில நாடகங்களைப் பார்க்கவும், தென்னிந்திய நாடக, சினிமாக்கலைஞர்களின் நடிப்பைக் கண்டுகளித்து, வட இந்திய நாடக, சினிமாக் கலைஞர்கள் வந்திருந்து எப்படி ஆமோதிக்கிறார்கள் என்பதையும் காணத்தான் முக்கியமாக நான் அங்கு சென்றிருந்தேன். ஆனால், அங்கு கண்டுகளித்த நண்பர்கள் யார்யாரென்றால், தேன்பாயும் செந்தமிழ் நாட்டு மக்களைத் தவிர, வடஇந்திய கலைஞர்களில் ஒருவரையாவது நான் காணவில்லை! இது தான் நமது கலைஞர்களுக்குள்

உள்ள ஒற்றுமையா? அல்லது வேற்றுமையா?

இந்த உதாசீனம் தென்னிந்திய சினிமா நடிக, நடிகையர்களுக்கில்லை. எல்லாக் கலைஞர்களையும் மேம்படுத்தும் நம் நாட்டு அபிமானிகளுக்கும் இல்லை. இதை அவர்களுக்கு மனம் விட்டு ஊன்றிச் சொல்கிறேன். இதைப்போல வட இந்தியாவிலிருந்து யாராவது நடிக, நடிகையர்கள் வந்து நாடகம் நடத்துவதாக இருந்தால், ஒருவருக்கொருவர் மோதி அவர்கள் நாடகத்தைக் கண்டு, சரியில்லை என்றாலும், கைவிங்கக் கொட்டி கரகோஷித்து அவர்களுக்குப் பெருமையைக் கொடுக்கத் தவறியதில்லை, நாம்.

அவர்களை எல்லாம் சொல்லி பயன் என்ன? சில தென்னிந்திய சினிமா முதலாளிகளும், அதைப் போல பத்திரிகை ஆசிரியர்களும், அவர்கள் துணைகொண்டு வாழும் சிற்சில நடிக நடிகையர்களும், தங்களையே கேவலப்படுத்திக்கொண்டும், வியாபார தந்திரத்தைக் கொண்டும், வடஇந்தியரை தூக்கி வைத்துப்பேசி, விருந்தூட்டி, மாலையிட்டு, வழியனுப்புகிறார்களே அவர்களை யல்லவா சொல்ல வேண்டும்? அவர்களையெல்லாம் பட்டவர்த்தனமாகவோ, பத்திரிகையின் மூலமாகவோ, எடுத்துக் காட்டினால், இருக்கும் வருமானத்தையும் எளிதில் போக்கடித்து விடுவார்கள். அதை முன்னிட்டே குறைத்து எழுதுகிறேன். 'யானைக்குத் தன் பலம் தெரியாது' என்பதைப் போல், அவரவர்கள் பெருமையையும் சக்தியையும் குறைத்துக் கொண்டு, வடஇந்தியரைப் பாராட்டுகிறார்களே என்று பெரிதும் வருந்துகிறேன். அவர்களுக்குக் கௌரவம் கொடுக்கிறார்களே என்ற பொறாமையால் நான் சொல்லவில்லை. ஆனால், நம் கௌரவத்தையும் சாமர்த்தியத்தையும் உணராத அவர்களைப் பெருமைப் படுத்துகிறார்களே என்று நினைத்துத் தான் பெருமூச்சு விடுகிறேன். நாங்கள்பம்பாய்க்குச் சென்றிருந்தபோது, எந்த நடிக, நடிகையர்களாவது, எந்தப் படமுதலாளியாவது, பொது ஜனங்களாவது, எங்களை அறிந்து கொண்டார்களா? இல்லை. ஆனால் ஒன்று, நாங்கள் அறிந்துகொண்டோம்; எங்களைத் தாழ்வு படுத்தி அவர்களுக்கு அதிகப் பணம் கொடுத்து, மரியாதை கொடுத்து வரவழைத்து, நம் ஊரிலேயே நம் கண் முன்னாலேயே அவர்களைப் போற்றிப் புகழும் முதலாளிகளும், சினிமாத் துறையில் ஈடுபட்ட சில அன்பர்களும், இருக்கிறார்கள் என்று கண்டு கொண்டோம். இப்படி அவர்கள் பேரில் வேற்றுமையுண்டாகும்படி இவர்கள் நடந்து கொள்ளும், மனப்பான்மை இருக்கிறதே, இது சரியல்ல. அங்கிருக்கும்போது, எனக்கிருந்த மனக் கொதிப்பை சிறிது அடக்கியவர், என்னைப்போன்ற தொழிலாளிகளில் ஒருவராகிய ஜனாப் யாகூப் ஒருவர்தான். அவருக்கு என்னைத் தெரியாது. ஆனால், அவர் தொழிலை நான் நன்குணர்ந்தவன். அதனால் நான் அவரைக் காணச் சென்றேன். சென்ற இடத்தில் என்னைச் சிறப்பாக நடத்தினார். அதை நான் மறக்க முடியாது. நண்பர் யாகூப், இங்கு வந்தாலும், என்னைக் கௌரவித்ததைப் போல், பன்மடங்கு கௌரவிக்க நான் என்றும் பின்வாங்கமாட்டேன். அவர் நடிப்பை நான் கண்டுகளித்திருக்கிறேன். ஆனால், என் நடிப்பை அவர் கண்டுகளிக்க நம் தமிழ்ப்பட முதலாளிகள், எனக்கு சந்தர்ப்பமளிக்காதது பற்றி நான் மிகவும் வருந்துகிறேன். என்னைப்போன்ற தொழிலாளிகளின் சக்தியை வெளிக்காட்டாது, எங்களை நம் முதலாளிகள் சக்தியற்றவர்கள் என்று சாக்கடையில் மறைத்து வைத்திருப்பதும் சரியல்ல.

நடிக சகோதரர்களே! சகோதரிகளே! முதலாளிகளே! உங்கள்பேரில் நான் குறை கூறுவதாக நினைத்து நீங்கள் என் பேரில் வருத்தப்பட வேண்டாம். அப்படி வருத்தப்பட வழி காட்டுபவர்களாக இருப்பவர்கள் நீங்களேதான். உங்களை நீங்களே சிந்தித்துப் பாருங்கள். கலையை வியாபார தோரணையில் பயன் படுத்த வேண்டாம். அதற்கு மரியாதை கொடுத்து, கௌரவித்து அதில் ஈடுபட்டு நடிக்கும் நடிகர்கள், நடிகைகள் யாராயினும், எத்தேசத்தவராயினும், எப்பாஷையினராயினும், அவர்களுக்கு மதிப்புக்கொடுங்கள். அவர்களுடன் பிரியா நட்பு கொள்ளுங்கள். அதை விட்டுவிட்டு, எங்களை அவமரியாதை செய்வதும் சரியல்ல; இது சரியல்ல.

தயாராகிக் கொண்டிருக்கிறது!

"மகேஸ்வரி" ஓர் சரித்திர கற்பனைச் சித்திரம்

சினிமா டெக்னீஷியன்கள் சங்க

ஆண்டு விழா ...

பத்து ஆண்டுகள்! ஆம்; ஒன்றில்லை இரண்டில்லை. டெக்னீஷியன்கள் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு பத்து ஆண்டுகள் ஓடிச்சென்று விட்டன. சென்ற மாதம் அவர்கள் தங்கள் பத்தாவது ஆண்டு விழாவைக் கொண்டாடிய போதுதான் இதுவிவரம் நினைவுக்கு வந்தது.

ஆனால், இந்தப் பத்தாவது ஆண்டு விழா, அவர்களது முந்திய ஆண்டு விழாக்களைவிடச் சிறப்பான முறையில் அமைந்திருந்தது என்பதையும், டெக்னீஷியன்கள் சங்கம் கடந்த பத்து ஆண்டுகளில் செய்து வந்த சேவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அவர்கள் இவ்வருஷம் நடத்திய பரிசளிப்பு விழா அமைந்திருந்தது என்பதையும் இங்கு குறிப்பிடாமலிருக்க முடியாது.

சென்ற மாதம் 8-ம் தேதியன்று சென்னை ஹிந்தி பிரசார சபையின் ஹாலில் இவ்விழா நடைபெற்றது.

காலையில் கலைநுணுக்கப் பகுதியும், மாலையில் பரிசளிப்பு விழாவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

காலை 8-30 மணிக்கு கலை நுணுக்கப்பகுதி ஆரம்பமாயிற்று. சங்கத் தலைவர் ஏ. கிருஷ்ணன் இதற்கு தலைமை வகித்தார். சென்னைக்கு வேறு அலுவல் காரணமாக வந்திருந்த இத்தாலிய டெக்னீஷியன்களும் இவ் விழாவில் கலந்து கொண்டனர்.

காரியதரிசி ரஜனிகாந்த் சகோதர டெக்னீஷியன்களையும் ஏனைய விருந்தினரையும் வரவேற்றார். பின்னர் ஏ. கிருஷ்ணன் கலைநுணுக்கப் பகுதியைத் துவக்கி வைத்தார்.

டாக்டர் பி. வி. பதி எதிர்காலத்தில் 16. மி. மீ. படங்கள் எந்தெந்த வகைகளில் உதவும்; எப்படி யெல்லாம் வளர்ச்சி அடையும் என்பது பற்றி விளக்கமாகப் பேசினார்.

எஸ். பாலசந்தர் படங்களில் சங்கிதம் எப்படி அமைந்திருக்க வேண்டும் என்பது பற்றி வெகு அழகாக எடுத்துக் கூறினார். என். கிருஷ்ணசாமி, டி. ஜானகிராம் ஆகியோரும் பேசினார்கள்.

மாலை சரியாக நான்கு மணிக்கு பரிசளிப்பு விழா ஆரம்பமாயிற்று. கோடக் ஸ்தாபனத்தார் அருமையான சிற்றுண்டிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். விருந்தினர்கள் தங்கள் வந்தனத்தை அவர்களுக்கு பரிசாகத் தெரிவித்துக் கொண்டே அதை முடித்து விட்டு விழா நடைபெறும் ஹாலுக்கு வந்தனர்.

பரிசளிப்பு விழாவுக்கு சென்னை மாகாண பிரதம நீதிபதியும், அகில இந்திய சங்கீத, நாடக அகடமியின் அக்ராசனருமான ஸ்ரீ பி. வி. ராஜமன்னார் தலைமை வகித்தார். ஜெமினி அதிபர் ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் விழாவுக்கான பிரத்தியேக உரையை நிகழ்த்தினார்.

சங்கித டைரக்டர் கண்டசாலா கடவுள் வணக்கத்துடன் மாலையில் விழா ஆரம்பமாயிற்று. சங்கத் தலைவர் ஏ. கிருஷ்ணன் நீதிபதி ராஜமன்னார் அவர்களையும், ஸ்ரீ வாஸனையும் வரவேற்றார்.

காரியதரிசி ரஜனிகாந்த் சங்கத்தின் ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பித்து விட்டு, கடந்த பத்து ஆண்டுகளில் சங்கம் செய்திருக்கும் சேவைகளைக் குறிப்பிட்டார். தற்போது சிறந்த டெக்னீஷியன்களுக்கு சங்கம் பரிசளிக்க முன்வந்திருப்பதையும் அவர் எடுத்துக் கூறினார்.

அடுத்தபடியாக ஸ்ரீவாஸன் பேசினார். விழாவுக்கு தலைமை வகிக்கும்படி ஸ்ரீ ராஜமன்னாரை சங்கத்தினர் தேர்ந்தெடுத்ததைப் பாராட்டுவதாக அவர் கூறினார்.

"டெக்னீஷயன்கள் சங்கம் படத்தொழிலுக்கு இதுவரையிலும் பல உபயோககரமான செயல்களை செய்து வந்திருக்கிறது. குறிப்பாக கலை நுணுக்கத்துறையில் டெக்னீஷியன்கள்

"தணிக்கையே தேவையில்லை" என்கிறார் பிரதம நீதிபதி

பெரும் முன்னேற்றத்தை அடைந்திருக்கிறார்கள். ஆனால் நம்நாட்டில்இத் துறையில் பயிற்சி அளிக்க யாதொரு விதமான ஸ்தாபனமும் கிடையாது. டெக்னீஷியன்கள் சங்கத்தில் பொறுப்பு வாய்ந்த சிலர் தொழிற் சட்டபடி டெக்னீஷியன்களுக்கும் வேலைநேரத்தை நிர்ணயிக்க விரும்பும் வகையில் பேசி வருகிறார்கள். ஆனால், ஒரு கலைஞனை எந்த வகையில் கட்டுப் படுத்த முடியும்? இது விஷயம் சிந்திக் கத்தக்கது.

தவிர தணிக்கையிலும் தற்போது அதிக கெடுபிடிகள் ஏற்பட்டுள்ளன. கலைக்கு கட்டுப்பாடு கூடாது என்று நம் மத்திய சர்க்கார் கல்வி மந்திரியே சொல்லி யிருக்கிறார்.

நமது அரசியல் சட்டம் பேச்சு, எழுத்து மற்றும் எல்லாவகை சுதந்திரங்களையும் நமக்கு அளித்திருக் கிறது. தனிப்பட்டவன் அனுபவிக்கும் இந்த உரிமையை படவுலகம் அனு பவிக்க முடியவில்லை.

சமீபகாலமாக நம் படத்தயாரிப்பில் பழைய படங்களும், புராணப் படங் களும் புத்துயிர் பெற்றிருப்பதைப் பார்க்கிறோம். நாம் ஆரம்ப ஸ்தானத் திற்கே மீண்டும் வந்திருக்கிறோம். நம்மிடையே முற்போக்கு உணர்ச் சியோ, சுயசிந்தனையோ இல்லாததால் அல்ல இது. எதையேனும் புது வகை யில் செய்தோமானால் தணிக்கை அதி காரி அதை ஆட்சேபிக்கிறார், வெட்டித் தள்ளி விடுகிறார்.

மேல் நாட்டிலும் இப்போது புரா ணப் படங்களுக்கும், பழைய படங் களுக்கும் ஒரு புது மௌஸ் ஏற்பட்டி ருக்கிறது. ஆனால் தணிக்கை காரண மாக இந்நிலை ஏற்படவில்லை. தாங் கள் கண்டு பிடித்திருக்கும் புது வகை களில் அவற்றைப் படமாக்குவதற் காகவே அவர்கள் இந்த வகையில் செய்திருக்கிறார்கள். தவிர, சினிமா வுக்கு அங்கு பலத்த போட்டிகளும் இருக்கின்றன.

நம் நாட்டிற்கு தற்போது சினிமாஸ் கோப், மற்றும் இது போன்ற சாத னங்கள் தேவையில்லை. ஏனெனில் நாம் அவற்றை வெளி நாடுகளிலி ருந்து இறக்குமதி செய்ய வேண்டி யிருக்கிறது. தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய சாதாரண உபகரணங் களையே நாம் இன்னமும் செய்ய முயற்சிக்கவில்லை. ஆகவே அத்துறை களில் நாம் ஈடுபட்டால் போதும்.

தொழிலிலுள்ளவர்களிடம் தணிக் கை ஒப்படைக்கப்பட்டால் அன்று தான் இத் தொழிலும் முன்னேறும் அந்தநாள் கூடிய விரைவிலேயே வந்து விடும் என்று எதிர்பார்க்கி றேன்" என்றார் ஸ்ரீ வாஸன்.

ஸ்ரீ ராஜமன்னார் தம் தலைமையுரையில் "சினிமாவுக்கு மட்டுமல்ல, வேறு எந்த கலை விஷயத்திற்குமே தணிக்கை கூடாது. இது என் சொந்த அபிப் பிராயம். தணிக்கையே வேண்டாம் என்று கூறுவதால் பலர் பயப்பட லாம். ஒரு புத்தகம் வெளியிடப்படு கிறது. அதை நாம் தணிக்கையா செய் கிறோம்? ஆனால், அதில் ஆபாசமோ, அபத்தமோ இருந்தால் சர்க்கார் சட்டப்படி அதன்மீது நடவடிக்கை எடுப்பதில்லையா? அதைப்போல் படங்களுக்கும் செய்யலாம்" என்று கூறினார்.

டைரக்ஷன், ஒளிப்பதிவு, ஒலிப் பதிவு, சங்கீதம், ஆர்ட் ஆகிய ஐந்து பிரிவுகளில் சென்ற வருஷத்தில் சிறந்த முறையில் பணியாற்றியவர் களுக்கு ஸ்ரீராஜமன்னார் பரிசளித்தார்.

சிறந்த டைரக்டரென கே. ராம் நாத் (மனிதன்); சங்கீத டைரக்டர்க ளென எம். டி. பார்த்தசாரதி, அனந்த ராமன், மாயவரம் வேணு (ஔவை யார்); சிறந்த ஒலிப்பதிவாளரென எம். ஏ. ரஹ்மான் (என் வீடு;) சிறந்த ஒளிப்பதிவாளர்களென ராமசந்திரன் ரங்கசாமி, கண்ணன், சேஷாத்திரி (தேவதாஸ்) ஆகியோர் பரிசுகளைப் பெற்றுக்கொண்டனர். டைரக்டர் ராம்நாத், சேஷாத்திரி இருவரும் விழாவுக்கு வர இயலாததால் பரிசு களை அவர்கள் சார்பில் சேகரும், ரங்கசாமியும் பெற்றுக் கொண்டனர்.

தபால் பெட்டி

புதுப்பிரதி அனுப்பவும்

எங்கள் ஊருக்கு வரும் படங்கள் பெரும்பாலும் பழைய பிரதிகளாகவே இருக்கின்றன. படத்தின் முழு உருவத்தையும் கண்டு களிக்க எங்களால் முடிவதில்லை. சென்஽ார் ஆபாசமான காட்சிகளை வெட்டி அனுப்பினால் இந்த முதலாளிகளும் விநியோகஸ்தர்களும் அவசியமான காட்சிகளையே வெட்டி அனுப்பி விடுகிறார்கள். கல்கத்தாவுக்கு வரும் தமிழ்ப் படங்களுக்கு நீளக் குறைப்பு செய்யாமல் புதிய பிரதிகளை அனுப்பச் சொல்லுங்கள்,......

பி. எஸ். ரகுநாதன்,
கல்கத்தா.

●

நீக்க வேண்டும்

நம் தமிழ்ப் படங்களில் ஒரு விஷயம் தொத்து வியாதியாகி விட்டது. எதற்கெடுத்தாலும்—முக்கியமாக சோகக் கட்டங்களில் ஒரு பிச்சைக்காரனைப் (அவன் காலையோ கையையோ உடைத்து!) பாடச் செய்கிறார்கள். இதன் மூலம் அந்தக் காட்சியின் நிலையை அப்படியே பிரதி பலிக்கச் செய்வதாக டைரக்டர் நினைக்கலாம். ஆனால், அந்தப் பிச்சைக்காரப் பாட்டால் அந்தக் காட்சியின் அமைப்பே கெட்டு விடுகிறது என்பது அவர்களுக்குத் தெரியுமா?

எம். கே. சொர்ணப்பா.
மதுரை.

●

படங்களில் ஆபாசம்

இந்தியத் தொழில்களில் சினிமாத் தொழில் மிகப்பெரியது. அதன் மூலம் நாட்டுக்குச் சேவை செய்யவே முயல வேண்டும். மட்டரகமான காட்சிகளும் வசனங்களும் இந்தத் தொழிலின் பெருமைக்கு இழுக்கு தேடுகின்றன. 'புட்டி' என்று வியாபாரத்தை முன்விட்டு கூவுவதுபோல் 'குட்டி'யை அழைப்பதும், மணமாகாத பெண்ணிடம், தன் மனைவியாக வேலைசெய்ய முடியுமா என்று கேட்பதும், கற்பிழந்ததாகச் சந்தேகிக்கப்படுபவளிடம் "எங்கேடி போனே!?" என்று கேட்பதும் சகிக்க முடியாதவைகளாக இருக்கின்றன. மக்கள் முதலாளிகளின் மண்டையிலடித்தும் புத்தி திருந்தாதது வருந்தத்தக்கது.

எஸ். வெங்கடேசன்,
கரூர்.

●

அளவுக்கு மீறினால்...?

படங்களின் மூலம் எந்தக் கருத்தையும் போதிக்க முடியும் என்பது வாஸ்தவம்தான். ஆனால், அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதை அறிந்து நடக்க வேண்டும். சமீபத்தில் வந்த ஒரு படத்தில் கலப்பு மணத்தைப் பற்றிப் போதிக்கப்போய் அநாகரீகத்தைப் போதித்து விட்டார்கள். இது வருந்தத்தக்கது.

"மைனாவதிப் பிரியன்",
கமுதி.

●

பின்னணி சங்கீதம்

நம் தென்னிந்தியப் பட உலகில் பின்னணி நுழைந்த பிறகுதான் சங்கீதத்தின் தரம் குறைந்து விட்டது. முன்பெல்லாம் பாடத் தெரிந்தவர்களே நன்கு சாதகம் செய்து பாடினார்கள். இப்போது பின்னணிக்கு ஏற்பாடு செய்வதால் அப்படிப் பாடுகிறவர்கள், சந்தர்ப்பம் அவசியம்,

பாவம் இவற்றை உணராமல், முதலிலேயே ரிக்கார்டிங்குக்காக ஏதோ பாடிவிட்டுப் போய் விடுகிருர்கள். குரலினிமையைக் கவனிக்கும் தயாரிப்பாளர்கள் காட்சியின் சூழ்நிலையை ஒட்டிய வகையில் அது அமைந்திருக்கிறதா என்பதைப் பற்றி அக்கறை கொள்வதில்லை. பாடத்தெரிந்த நடிக, நடிகையருக்கே சந்தர்ப்பமளிக்கப்படுமாஞல் இக்குறை நீங்கும்.

கௌசல்யா ஜெயசிங்,
சென்னை–4.

●

மனிதனு மிருகமா!

தியேட்டர்களில் ஓரிரு போலீஸாரை மட்டும் நிர்வாகிகள் ஏற்பாடு செய்து விடுகிருர்கள். அவர்களால் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. 'க்யூ' முறை பெயரளவில் தான் இருக்கிறதேயொழிய, அது பிரயோஜனமற்ற வகையில் ஏராளமான 'குண்டர்கள்' புகுந்துநிறைய டிக்கட்டுகளைப் 'பெற்று' விடுகிருர்கள்! நல்ல உடையுடன் தியேட்டருக்குப் போகிறவர் படம் முடிந்ததும் கந்தல் ஆடைகளுடன் கண்ணருவியான தோற்றத்துடன் வெளிவர நேரிடுகிறது. இவர்களை மனிதர்கள் என்று சொல்வதா, மிருகங்கள் என்று சொல்வதா என்ற நிலையை ஏற்படுத்திவிடும் தியேட்டர் சொந்தக்காரர்கள் 'க்யூ' முறையைக் கடுமையாக அனுஷ்டிப்பதுடன் ஒருவருக்கு ஒரு டிக்கட்டுதான் (!) என்ற முறையையும் அனுஷ்டிக்க வேண்டும்.

வில்சன்,
விரகனூர்.

●

வேண்டாம் வீண் முயற்சி!

தற்போது தென்னுட்டில் பெரும்பாலான படங்களைத் தயாரிப்பவர்கள் நக்ஷத்திரங்கள்தான். இவர்கள் தயாரிப்பில் ஈடுபட்ட பின் வெளிப்படங்களில் நடிக்கும் சந்தர்ப்பம் நின்றது. இருந்த ஓரிரு சந்தர்ப்பங்களிலும் நல்ல பெயர் கிடைக்கவில்லை. சொந்தப் படத்தில், திறமைக் குறைவும் அனுபவமின்மையும் நஷ்டத்தையே ஏற்படுத்திக் கொடுத்தன. இந்நிலையில் அவர்கள் நிலையே பரிதாபத்திற்கு உரியதாகிவிடுகிறது. படமெடுத்த நக்ஷத்திரங்களுக்கு இனி மேல்தான் 'விலாசம்' ஏற்பட வேண்டும்! இதற்கு ஓரிருவர் மட்டுமே விதி விலக்காக இருக்கிருர்கள். நக்ஷத்திரங்களில் சிலர் படமெடுத்து திவாலான பிறகும் மீண்டும் சிலர் அம் முயற்சியிலீடுபவது வருத்தத்தையே கொடுக்கிறது. வேண்டாம் வீண் முயற்சி என்று எச்சரிக்க வேண்டியிருக்கிறது.

ச. கோ. சங்கரராசன்,
கமுதி.

●

திரும்பிப்பார்!

சென்ற இதழில் ஜெமினியைத் தாங்கி எழுதியிருக்கிருர் ஒரு நண்பர். ஜெமினி பொழுது போக்குப் படங்களைத் தயாரிப்பதாகச் சொல்வது ஒருபக்க மிருக்கட்டும். நாட்டுக்கு அதன் மூலம் அது செய்த தொண்டு என்ன? மதனகாமராஜன், தாஸி அபரஞ்சி, கண்ணம்மா என் காதலி, மங்கம்மா சபதம், மாலினி, சந்திரலேகா, சக்ரதாரி, அபூர்வ சகோதரர்கள், சம்சாரம், ராஜி என் கண்மணி இவற்றில் என்ன இருந்தது? நல்ல கருத்தோ கொள்கையோ இல்லாத — ஆனல் பொழுது போக்குக்கான — படங்களைத் தயாரிக்கும் ஸ்தாபனம் என்பதை ராஜி என் கண்மணி மூலம் போக்கிக் கொண்ட ஜெமினியை அந்த அன்பர் அப்படித் தாங்கி எழுதுவது எதற்காக என்றுதான் புரியவில்லை. வெளிவந்த ஔவையார் படம், வெளிவரப்போகும் கட்டபொம்மன் இரண்டின் மூலமும் ஜெமினியின் உண்மையான தரத்தை அறிந்து கொள்ளலாமே தவிர வேறென்ன இருக்கிறது என்பதை அந்த அன்பர் திரும்பிப்பார்க்கட்டும்!

வி. செல்வராசு,
சிவகங்கை.

“நான் ரஸித்த காட்சி”

(“சினிமா பார்க்கும் போது ஜனங்கள் ஆபாசத்தைத்தான் விரும்புகிறார்கள். மாயா ஜாலப் படங்களும், ஸ்டண்டுகளும்தான் ஓடுகின்றன. அரை நிர்வாண நடனம் இல்லாத படங்கள் தோல்வியடைகின்றன” என்றெல்லாம் கூறும் படமுதலாளிகளை இந்தப் பகுதியைக் கவனமாகப் படிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம். ஜனங்கள் எதை ரஸிக்கிறார்கள்; எதைப் பாராட்டுகிறார்கள் என்று தெரிந்து கொள்ள இப்பகுதி மிகவும் உபயோகமாக அமைந்திருக்கிறது-ஆசிரியர்.)

*மலைக்கள்ளன்

பூங்கோதை மலைக்கள்ளனை யாரென்றறியாமலே காதலிக்கிறாள். பிறகு அவன் தன் அத்தானென்பதை அறிந்து ஆனந்தமடைகிறாள். அன்றிரவு மலைக்கள்ளன் பூங்கோதையின் படுக்கையறையில் பிரவேசிக்கிறான். இருவரும் ஒருவரை ஒருவர் காதலிப்பவர்கள். ஆயினும், பூங்கோதை, “அத்தான்! நள்ளிரவில் என் படுக்கையறையுள் நீ வரக்கூடாது; போய் விடு” என்கிறாள். அவனோ “நான் தவறுதலாய் நடக்க மாட்டேன். பயப்படாதே” என்கிறான். இதுதான் தமிழனின் பண்பாடு. தமிழ்ப் பெண்களின் தூய்மையை வெளியிடும் இக்காக்ஷி என் மனதைத் தொட்டது. மனிதன் உணர்ச்சிக்கு அடிமையாகி அழிவதைக் காட்டும் பல காக்ஷிகளை கண்டிருக்கிறோம். ஆனால் உணர்ச்சியை அடக்கி, “மனிதத்தன்மை என்பது இதுதான்! இப்படி ஆண்களும் பெண்களும் நடந்தால்தான், தமிழ் நாட்டின் பெருமை ஓங்கும்’ என்பதை விளக்கும் இக் காக்ஷி மிகச் சிறந்தது.

எம். எஸ். ராஜேஸ்வரி,
சென்னை—4.

*ரத்தபாசம்

ரகு மனிதப்பண்பை இழந்து விடுகிறான். மிருக வெறிக்கு ஆளாகிறான். தம்பியின் காதலி ராணியிடம் தகாத முறையில் நடந்து கொள்கிறான். கலங்கி நிற்கிறாள் ராணி. கணவனின் தவறுக்கு அவளிடம் மன்னிப்பு கோருகிறாள் ரகுவின் மனைவி. அவள் கூறுகிறாள்: “ராணி! அவர் என் கணவர் என்பதற்காக மன்னிக்காதே. உன் காதலனின் அண்ணன் என்பதற்காகவும் மன்னிக்காதே. உன் கணவர் உடலிலும், இவருடைய உடலிலும் ஓடுவது ஒரே ரத்தம். அந்த ரத்த பாசத்திற்காகவாவது என் கணவரை மன்னித்து விடு.” இதைக் கேட்டதும் “ஐயோ” என்று அலறி, சகோதரர்கள் ஒருவரை ஒருவர் கட்டி அணைத்துக் கொள்கின்றனர். காட்சியை காணும் நமது உடலில் ஓடும் ரத்தமும் ஒரு கணம் உறைந்து விடுகிறது!

“பரதன்”,
திருச்சி.

*துளி விஷம்

தாயுடன் இருந்த தந்தையை இன்னாரென அறியாத காரணத்தால் தனயன் சந்திரன் அவளைக் கேவலமாகப் பேசி விடுகிறான். கணவனைக் காட்டிக் கொடுக்க முடியாத நிலையில் தவித்த தாய் அவனிடம் உண்மையைக் கூறவில்லை. இதனால் கேவலமான முறையில் அவளைக் களங்கமுள்ளவள் என்று சந்திரன் கூறி விடவே அவள் உள்ளம் வெடித்துப் போய் விடுகிறது. அவன் வாழ்விற்காக சொல்லொணா கஷ்டங்களைச் சகித்துக் கொண்ட அவளால், தான் பெற்ற பிள்ளை சொல்லும் சுடுசொல்லைத் தாங்க முடியவில்லை. ‘கொன்று விடு

---

*இக்குறியிட்ட மூன்று கடிதங்களுக்கும் தலைக்கு ஐந்து ரூபாய் வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

மகனே, கொன்று விடு' என்று கூவிக் கதறும் அவளைக் கண்டு நம் உள்ளம் துடிதுடிக்கிறது.

ஜி. வீராசாமி,
சென்னை.

மலைக்கள்ளன்

தன் வீடு திரும்பும் பூங்கோதை கோச் வண்டியில் ஏறுகிறாள் என்று துப்பறியும் போலீஸார் மூலம் நமக்குத் தெரிகிறது. மலையோரத்தில் செல்லும் வண்டி காத்தவராயன் சகாக்களிடம் சிக்கி வீரராஜுவின் இருப்பிடம் அடைகிறது. இந்த அழகி அவனிடமா மாட்டிக் கொள்ள வேண்டும் என்று கவலைப்படுகிறோம் நாம். வண்டிக் கதவு திறக்கப்பட்டதும் நாம் ஆச்சரியமடைகிறோம்! ஆமாம், அங்கே குரங்குதான் இருக்கிறது! தோஷம் நிறைந்த உள்ளத்திற்கும் சந்தோஷம் தரும் காட்சி இது.

டி. பாலசுப்ரமணியம்,
கடலூர் என். டி.

முதலியாரின் அழைப்பை ஏற்ற மலைக்கள்ளன் சுயரூபத்தோடு வராமல் சாயபு வேடத்தில் வந்து பூங்கோதையைத் தொடுகிறான். கோபங்கொண்ட பூங்கோதை அவனைக் கீழே தள்ளவும் வேஷம் வெளியாகிறது. பூங்கோதை மகிழ்ச்சியுறுகிறாள். அத்தையும் முதலியாரும் பதைபதைக்கின்றனர். வேஷம்கலைந்த சாயபு குமாரவீரனைக் காட்சி யளிக்கவே, முதலியார் அவனைத் தன் மருமகனுக்கிக் கொள்கிறான். அருமையாக இருக்கிறது இக்காட்சி.

டி. கி. ரா. கோவிந்தராஜு,
திருச்சி.

ஜானகியின் மூலம் பூங்கோதையைத் தன்னிடம் கொண்டு வந்த வீரராஜு அவளைக் கற்பழிக்க முயற்சிக்கிறான். தடுக்கும் ஜானகியை கழுத்தை நெறித்துக் கொன்று விட்டு மீண்டும் பூங்கோதையை நெருங்குகிறான். அப்போது மலைக்கள்ளன் அங்கே தோன்றி பூங்கோதையைக் காப்பாற்றுகிறான். உணர்ச்சி வசப்படுத்தும் அக்காட்சி மலைக்கள்ளனில் சிறந்து விளங்குகிறது.

வி. பத்மகுமார்,
திருச்சி.

போலீஸ் ஏட் கருப்பய்யாவும் சப்-இன்ஸ்பெக்டர் ஆறுமுகமும் ரஹீம் சாயபுவிடம் வருகிறார்கள். ஆறுமுகத்தை வெளியே நிறுத்தி விட்டு உள்ளே போகிறான் ஏட் கருப்பய்யா. "என்ன கருப்பய்யா, சௌக்கியமா! ஆவ்...ஆவ்...'' என்கிறார் ரஹீம். "சௌக்கியத்துக்கு என்னங்க குறைச்சல், மூன்று ஆண் பிள்ளையும் ஆறு பெண் பிள்ளையும் இருக்கும்பொழுது!'' என்று கூறுகிறான் கருப்பய்யா. "ஓ! தசாவதாரத்திற்கு ஒன்றுதான் குறைச்சலா?'' என்று கேலி செய்யும் ரஹீமிடம், "அதுவும் கூடத் தயாராகிக்கிட்டுத்தான் வருதுங்க'' என்று ஏட் கூறும் போது கொட்டகை அதிர்ந்து போகிறது! சிறந்த காட்சி இது.

வி. சிவராம்.
திருவண்ணதபுரம்.

மலைக்கள்ளனைப் பலமுறை சந்திக்கிறாள் பூங்கோதை. இருவரும் காதலர்கள். அன்பின் பிணைப்பு ஆலிங்கனத்தில்தான் தெரியும் என்ற மட்டரக மனோபாவம் கொண்டவர்களாக இல்லாமல் ஆபாசமற்ற முறையில் நடந்து கொள்ளுகிறார்கள். பின்பற்றத்தக்க காட்சி இது.

தி. ச. சுப்ரமணியம்.
திருப்பனந்தாள்.

துளி விஷம்

மகாதேவியும் நாகவல்லியும் விஷம் குடித்து மாண்டு போனதாகச் சேதி வருகிறது. மலையமானும் மார்த்தாண்டனும் பகை கொண்டிருப்பதைக் கண்ட தேவர், "ஆவி போன பிறகு கூடவா அரும்பகை போகவில்லை?'' என்று கேட்டு இரு அரசர்கள் மனதையும் மாற்றி, கடைசியில் இறந்ததாகக் கருதப்பட்டவர்களை மயக்கம் தெளிவித்து எழுப்புகிறார். இந்தக் காட்சி மிகவும் ரஸிக்கத்தக்கதாயிருந்தது.

கோவிந்தராஜு.
திருச்சி.

மலையமானைத் தாக்கும் சந்திரனிடையே புகுந்த தேவர், அவர்களது உறவை விளக்குகிறார். அப்போது சந்திரன் மனம் மகிழ்ச்சியால் பூரிப்படைந்தாலும், தாயை சந்தேகித்துக் கேவலமாகப் பேசி விட்டதை

நினைத்து மிகவும் வருந்துகிருன். அக்காட்சியில் சந்திரன் புழுவெனத் துடிப்பது கண்டு நம் கண்களில் நீர் தாரை தாரையாக வழிந்தோடுகிறது.

கே. எஸ். ரங்கசாமி.
கரூர்.

சந்திரன் சாகத்தான் வேண்டும் என்று தீர்ப்பு கூறப்படுகிறது. 'சந்திரன் என் நாயகன். அவர் போனபின் நான் ஏன் வாழ வேண்டும்?' என்கிருள் நாகவல்லி. 'நான் பெற்ற பிள்ளை. அவன் அநியாயச் சாவு சாகத்தான் வேண்டுமென்ருல், அவனுக்காக வாழ்ந்த நான் மட்டும் ஏன் அவனைப் பிரிந்து வாழ வேண்டும்?' என்கிருள் மகாதேவி. வாழ விரும்பாத வனிதையருக்கு – துன்ப மூச்சை நிறுத்திக் கொள்ளத் துடித்த தூயவர்களுக்கு துளி விஷம் கொடுக்கிருர் தேவர். சத்தியம் அழிந்து விட்டதா? என்று பொருமுகிருேம் நாம். நல்ல வேளை, கடைசியில் அவர்கள் அருந்தியது விஷமல்ல, தூக்க மருந்து என்றறியும் போது மகிழ்ச்சியால் பூரிக்கிருேம் நாம்.

சுந்தராபாய்,
பல்லாவரம்.

மலையமானின் மகன் சந்திரன் தூக்குமேடையிலே. மலையமான் மார்த்தாண்டனுக்கெதிரே நிற்கிருன். மார்த்தாண்டன் மகனை அவன் மறைத்து வைத்திருக்கிருன். அப்போது நாம் நினைக்கிருேம், இருவரும் தங்கள் புத்திரர்களை மீட்டுக் கொண்டு சமாதானமாகி விடுவார்கள் என்று. ஆனால், மண்ணாசை மிக்க மார்த்தாண்டனிடம் அவன் மகனைத்

'கன'விலே ஒரு நடனமாடியிருக்கிருர் குமாரி பாரதி

திருப்பித் தந்து, தன் உயிரையும் பணயம் வைத்து தன் மகனை விடுதலை செய்யக் கோருகிருன் மலையமான். "இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்" என்பதற்கேற்ப நடந்து கொள்ளும் மலையமானின் பண்பு நம்மை மகிழ்வுறச் செய்கிறது.

அழகிரி விசுவநாதன்,
மைசூர்.

அளவற்ற அன்போடு சந்திரனை வரவேற்கிருள் அங்கயற்கண்ணி. காதல் பிச்சை கேட்கிருள். கருத்திழந்த அவளுக்கு உண்மைக் காதல் பற்றிக் கூறுகிருன் சந்திரன். அவள் ஏற்கவில்லை. ஆனுலும் ஒரு பெண் பேதை தவறி நடக்க முற்பட்டாலும் ஆடவன் சகோதரியென பாவித்து அவளைத் திருத்த முயல வேண்டும் என்பதை எடுத்துக் கூறும் இக்காட்சி மிகச் சிறந்தது.

"கலைவாணன்,"
ஈரோடு.

தங்கள் திருமணத்திற்கு தாயாரின் சம்மதம் தேவை என்கிருன் சந்திரன். "சந்தர்! உங்கள் தாயாரின் வார்த்தையில்தான் ஒரு மங்கையின் வாழ்வு, ஒரு மண்டலாதிபதியின் மானம், மகிமை, மகத்துவம் யாவும் ஊசலாடுகின்றன..." என்று கெஞ்சி தன்னைக் கைவிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிருள். புனிதமான அவள் அன்பு சந்திரனின் மனதை மாற்றி விடுகிறது. மணக்கச் சம்மதிக்கிருன். காதலின் உயர்வை வெளிப்படுத்தும் அழகிய காட்சி இது.

சந்திரா,
அடையார்.

கனவு

சேகரின் கோபத்திற்கு ஆளாகிய வைத்தியர் மோகனரங்கம் பிள்ளை தன் பிடியிலிருந்து ஓட முயற்சிக்கையில்மண்டையைப் பிளக்கிருன். சேகர் வீட்டில் ரவி அவரைப்போஷிக்கிருன். விஷயமறிந்த மோகனரங்கம் பிள்ளையின் மனைவி லக்ஷ்மி சகுந்தலாவுடன் வந்து அவர்களுடன் சண்டை போடுகிருள். தனக்காகப் பரிந்து பேசும் மனைவிக்கு தான் செய்த கொடுமைகளை எண்ணி மனம் மருகும் மோகனரங்கம் பிள்ளை, அவளிடம் மன்னிப்பு கேட்பதுடன் ரவி – சகுந்தலாவைச் சேர்த்து வைப்பது நம்மை: மனம் நெகிழச் செய்கிறது.

வி. பி. குமார்.
திருச்சி.

செல்வச் சீமான் தாமோதரம்பிள்ளை பிச்சைக்காரர்கள் மகாநாட்டில் தலைமை வகித்துப் பேசி, அவர்கள் துயர் துடைக்க வழி கூறுகிருர். ஆனுல், வீடு திரும்பியதும் ஒரு பிச்சைக்காரி நிற்பது கண்டு சிடுசிடுக்கிருர். சொல்லும் செயலும் ஒவ்வாததை விளக்குகிறது இக்காட்சி.

கலை அரசன்.
திருசிரபுரம்.

சத்திரத்தில் தன் தகப்பனுருக்கு அதிக காய்ச்சலடிப்பதைக் கண்டு தாமோதரம் பிள்ளையிடம் உதவி கேட்க ஓடுகிருள் லக்ஷ்மி. ஆனுல், அங்கு விரட்டப்பட்டுத் திரும்பி வருகிருள். அதற்குள் தந்தை காலமாகி விடுகிருர். "உங்கள் இன்பக் கனவுக்கு முற்றுப்புள்ளி வைக்கவா நான் பிறந்தேன்?" என்று கதறும் லக்ஷ்மி, அவரை கார்ப்பொரேஷன் அதிகாரிகடம் ஒப்படைக்க விரும்பாது, பிச்சையெடுக்கிருள். யார் ஆதரவு தருவார்கள்? சகுந்தலா வந்து உதவுகிருள். இந்தக் காட்சியில் நம் மனம் உருகி விடுகிறது.

எஸ். ராணி,
திருமழபாடி.

பக்கிரிசாமி பித்த வைத்தியசாலையில் வசமாக மாட்டிக் கொண்ட மோகனரங்கம், அங்கிருந்து தப்பி ஓட்டலுக்கு ஓடி வருகிருன். அந்த தரித்திர நிலையில் அவனைக் காண விஜையும் தாமோதரத்திடமிருந்து தப்புவதற்காக தோட்டத்தில் மறைகிருன். ஆனுல், திருட்டுப் பட்டம் சூட்டப்படும் போது, பைத்தியமாக நடிக்கிருன். ஹாஸ்ய ரஸம் சொட்டும் காட்சி இது.

ஜி. ஆர். பாஷ்யம்,
கரூர்.

தன்னை நம்பி ஏமாந்த லக்ஷ்மி கருவுற்றிருப்பதறிந்து கைவிட்டு விடுகிருன் மோகனரங்கம். அவனிடம் ஓடி தன் மகளைக் கைவிடாதிருக்குமாறு கெஞ்சும் முருகனைத் தள்ளுகிருன் மோகனரங்கம். லக்ஷ்மியோடு நாமும் கதறுகிருேம்.

எஸ். கே. சுவாமி,
பாளையங்கோட்டை.

இந்த அழகிகளை ஆட்டி வைப்பவள் 'அகங்கார ஸ்திரீ'யாகத்தான் இருக்கவேண்டும்.

பார்வேர்ட் ஆர்ட் பிக்சர்ஸின் 'நல்ல தங்கை' பட ஆரம்ப விழா.





"அடிக்க வரும் கிழவனிடம் 'சுகம் எங்கே?' கிடைக்கும்" என்று ஏங்கிய அந்தக் கட்டழகிக்கு அதை அன்பினால் காட்டுகிறான் அவ்விளைஞன்.

போன மச்சான்......

லக்ஷ்மிகாந்தாவின் மிடுக்கும் துடுக்கும் மிகுந்த நடிப்பைக் கண்டு கலங்கினாலும்......

......திரும்பி வந்தான்

...குசலகுமாரியின் அடக்க ஒடுக்கமான அழகிய தோற்றத்தைக் கண்டு களிப்படையலாம்.

கலைச்செல்வன், கமுதி

உலகத்தை உண்டாக்கிய உத்தமர் உறங்குகிறாரா?

இல்லை! செய்வதின்னவெனத் தெரியாது உன்மத்தராகி விட்டார்!

சொர்க்கவாசலில் பத்மினியின் நடிப்பைப்பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

அவரது கவர்ச்சிகரமான தோற்றம், நடிப்பைப் பற்றிச் சிந்திக்க வொட்டாமல் செய்து விடுகிறது!

ஏ. ஆர். எஸ். பால், இலங்கை

காதலை கடவுள் பிறப்பித்தானா?

ஆம்! அதற்கு மூலாதாரமான பெண்ணையும் ஆணையும் படைத்த போதே காதலும் பிறந்து விட்டது.

ஜூபிடர் பிரியன், மதுரை

சொர்க்க வாசலில் கலை விழாவின் போது காண்பிக்கப்படும் 'ஆர்செஸ்ட்ரா' கோஷ்டி சி. ஆர். சுப்பராமனுடையதா?

இல்லை. மதிவாணனுடையது!

மனோகராவைப் பார்த்து விட்டு வரும்போது எனக்கிருந்த உவகை, உற்சாகம், உணர்ச்சி, 'சொர்க்க வாசலை'ப் பார்த்து விட்டு வரும் போது இல்லையே, ஏன்?

'சொர்க்க வாசல்' எப்படி இருக்கும் என்பதைத்தானே படம் காட்டுகிறது!

கன்னியின் காதலி, இல்லற ஜோதி இரண்டில் இலக்கிய மணம் கமழும் வசனத்தில் சிறந்த படம் எது?

கன்னியின் காதலி வசனங்களை நான் நிரம்பவும் ரஸித்தேன்.

குணசுந்தரி, வேலூர்

பின்னணிப் பாடகர்கள், பின்னணிப் பாடகிகளையே மணந்து கொண்டால் எப்படியிருக்கும்?

நிஜ வாழ்க்கையில் அவர்கள் காதல் டூயட் பாடலாம்! பிறக்கும் அவர்களது குழந்தைக்கும் தாலாட்டுப் பாட்டுப் பஞ்சம் ஏற்படாது!

எம். டேவிட் மில்லர், பூனா

சினிமா நடிக நடிகையர்கள இன்ஷூரன்ஸ் செய்து கொள்வதுண்டா? அப்படி அவர்கள் செய்வதாயிருந்தால் நம் இந்தியாவிலே எந்த மதிப்பு வாய்ந்த கம்பெனியில் செய்திருக்கிறார்கள்?

உங்கள் கேள்வியைப் படித்ததுமே "பிரபல நடிகை எங்கள் கம்பெனியில்தான் இன்ஷூர் செய்திருக்கிறார். நீங்களும் எங்கள் கம்பெனியில் இன்ஷூர் செய்து கொள்ளுங்கள்" என்று யாரேனும் விளம்பரப்படுத்தலாம்! அப்போது உமது விருப்பம் பூர்த்தியாகி விடுமே!

எ.வி. முனுசாமி, நந்திதுர்க்கம்

குடும்ப விளக்கின் ஒளி எப்போது ஏற்படும்?

வீட்டில் முதல் குழந்தையின் அழுகுரல் கேட்கும் போது!

சோகம் எதைப் போன்றது?

அரித்துக் கொல்லும் காசம் போன்றது!

ரஞ்சனுடைய வாழ்க்கைச் சித்திரம் தங்கள் 'பட'த்தில் வந்துள்ளதா?

இரு முறை 'காட்சி' தந்திருக்கிறது!

சு. மு. விஸ்வநாதன், காஞ்சீபுரம்

திருவாங்கூர் சகோதரிகளில் ராகினியார் இண்டர்மீடியட்டில் வெற்றியடைய...?

இண்டரையே எட்டிப் பார்க்கவில்லையே!

ராஜ சுலோசன 'மாங்கல்ய' மணிந்து கொண்டு என்ன செய்கிருர்?

'பெண்ணரசி'யாகப் போகிருர்!

டி. கே. கோவிந்தன் என்ற இயற்பெயரை வைத்துக் கொண்டு விந்தன் என்ற புதுமைப் பெயரை சினிமா உலகிற்கு தந்திருக்கிருர் ஒரு வசனகர்த்தா என்று என் நண்பர் சொல்கிருர். நீர் என்ன சொல்கிறீர்!

மனோரதம், கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி முதலிய கதைகளை எழுதியிருப்பவர் டி. கே. கோவிந்தன். 'விந்தன்' என்ற புனைப்பெயர் கோவிந்தன் என்ற இயற்பெயரிலிருந்து வந்தது உண்மை என்பது ஒரு புறமிருக்க, அந்த 'விந்தன்' இந்த டி. கே. கோவிந்தன் அல்ல என்பதும் உண்மையாகும்.

சுப. அண்ணுமலை, மொரட்டுவ

எனக்கு விரோதமாக எந்நேரமும் தேவையும், கருத்துமற்ற முறையில் என்னைப் பற்றி பேசும் ஒருவர் முட்டாளா, அறிவாளியா?

நீர் அதைப் பொருட்படுத்தினுல் அவர் அறிவாளியாகி விடுவார்!

எல். எஸ். ராஜ், தஞ்சாவூர்

மக்களின் மனதை மாற்றுவது மதுவா, மதமா?

மதம்தான்! மதுவின் ஆதிக்கம் சில மணி நேரம்தான். ஆனுல் மதம் பரம்பரைச் சொத்தாயிற்றே!

ஒரு படத்தின் வெற்றிக்கு நல்ல கதை அடிப்படையா? அல்லது உயர்ந்த வசனம் அடிப்படையா?

சுவரைக் கொண்டுதானே சித்திரம் திட்ட முடியும்?

எம். ஜி. பண்டாரம், கொழும்பு

புதுயுகம் தமிழ்ப் படத்தில் நடித்த விமலா ஹிந்திப் படத்தில் நடித்திருக்கிருரா?

ஆம்! நடித்திருக்கிருர்.

பி. வி. சாவித்திரி, திருச்சி

அகில இந்தியாவிலும் அழகிற் சிறந்த நடிகை யார்?

ஒருவரைச் சிறந்த அழகி என்று சொல்லிவிட்டு ஏனைய அனைவரும் என்னிடம் சண்டைக்கு வரவேண்டும் என்பது உங்கள் அபிப்பிராயமோ!

தென்னிந்தியாவிலேயே சிறந்த பின்னணிப் பாடகி யார்?

எம். எல். வசந்தகுமாரியைச் சொல்லலாம்.

இ. தேவநாதன், கொழும்பு

வைஜயந்திமாலாவின் விலாசம் என்ன?

பெயருடன் ஆழ்வார்பேட்டை, சென்னை-18 என்று எழுதிப்போடும்.



'மதியும் மமதை'யும் படத்தில் ஜி. எம். பஷீர்

ஆ. சந்தானகிருஷ்ணன், மூளாய்

சிவாஜி கணேசனுக்கு திருமணமாகி விட்டதா?

அவருக்கு ஒரு குழந்தை சமீபத்தில் பிறந்திருக்கிறது!

கே. ஆர். என்., இலங்கை

பாதாள பைரவி புகழ் மாலதி புதிய படங்களில் நடிக்காததேன்?

'காளஹஸ்தி மகாத்மியம்' என்ற தெலுங்குப் படத்தில் நடித்து வருகிறார்.

எஸ். கே. சுவாமி, பாளையங்கோட்டை

காதலிக்கத் தெரியாதவனும் ஒரு மனிதனா?

மனிதன்தான். ஆனால் ரஸிகனல்ல!

மனிதனைக் கொல்லாமல் கொல்லும் நோயும் உண்டா?

வறுமைதான் நம் மக்களில் பெரும்பாலோரைப் பிடித்துள்ளதே!

பெண் எப்படிப்பட்டவள்?

சாகஸக்காரி என்று அமெரிக்கன் சொல்கிறான்; பொல்லாங்குக்காரி என்று பிரான்ஸ் தேசத்தவன் வர்ணிக்கிறான்; நாமோ, 'சுத்த பத்தாம் பசலிகள்' என்று, அவர்களைத் தெரிந்து கொள்ளாமலேயே வர்ணித்து விட்டோம்!

காதல் ஒரு கலையா?

ஏட்டிலோ படத்திலோ பார்க்கும் வரைதான்!

அன்பு எங்கு பிறக்கிறது: எங்கு வளருகிறது; எங்கு முடிகிறது?

தாய்மைத் தன்மையிலே பிறக்கும் அது, குழந்தையிடம் வளர்ந்து, அதன் சாவிலேதான் முடிவையும் காணுகிறது!

எஸ். வசுந்தராதேவி, பரமக்குடி

லலிதா – பத்மினி சகோதரிகளுக்கு சந்திரன் என்று ஒரு சகோதரன் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையா? அவர் என்ன செய்து வருகிறார்.

கல்லூரியில் படித்து வருகிறார்.

வி. என். ஜானகி, மாதுரிதேவி இவர்கள் ஏன் இப்போது படங்களில் நடிப்பதில்லை?

வி. என். ஜானகி சமீபத்தில்தான் 'தங்கமலைத் தெய்வம்' என்ற படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார். தோழன், புது வாழ்வு, நல்ல தங்கை ஆக மூன்று படங்களில் மாதுரி நடித்து வருகிறார்.

பிரேமநாதன், கோவை

என்னால் சுமாராக பாட்டுக்களை கொலை செய்யாமல் பாட முடியும். சினிமாவில் இடம் கிடைக்குமா?

பாட்டுக்களை விட்டுத் தள்ளும்! நடிப்பைக் கொலை செய்ய முடியுமா என்பதை முதலில் தெரிவியும்!

டி. கே. எஸ். சகோதரர்களின் தற்போதைய விலாசம் என்ன?

'அவ்வையகம்,' லாயிட்ஸ் ரோடு, சென்னை–6 என்பது அவர்களது விலாசமாகும்.

விஜயராகவன், கிண்டி

அனுபவம் என்று எதைக் கூறுகிறோம்?

தோல்வி நமக்கு கற்றுக் கொடுத்த பாடத்தை!

பழமொழி என்பது என்ன?

நீண்ட அனுபவத்தின் மீது ஏற்பட்ட குறுகிய வாக்கியம்!

சேரலாதன், விருதை

குற்றம் எங்கே பிறக்கிறது?

அன்பு குறையுமிடத்தில்; வறுமை வாழும் இடத்தில்!

அதிருஷ்டம் என்பது என்ன?

நாம் விரும்பாத ஒருவன் பெறும் வெற்றிக்கு நாம் சூட்டும் புனைப் பெயர்!

கோபம் கரை கடந்தால்?

எந்தப் பூனையின் முதுகும் வளையும்!

ராஜன், குகை, சேலம்

பணம் – விளக்கம் தர முடியுமா?

நம்மை விட்டு நிரந்தரமாகச் சென்று விடுவதில்லை பணம். ஆனால், நம்மைப் பிரிந்து செல்லும் அது மீண்டும் நம்மைச் சேரத்தான் அதிக காலத்தை எடுத்துக் கொள்கிறது!

அசோகா பிக்சர்ஸ்
என் மகள்
காட்சிகள்





அகில இந்தியப்
புகழ்பெற்ற ரஞ்
சன் நீண்ட இடை
வெளிக்குப் பிறகு
தோன்றும் முதல்
தமிழ்ப் படம்
என் மகள்



எஸ். வரலக்ஷ்மி, மைனுவதி, நம்பியாா, டி. பாலசுப்பிரமணியம் முதலியோர் நடிக்கும் இப்படம் விரைவிலேயே திரைக்கு வரவிருக்கிறது. புதுமையான காட்சி ஜோடனைகளில் அருமையான நடனங்களும், இனிமையான மெட்டுக்களில் இங்கிதமான பாடல்களும் இருக்கின்றன. 'என் மகள்' ஒரு வெற்றிப் படமாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை.



அருணா பிலிம்ஸ்

தூக்கு தூக்கி

படக்காட்சிகள்





லலிதா, பத்மினி, ராகினி, சிவாஜி கணேசன், பாலய்யா ஆகிய சிறந்த நக்ஷத்திரங்களேயும், இனிய பாடல்களேயும் கொண்ட ஓர் சிறந்த பொழுதுபோக்குச் சித்திரமான தூக்கு தூக்கியை ஆர். எம். கிருஷ்ணசாமி டைரக்ட் செய்திருக்கிருர்.

அருணு பிலிம்ஸாரின் இந்த அருமையான படத்தில் சிவாஜி கணேசன், சக்கைப்போடுபோட்டிருக்கிருர்

தூக்கு தூக்கி ஒரு நல்ல வெற்றிப்படம்

ரத்த பாசம்

(தொடர்ச்சி)

காட்சி 8

மது, ரகுவை தன் பேச்சு சாதுர்யத்தால் மயக்கி, கம்பெனியில்தான் எழுதியுள்ள பொய்க் கணக்குகளை ரகு கண்டு கொள்ளாதபடி மறைத்து விடுகிறான். ரகுவும் அவனுடைய பசப்பு வார்த்தைகளில் மதி இழந்து, தான் வந்துள்ள காரணத்தையே மறந்து விடுகிறான்.

ரகு: பாக்கி அக்கௌண்ட்ஸ் எல்லாம் நீங்களே செக் பண்ணிடுங்க...

மது: முன்னாலேயே செக் பண்ணிட்டேன்.

ரகு: எல்லாம் சரியாயிருக்குமில்லே...?

மது: கரெக்டா இருக்கும்.

ரகு: இன்னும் எதிலே கையெழுத்துப் போடணும்?

மது: செக் புக்கிலே மட்டும் கையெழுத்துப் போட்டா போதும்.

ரகு: அமௌண்ட்?

மது: ஐயாயிரம் ரூபாய்...அட்வர்டைஸ்மெண்ட் இல்லாத பிஸினஸ், பிஸினஸ்ஸே இல்லீங்க. கட்டாயம் பண்ணித்தான் தீரணும்...ஒரு வருஷம் போகட்டும், நம்ப கம்பெனியை எந்த நிலைமைக்கு கொண்டு வர்றேன் பாருங்க....(செக் புஸ்தகத்தில் ரகுவிடமிருந்து கையெழுத்து வாங்கிக் கொள்ளுகிறான் மது)

டிரைவர்: ஸார்! என் குழந்தைக்கு பிறந்த நாளுங்க, லீவு வேணுங்க.

மது: என்ன, பொறந்த நாளா? மண்ணாங்கட்டி, அட போய்யா லீவும் கிடையாது, ஒண்ணும் கிடையாது, நீ போக முடியாது.

ரகு: மிஸ்டர் மது...ஏதோ பாவம், அவனுக்கும் ஆசை இருக்காதா? லீவு கொடு! நான் கூட இன்னிக்கு ஊருக்குப் போகணும்.

மனோ: இன்னிக்கேவா, ஹூஹூம்! முடியாது. இவ்வளவு நாள் ஆபீஸ் விஷயமா இருந்திங்க. எங்களுக்காக ஒரு நாளாவது இருந்துட்டுத்தான் போகணும். என்னண்ணா?

மது: ஆமா ஸிஸ்டர்!

ரகு: இல்லை இல்லை...நான்...

மனோ: என்னண்ணா? (மதுவை போய்விடும்படி ஜாடை காட்டுகிறாள் மனோரமா)

மது: அப்போ நான் போயிட்டு வரட்டுங்களா?

ரகு: ஹூஹூம், கண்டிப்பாய் போய் ஆகணும்.

காட்சி 9

சரளா, தன் கணவன் ரகு பம்பாயிலிருந்து குறிப்பிட்ட தினத்தில் திரும்பாதது கண்டு கலவரம் அடைகிறாள். வேலைக்கார வேலய்யனை விசாரிக்கிறாள். அவன், பம்பாயிலிருந்து வந்துள்ள ஒரு தந்தியை அவளிடம் கொடுக்க வருகிறான். அந்தத் தந்தி ரகுவே பம்பாயிலிருந்து கொடுத்தது என்பது தெரியவருகிறது.

வேல: பம்பாயிலிருந்து தந்தி வந்திருக்கம்மா!

சர: பம்பாயிலிருந்தா...ஐயய்யோ! அவருக்கு என்னமோ ஏதோ, ஒண்ணுமே தெரியலையே. தெய்வமே! வேலய்யா!

வேல: பொறு குழந்தை! பயப்படாதேம்மா......அவரேதான் அடிச்சிருக்காரு.

சர: அவரேதான் அடிச்சிருக்காரா? என்னானு அடிச்சிருக்காரு? சீக்கிரம் படியுங்களேன்.

வேல: வேலை அதிகமா இருக்காம். அதனாலே வரமுடியலையாம். வேலை முடிந்ததும் வர்றாராம்.

சர: அம்மாடி, வேலய்யா! என்னமோன்னு ரொம்ப பயந்து போயிட்டேன். முதல்லே அரசமரத்துப் பிள்ளையாருக்கு இரண்டு தேங்காய் விடலைபோடச் சொல்லு.

வேல: சரி குழந்தை!

சர: அவர் இல்லாமல் என்ன பிறந்த நாள் வேண்டியிருக்கு?

காட்சி 10

மதுவின் சூழ்ச்சிப்படியே மனோரமா ரகுவுடன் காதல் நாடகமாடி அவன் மனதை மயக்கி விடவே அவன் தன் மனைவி, குழந்தையைக் கூட மறந்து விடுகிறான்.

ரகு: வாழ்நாள் பூராவும் இப்படியே இருந்துடலாம்னு தோணுது மனு!

மனோ: எல்லாம் பம்பாயிலே இருக்கிறவரையிலும் தானே? மெட்ராஸ் போயிட்டா மனோரமாவைப் பற்றி மனசிலேகூட நினைப்பீங்களோ இல்லியோ. ஆம்பளைகள் குணமே இவ்வளவுதானே!

ரகு: அப்படி நினைக்காதே மனு. உன் கொஞ்சும் மொழியும் குறும்புப் பார்வையும் என் நெஞ்சைவிட்டு அகலவே அகலாது.

மனோரமாவின் காதலைப் பூரணமாகப் பெற விரும்பி தான் மணமாகாதவன் என்று துணிந்து சொல்லி விடுகிறான் ரகு. காதல் மயக்கம் கட்டிய மனைவியையும் மறக்கச் செய்கிறது.

ரகு: எனக்கா, கல்யாணமா? அதுதான் கல்யாணம் ஆகலைனு சொன்னேனே?

மனோ: இப்போதான் என் மனசு நிம்மதியா இருக்கு. வாங்க போகலாம்.

காட்சி 11

தான் வலையில் வீழ்த்திவிட்ட ரகுவைப்பற்றி மதுவிடம் மனோரமா பெருமையுடன் சொல்லிக் கொள்ளுகிறாள்.

மனோ: நீ டைரக்ட் பண்ண வேண்டியது!

மது: சரி!

மனோ: நான் நடிக்க வேண்டியது!

மது: சரி.

மனோ: படம் வெற்றிகரமா முடிய வேண்டியது. அவர் ஆஸ்தி பூராவையும் எழுதி வாங்கிட வேண்டியது.

மது: ஒட்டாண்டியா நடுத் தெருவிலே விட்டுவிட வேண்டியது.

அவர்கள் பேசிக்கொள்வதை ரகு கேட்டுவிடவே, விஷயத்தை விசாரிக்கிறான். அது ஒரு சினிமா கதை என்று கூறி, அந்த சினிமாப் படம் பார்க்க ரகுவையும் தங்களுடன் வரும்படி அழைக்கிறான் மது. அவன் வர விரும்பாததால் மனோவும் மதுவும் செல்கின்றனர்.

காட்சி 12

ராணி நாடோடியாக இருந்து கொண்டு நடுத்தெருவில் நடனமாடி பிச்சை பெறுவதை விரும்பாத ராஜா, அவளை மேடைமீது நடனமாடி நடன ராணியாகப் புகழடையச் செய்ய விரும்புகிறான்.

ராஜா: நடுத்தெருவிலே ஆடறது, நாலுபேரு கண்டமாதிரி பேசுறது. சேச்சே! இதெல்லாம் நல்லா இருக்கா?

கிழ: இப்படித்தானே தம்பி எங்க பிழைப்பு நடந்திட்டு வரது. இன்னிக்கு என்ன புதிசு?

ராஜா: அப்படி ஆடணம்னு ஆசை இருந்தா மேடைமீது ஆடறது.

ராணி: மேடை மேலா...எனக்கு என்ன யோக்யதை இருக்கு ராஜா, மேடைமேலே ஆடுறதுக்கு?

ராஜா: ஏன் இல்லை? உன்னைவிட மோசமா ஆடுறவங்களெல்லாம் நாட்டிய நட்சத்திரமின்னு பிரமாதப் படுத்தலே. இந்தாப் பார் ராணி! இன்னைக்கே ஒரு ஆசிரியருகிட்டே உன்னை அழைச்சிக்கிட்டுப் போய் நாட்டியம் கற்றுக் கொடுக்கிறதுக்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் நான் செய்கிறேன்.

ராஜா தன் வாக்குப்படி 'நடன மண்டல்' ஒன்றில் ராணி நாட்டியம் பயில ஏற்பாடு செய்து விடுகிறான்.

காட்சி 13

பம்பாயிலிருந்து குழந்தையின் பிறந்த நாளுக்கு வருவதாகச் சொல்லிச் சென்ற ரகு, மனோவின் காதல் வலையில் சிக்கி விடவே, குறிப்பிட்ட சமயத்தில் வராமல் தன் இஷ்டம் போல் சென்னைக்குத் திரும்பி வருகிறான். கம்பெனியிலிருக்கும் ரகுவுக்கு சரளா வீட்டிலிருந்து போன் செய்கிறாள்.

சர: குழந்தைக்கு உடம்பு ஜுரமா இருக்கு. கொஞ்சம் நீங்க உடனே வாங்க.

ரகு: சுத்த ஃபூலா இருக்கியே... குழந்தைக்கு ஜுரமா இருந்தா நான் என்ன பண்ணறது? டாக்டருக்குப் போன் பண்ணு.

சர: இல்லை, அவன் அப்பா அப்பான்னு...

ரகு: என்னாலே இப்ப வர முடியாது. (டெலிபோனை வைத்து விடுகிறான்.)

காட்சி 14

(பம்பாயில் ராணியின் வீடு)

ராணி: அப்பா! நம்ப ராஜா நமக்காக எவ்வளவு கஷ்டப்படறாரு பார்த்திங்களா?

கிழ: அவன் தீர்க்காயுசா இருக்கணும்மா. உன்னைக் காப்பாத்த வேண்டிய பொறுப்பு என்னை விட்டுது.

ராணி: என்னப்பா அப்படிச் சொல்றீங்க?

கிழ: ஆமாம்மா! நீ ராஜாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு உனக்கொரு ராஜகுமாரன் பொறந்துட்டா திருப்தியோடு இந்தக் கட்டையைப் போட்டுடுவேன்.

ராணி: போங்கப்பா...ஹூம்......

ராஜா: என்ன தாத்தா, ராணி வெட்கப்படறா?

கிழ: வயசு பொண்ணேல்லியோ, எதுக்கும் வெக்கம் தான்.

ராஜா: நான் என்ன சொன்னேன்னு...

ராணி: ஆமா, ராமாயணத்துலே சீதை சுயம்வர காண்டம் படிக்கச் சொன்னாங்க. அதென்ன அது?

ராஜா: ஆமா, அதை சொல்ல மாட்டேன்.

ராணி: ஏன், கொடேன் பார்க்கலாம் கொடு, கொடு.

ராஜா: உங்கப்பாவுக்கு கொஞ்சம் புத்தியிருக்கு ராணி, புத்தியிருக்கு. நம்ப ரெண்டு பேரும் விளையாட ஆரம்பிச்சவுடனே ஒழுங்கா உள்ளே போயிட்டாரு பாரு.

ராஜா தான் திருடி வந்த புடவையொன்றை ராணியிடம் காண்பிக்கவும், அவள் அதன் விலை கேட்கிறாள். ராஜா சொல்லத் தெரியாமல் விழிக்கிறான்.

ராணி: உங்க திருட்டு சொத்து எனக்கு வேண்டாம்.

காட்சி 15

பம்பாயிலிருந்து திரும்பி வந்த ரகுவின் நடவடிக்கை,மனோபாவம் யாவும் முற்றிலும் மாறியிருப்பதைக் கண்டு சரளாவும், உண்மை ஊழியன் வேலய்யனும் மனக்கலக்கம் அடைகின்றனர்.

வேல: தம்பீ......தம்பீ......

ரகு: என்ன வேலய்யா? என்ன வேணும்?

வேல: தம்பி! அந்தப் பொண்ணு கண்ணிலே ஜலம் விடறதைக் கண்டா எம் மனசு தாளல்லே தம்பீ...அதுங்கிட்ட கொஞ்சம் அன்பா ஆதரவாப் பேசக்கூடாதா?

ரகு: வேலய்யா! அவகிட்ட கொஞ்சி கிட்டு இருக்கிறது தவிர, எனக்கு வேற வேலை கிடையாதா?

வேல: அது வேண்டாம் தம்பீ, நீங்க மனஸ்தாபமா நடந்துக்கிற மாதிரி எனக்குப் படுது! உங்க கிட்ட பழைய ஆசையைக் காணோம். என்ன தான் அதுக்கு சுகமிருந்தாலும் கட்டிக்கிட்ட புருஷன் அலட்சியமாயிருந்தா என்ன பிரயோசனம் தம்பீ?

ரகு: வேலய்யா! அவளுக்கு வக்காலத்து வாங்கிக்கிட்டு நீ பேச வந்துட்டியா?

வேல: அது சொல்லியா தம்பீ நான் வரணும்? உங்க உப்பை நான் திங்கல்லே? உங்க சுகம்தானே என் சந்தோஷம்? நீங்க ஒற்றுமையாயிருந்தாத்தானே என் மனசு சந்தோஷமா யிருக்கும்.

ரகு: வேலய்யா...இப்ப ஒண்ணும் என்னைத் தொந்திரவு பண்ணாதே.

காட்சி 16

பம்பாயில் கம்பெனி பிராஞ்ச் மானேஜர் மது தன் வேலையாள் நந்தியுடன் பேசிக் கொண்டிருக்கிறான்.

மது: டேய்! கையிலே என்னடா?

நந்: ஒண்ணுமில்லீங்க...

மது: அந்தக் கையிலே....

நந்: ஒண்ணுமில்லிங்க. (சிகரெட்டை மறைக்கிறான்)

மது: சிகரெட்டா குடிக்கறே! கொடு அதை இப்படி...கொடுடா இங்கே!

நந்: (பயத்துடன்) இந்தாங்க எசமான்.

மது: தம்பி கோல்ட் பிளேக் சிகரெட்டல்ல குடிக்கிறாரு. குடிக்க வேண்டியதுதான்!

நந் : பாக்கெட்டுதான் கோல்ட் பிளேக். உள்ளுக்குள்ளே அக்பர் ஷாதான். காலணு ஒண்ணு.

மது : ஏண்டா அப்படி?

நந் : பேஷன் எஜமான்.. போலி கௌரவம்.

மது : அம்மா எங்கேடா?

நந் : என்னங்க எஜமான் இப்படி கேக்கறீங்களே. எங்கம்மா போயி ஆறு வருஷம் ஆச்சுங்களே.

மது : டேய் ... உங்கம்மாவையா நான் கேக்கறேன், மனோரமா எங்கடான்னு?

நந் : நம்ப அம்மாங்களா...டிரஸ் பண்ணிட்டிருக்காங்க. இதோ கூப்பிடறேன்.

காட்சி 17

ரகுவிடம் பேசுவதற்காக சரளா பயந்தபடி வருகிருள். அவன் முக பாவம் அவளை அவனிடம் நெருங்கவே அனுமதிப்பதில்லை.

சர : உங்ககிட்டே ஒண்ணு கேக்கணும்.

ரகு : என்ன கேக்கணுமோ, கேட்டுத் தொலையேன்!

சர : கோபிச்சுக்க மாட்டீங்களே!

ரகு : சொல்லு...

சர : நீங்க கம்பெனியை வித்துட்டீங்களாமே!

ரகு : ஜோஸ்யனைப் போய்கேளு!

சர : ஏன்? இதை நான் தெரிஞ்சுக்கக்கூடாதா? நான் என்ன குத்தம் செஞ்சேன்? நீங்க என்னை ஏன் இப்படி வெறுக்கிறீங்க? உங்க குழந்தை கிட்டயாவது உங்க அன்பைக் காட்டக் கூடாதா?

ரகு : சரளா ... இப்படியெல்லாம் பேச உனக்கு யார் கத்துக் கொடுத்தாங்க? ..வேலையைக் கவனி. போ!

சர : போயிடறேன் ..கம்பெனி வித்துட்ட விஷயம்?

ரகு : உனக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை.

சர : இது வரையிலே கம்பெனி விஷயத்திலே தலையிட்டிருக்கிறேனு?

ரகு : அதே மாதிரி யோக்யமா இனியும் நடந்துக்கோ!

சர : நீங்கள் ஆம்பிளே. எப்படி வேணும்னாலும் நடந்துக்கலாம். என்னையும் குழந்தையையும் அனுதைனு பிறத்தியார் சொல்ற மாதிரி விட்டுடாதீங்க...

ரகு : சரளா...இந்த விஷயத்திலே எல்லாம் நீ தலையிடாதே!மரியாதையா போயிடு! நம்ப நிலைமையை வேலைக்காரனுங்க பார்த்து கைதட்டி சிரிக்கப் போருங்க.

வேல : தம்பீ!

ரகு : ஏன் நிக்கறே? போக மாட்டே! நான் சொன்னு நீ போக மாட்டே, வேலய்யா, இவளை கீழே அனுப்பு.

வேல : நான் உங்க அடிமைதான் என்னைத் திட்டுங்க...அடிங்க..கொல்லுங்க...என்ன வேணும்னாலும் செய்யுங்க...ஆனு... இந்த வேலை மாத்திரம் எனக்கு வேணும் தம்பீ! உங்களையே நம்பி கைபிடிச்ச அதை நிர்க்கதியா விட்டுடாதீங்க தம்பீ!

ரகு : எனக்கு புத்தி சொல்ல வேண்டாம்!

வேல : புத்தியில்லே தம்பி புத்தியில்லே. இராப் பகலுமா இந்த மார் மீது போட்டு வளர்த்தேனே—அந்தப் பாசம். இந்த தோளிலே தூக்கி சுமந்தேனே—அந்த ஆசை...உங்களுக்கு நல்லது சொல்றேன் தம்பீ! உங்க குடும்பம் நல்லா வாழணும்னுதான் நான் தினம் தினம் வேண்டிக்கிறது.

ரகு : நிறுத்து வேலய்யா! நான் எஜமான்.உத்தரவிடறேன்!வெளியே போ..போகப் போறியா இல்லையா... வேலய்யா...

வேல : தம்பீ!

ரகு : வேலய்யா!

சரளாவுடன் கீழிறங்கிச் செல்கிருன் வேலய்யன்.

காட்சி 18

மனோரமா, ரகுவை உடனே புறப்பட்டு வரச்சொல்லி பம்பாயிலிருந்து கடிதம் எழுதிவிடவே, ரகு கட்டிய மனைவியையும் பிரிந்து பம்பாய் செல்லத் தீர்மானிக்கிருன்.

ரகு, மனோரமாவுக்கு அவள் விருப்பப்படி சென்னை கம்பெனியை விற்று விட்டதாகவும் பம்பாய் வரத் தீர்மானித்திருப்பதையும் கடிதம் மூலம் தெரிவிக்கிறான்.

மது : நம்ப திட்டங்கள் எல்லாம் அழகாகவே நடந்துட்டு வருது.

மனோ : அது எல்லாம் யாரால் தெரியுமா?

மது : என்னாலே கால் பங்கு, உன் கண்ணாலே முக்கால் பங்கு. இந்த சந்தோஷ சேதியைக் கொண்டாடறதுக்கு இன்றைக்கு ஒரு அழகான இங்கிலீஷ் பிக்சருக்கு போக வேணுமென்று விண்ணப்பம் செய்து கொள்ளுகிறேன்.

மனோ : நான் அதை ஆமோதிக்கிறேன்.

மது : ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

ரகு பம்பாய் போகத் தீர்மானித்திருப்பதை சரளாவுக்கு ஒரு கடிதம் மூலம் எழுதி வைத்து விடுகிறான்.

சரளா, இனி உன் எதிர்கால வாழ்க்கைக்கு வேண்டியது பணம். நீயும் உன் குழந்தையும், சந்தோஷமாக வாழ்வதற்கு இத்துடன் உன் பெயரில் ரூபாய் ஐம்பதினாயிரத்துக்கு செக் வைத்திருக்கிறேன்: என்னால் உனக்குச் செய்யக்கூடிய உபகாரம் அவ்வளவுதான். இனி என்னை மறந்துவிடு.

—ரகு

சர : வேலய்யா! என் குடும்பம் இப்படிக் கெட்டுப் போகும்னு நான் கனவுலே கூட நினைக்கிலேயே.

வேல : என்னம்மா செய்யறது... எல்லாம் கால வித்தியாசம். அவர் பம்பாய்க்குப் போயிட்டாரம்மா.

சர : பம்பாய்க்கா !... வேலய்யா ! நான் பம்பாய்க்குப் போகத் தீர்மானிச்சுட்டேன்.

வேல : நீ தனியாகவா குழந்தை !

சர : துணைக்கு மோகன் இருக்கான். எப்படியானாலும் நான் அவரைப் பார்க்காமல் திரும்பப் போறதில்லே. என்னையும் அவரையும் பத்தி யார் என்ன கேட்டாலும் நாங்க ரெண்டு பேரும் பம்பாய்க்குப் போயிருக்கிறதாத்தான் சொல்லணும். வேறு ஒண்ணும் சொல்லக் கூடாது.

வேல : சரி...குழந்தை !

பம்பாய்க்குக் கிளம்பி விடுகிறாள் சரளா.

காட்சி 19

பம்பாய் சேர்ந்து விட்ட ரகு, மது மனோரமா இவர்களின் வற்புறுத்தலின் பேரில் சினிமா பார்க்கச் செல்லும் போது வழியில் அவன் பர்ஸை ஒரு ரௌடி 'பிக்பாக்கெட்' செய்து விடுகிறான். அவன் திருடிக் கொண்டு ஓடுவதை ரகு பார்க்கிறான். அவன் தான் ரௌடி ராஜா ! ரகுவின் கூடப் பிறந்த தம்பி ! இந்த உண்மை அப்போது ஒருவருக்கும் தெரிவதில்லை. ராஜனும் தான் களவாடிய பர்ஸ் தன் அண்ணனுடையது என்பதை அறிவதில்லை.

ராஜா பர்ஸைப் பிரிக்கிறான்.

ராஜா : பூ...இவன் என்ன பெரிய மனுஷன். கரெக்டா நூறு ரூபாய் வச்சிருக்கான். பிச்சைக்காரப் பயல்! அட...ஆ...என் படம்...என் சின்ன வயசுப் போட்டோ !

ரகுவின் பர்ஸிலிருந்து கண்டெடுத்த படம் ராஜாவின் கடந்த கால நிகழ்ச்சிகளை நினைவூட்டுகிறது. சிறு வயதில் ரகு தன் சகோதரன் ரவியை தன் தேவைக்காகப் பணம் திருடச் சொல்கிறான். ரவி திருடுவதற்குத் தயங்கும்போது, ரகு தங்கள் தந்தை அசந்திருப்பதைக் கூறி சமயத்தைப் பயன்படுத்திக்கொள்ளச்சொல்கிறான். ஆனால், அண்ணன் பொருட்டு திருடத் துணிந்த ரவி, அவன் தந்தையிடம் கையும் களவுமாய்ப் பிடிபட்டு விடுகிறான். கோழை நெஞ்சம் படைத்த ரகு தான் குற்றவாளியல்ல என்று கூறி ரவியைத் தண்டனைக்குள்ளாக்கி விடுகிறான். ரவி அன்று வீட்டைவிட்டு விரட்டப்படுகிறான். 'திருட்டுநாய்...திருடியே பிழைச்சுக்கோ...போ' என்று தன் தந்தை ஆத்திரத்தில் சொன்னதையே வேத வாக்காகக் கொண்டு வாழத் தொடங்குகிறான் ரவி. அன்று சிறு திருட்டில் சிக்கிய ரவிதான் இன்று பம்பாயில் கைதேர்ந்த ரௌடி ராஜா! அந்தப் போட்டோ இந்த சிந்தனையைத் தூண்டிவிட்டது.

ராஜா : (பெருமூச்சு விட்டுக் கொண்டே) அன்று அண்ணனுக்காக பணத்தை எடுத்தேன். இன்று அண்

ணனிடமிருந்தே பணத்தைத் திருடினேன். (ராஜா மற்ருெரு படத்தை எடுக்கிருன். அது 'ரகு-சரளா'வின் திருமணப்படம்)

ராஜா : அண்ணி! அண்ணு!

ராஜா பர்ஸிலிருந்த விலாசத்தைக் கண்டு கொண்டு ரகுவைக் காண விரைகிருன்

காட்சி 20

ரகுவைக் காண அவன் தங்கியிருக்கும் மதுவின் இல்லத்திற்கு விரைகிருன் ராஜா. கூர்க்கா தடுப்பதையும் மீறி வீட்டினுள் நுழைந்து ரகுவைச் சந்திக்கிருன்.

ராஜா : வணக்கம், என்ன ஸார்! திகைச்சுப்போயிட்டீங்க? ஏன் அப்படி பார்க்கறீங்க..?

ரகு : நீ..நீ...

ராஜா : ஒரு நாடோடி...!

ரகு : நாடோடியா....அப்படின்ஞ!

ராஜா : தட்டிக்கேட்க ஆள் கிடையாது, நானே சர்வாதிகாரி.

ரகு : உன் பெயர்?

ராஜா : ராஜா!

ரகு : நீ பிறந்தது?

ராஜா : இந்த பூமியில்தான்.

ரகு : உனக்குச் சொந்த ஊர்?

ராஜா : இருக்கிற இடமெல்லாம் என் ஊர்தான்.

ரகு : உன் பிறப்பு வளர்ப்பைப் பற்றி உனக்கு ஒன்றுமே தெரியாதா?

ராஜா : இறந்த காலத்தைப்பற்றி நான் சிந்திக்கிறதே இல்லே ஸார்!

ரகு : ஏதாச்சும் பணம் தேவையா?

ராஜா : பணம் தேவைப்பட்டா நான் கேக்கற பழக்கமே இல்லீங்க ஸார்!

ரகு : அப்போ!

ஒரு வேலையாள் வக்கீல் வந்திருப்பதைத் தெரிவிக்கிருன்.

வக் : உங்க தம்பி சமாச்சாரத்தைச் சொல்லிவிடுங்க ஸார். சீக்கிரம் முடிச்சுடலாம்!

ரகு உள்ளே செல்கிருன்.

ரகு : அப்போ...என் தம்பி... செத்துப் போயிட்டான் ஸார். வீட்டை விட்டுப்போன ஐந்து வருஷத்திலே கராச்சியிலே கார் ஆக்ஸிடண்டிலே போனதாக சமாச்சாரம் வந்துட்டது ஸார்! (ராஜா ரகுவின் பேச்சைக் கேட்டு திடுக்கிருன். ரத்த பாசத்தை மறந்து அவன் பேசுவது அவன் உள்ளத்தை உருக்குகிறது)

வக் : அப்போ சரி, கையெழுத்துப் போடலாம்.

ரகு ஏமாந்திருந்த சமயம் அங்கிருந்த பர்ஸைத் திருடிக்கொண்டு ஓடிவிடுகிருன் நாடோடி ராஜா. ஆனல் வீட்டைவிட்டு வெளியேறும்போது அவன் மதுவின் கையில் அகப்படுவதால், அவன் ராஜாவை இழுத்துக் கொண்டு வருகிருன். மனோரமா காணமற்போன பர்ஸைத் தேடிக் கொண்டிருக்கிருள்

மது : வாடா, எங்கேடா ஓடுறே! உன்னே உள்ளே தள்ளரேன். மனோ! பார்த்தியா உன் பர்ஸ். இவ்வளவு கட்டுக்காவலே மீறி இந்தத் திருட்டு ராஸ்கல் உள்ளே புகுந்து பர்ஸைக் களவாடியிருக்கான். சொந்தக்காரன் மாதிரி. அடிச்சேன பல்லெல்லாம் உடைஞ்சிடும்.

ரகு : மது! வீண் கலாட்டா பண்ணுதீங்க, அந்த பர்ஸை நான்தான் அவருக்குக் கொடுத்தேன்.

ரகு சொல்லுவதைக்கேட்டு பர்ஸை ராஜாவிடம் கொடுத்து விடுகிருன் மது. மனோரமா அவனே அழைத்துக் கொண்டு டான்ஸுக்குக் கிளம்பி விடவே ரகுவும் ராஜாவும் தனித்திருக்கிருர்கள்.

ராஜா : இந்தாங்க ஸார் உங்க பணம்!

ரகு : ஏன் உனக்கு வேணுமா?

ராஜா : ஒருத்தர் இனம் தந்து அதனலே பொழப்பை நடத்துகிற சந்தர்ப்பம் இதுவரைக்கும் வாழ்க்கையிலே வாய்க்கவே இல்லே. இது நம்ப சொந்த சம்பாத்தியம் இல்லே.

ரகு : ஏதோ பாவம்னு நெனேச்சுக் கொடுத்தா...

ராஜா : என்ன ஸார், என் மேலே உங்களுக்கு அவ்வளவு கருணே?

ரகு : ஒண்ணுமில்லே....உன்னேப் போல ஏழைகளைக் கண்டா என்

மனசு தாங்காது. ஏதோ தெரியாம எடுத்துட்டே, பரவாயில்லே.

ராஜா : அடடா! ஏழைகளிடத்திலே உங்களுக்கு எவ்வளவு அனுதாபம். எவ்வளவு அனுதாபம் ஸார்!

ரகு : ஏம்பா இப்படிப் பேசறே?

ராஜா : மிஸ்டர்! என் ஏழ்மையைக் கண்டு பரிதாபப் பட்டுக் கொடுக்கிற பணத்தை வைச்சு என் பசியைப் போக்க நான் ரொம்ப வெட்கப்படறேன் ஸார்.

பர்ஸைப் போட்டுவிட்டுப் போகிருன் ராஜா.

காட்சி 21

கைக்குழந்தை மோகனை சுமந்து கொண்டு, கணவனைக் காண பம்பாய் வந்து சேர்ந்துவிடுகிருள் சரளா. விக்டோரியா டெர்மினஸிலிருந்து கிளம்பி வரும்போது சில ரௌடிகள் அவளைச் சூழ்ந்து கொள்கின்றனர்.

சர : ஐயா! நான் நிஜமாகவே இந்த ஊருக்குப் புதுசுதான். இங்கே தங்கறதுக்கு நல்ல சத்திரமா இருக்கா? இந்தப் பச்சைக் கொழந்தையோட ராத்திரி நேரத்திலே எங்கே தங்கப் போறேன்?

ரௌடி 1: அந்தக் கவலே உனக்கு வேண்டாம்மா! நாங்களெல்லாம் பார்த்துக்கிட்டிருப்போமா?

ரௌடி 2 : வாம்மா போகலாம்...

ஒருவன் குழந்தையை வாங்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்த போது மற்ருெருவன் சரளாவின் வாயைப் பொத்த வருகிருன். அவன் அவ்வாறு செய்வதை தூரத்திலிருந்து ரௌடி ராஜா பார்த்து விடவே, அவளைக் காப்பாற்ற ஓடி வருகிருன்.

ராஜா : நீ மனுஷன் இல்லே. பொம்பளைகிட்ட வந்து தைரியத்தைக் காட்ட வந்துட்டீங்களே! போடா சோதாப் பயலே!

ரௌடி 1 : டேய் கபீர்னு பிடிங்கடா, குபீர்னு விழுந்திடுவான். டேய் எல்லாத்தையும் ஏமாத்திகிட்டு அவன் தட்டிக்கிட்டு போகலாம்னு பார்க்கருண்டா. எனக்கு வர கோவத்திலே அவன் எலும்பெல்லாம் நொறுக்கிடுவேன்...ஆனு...

ராஜா அவர்களை மிரட்டி சரளாவையும் குழந்தையையும் தன்னுடன் அழைத்துச் செல்கிருன். அவனது பெருந்தன்மையைக் கண்டு, சரளா அவனைச் சந்தேகிக்காமல் பின் தொடருகிருள். ராணியின் வீட்டுக்கு ராஜா, சரளா, குழந்தை மோகன் மூவரும் போகின்றனர்.

வீட்டுக்குச் செல்லும் வழியில் ராஜாவிடம் சரளா தன் நிலேயைப் பற்றி விவரமாகக் கூறுகிருள். ராஜா அவள் நிலேக்குப் பரிதாபப் படுகிருன்.

ராஜா : அம்மா...உங்க நிலேமை எனக்குப் புரிஞ்சு போச்சு! உங்க பேரு எனக்குத் தெரியாது. ஆனு நீங்க ஏன் இங்கே வந்திருக்கீங்கன்னு எனக்குத் தெரியும்.

சர : ஆ. ....

ராஜா : அந்த உத்தமன் இங்கே தானிருக்கிருர்.

அவர்கள் திருமணத்தின் போது எடுத்த போட்டோவைக் காண்பிக்கிருன்.

சர : நீங்க யாரு? இந்தப் போட்டோ உங்களுக்கு ஏது?

ராஜா : சின்ன வயசிலே நானும் உங்க புருஷனும் ஒண்ணுத்தான் வளர்ந்தோம். ஒண்ணுகவே படிச்சோம். ஆனு, உங்க கல்யாணத்துக்கு மாத்திரம் என்னுலே வரமுடியாமல் போச்சு. உங்க திருமணப் போட்டோவை எனக்கு அனுப்பியிருந்தான் ரகு. இங்கேகூட ஒருநாள் அவனேச் சந்திச்சேன். என்னைத் தெரிஞ்சவனுகவே அவன் காட்டிக்கலே.

சர : என்னை அவர்கிட்டே அழைச்சிக்கிட்டுப் போக முடியுமா? அவர் செளக்கியமாகத்தானே இருக்கார்?

ராஜா : இருக்கார்...இருக்கார்... அவர் மேலே நீங்க வைச்சிருக்கிற அன்பைப் பார்த்து நான் ஆச்சர்யப் படறேன் அம்மா.

சர : அவர்தானே எனக்குச் சகலமும்.

ராஜா : அம்மா தாயே! தாலிகட்டினவன் தவிக்க விட்டுப் போய்ட்டாலும் அவனுடைய நல்வாழ்வுக்காக வேண்டிக்கிற உங்களைப்போல உத்தமிங்க இன்னும் கொஞ்சம் பேர்

இந்த நாட்டிலே இருக்கிறதுக்காகப் பெருமைப் படறேன். அவரை நீங்க பார்க்கணும்னு கொஞ்சம். பொறுமையா இருக்கணும்.

சர: சரி!

ராஜா: என்னுடன் வாங்கம்மா! அங்கே உங்களுக்கு ஒரு சகோதரி இருக்கா, வயசான கிழவரும் இருக்காரு. அங்கே எந்தவிதமான ஆபத்துமில்லாமே தங்கியிருக்கலாம். வாங்கம்மா! இருதயத்துலே கொஞ்சம் ஈரப்பசை இருக்கு தாயே! கொழந்தையை இப்படிக் கொடுங்க. வாடா கண்ணு.

காட்சி 22

(ராணியின் வீடு)

ராணி: வாங்க அக்கா.

கிழ: வாம்மா, இதை உன் வீடாட்டம் எண்ணிக்கோ! சங்கோஜப்படாதே!

ராஜா உடனே ரகுவைக் காணச் செல்கிருன். தோட்டத்தில் உலாவும் அவனைத் தனிமையில் சந்திக்கிருன் ராஜா.

Tonsils Without Operation

20 ஆண்டுகளாக, 'டான்ஸிஞல்' தொண்டையில் சதை வளர்ச்சியுள்ள 30000 கேஸ்களுக்கு மேல் ஆபரேஷன் இல்லாமலே நிரந்தரமான குணத்தை யளித்திருக்கிறது. ஆபரேஷன் செய்தும் குணமடையாத கேஸ்களை 'டான்ஸிஞல்' குணப்படுத்தியிருக்கிறது.

40 நாட்களுக்குத் தேவையான 'டான்ஸிஞல்' மாத்திரைகளும், ஸொல்யூஷனும் ரூ. 9-0-0
20 ,, ,, ரூ. 5-0-0

நாஸ்ட்ரிஞல் மூக்கில் ஏற்படும் சதை வளர்ச்சியை ஆபரேஷன் இல்லாமலே குணப்படுத்துகிறது. பெரிய புட்டி விலை ரூ. 4-8-0. சிறிய புட்டி ரூ. 2-8-0. தபால் செலவுபிரத்யேகம். ஆர்டருடன் பாதி பணத்தை முன்னதாக அனுப்பவும்.

டாக்டர் டி. அப்பாராவ் L.I.M.

(Tonsils, Ear, Nose, & Vitality Specialist) Phone: 2729

53, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை-1.

ரகு: ராஜா! அன்னிக்கு நீ எதுக்குப் பணத்தை எடுத்தே?

ராஜா: எடுக்கலியே, திருடினேன்.

ரகு: திருடினியா... இந்த கேவலமான திருட்டை விட்டு வேற நாணயமான தொழில் செய்யக் கூடாதா ராஜா?

ராஜா: உங்க உபதேசத்துக்கும் பரந்த மனேபாவத்துக்கும் ரொம்ப நன்றி. ஆனா, கண்ணாடி வீட்டிலே வசிக்கிறவங்க பக்கத்து வீட்டிலே கல்லை விட்டு அடிக்கக் கூடாது.

ரகு: நீ என்ன சொல்றே ராஜா?

ராஜா: நான் ஒண்ணும் சொல்லல்லே. நாணயத்தைப் பற்றி பிரமாதமா பேசறீங்களே, முதல்லே நீங்க யோக்யனா? உங்க மனசை கேட்டுப் பாருங்க.

ரகு: நீ என்ன சொல்றே ராஜா?

ராஜா: ஸார், இந்த அம்மாவை அடையாளம் தெரியுதா பாருங்க.

ரகு: இது உனக்கு எப்படி கிடைச்சுது?

ராஜா: நம்ம தொழில் மூலம் கிடைச்ச வருமானம் ஸார்! யார் ஸார் அது? உங்க மனைவின்னு சொல்லிக் கொள்ள வெட்கமா இருக்கா?

ரகு: இது என் சொந்த விஷயம்.

ராஜா: அதுதான் இல்லே. ஒரு பெண்ணுடைய வாழ்க்கையும் அதிலே அடங்கியிருக்கு! ரகு ஸார்! அந்த அம்மா என் வீட்டிலே என் ஆதரவுலே இருக்காங்க. ஏன் ஸார் திகைக்கறீங்க? அந்த அம்மா அனாதையா நாலு ரெளடிகளிடம் அகப்பட்டுக்கிட்டு அவஸ்தைப்பட்டப்போ நான் போய் காப்பாத்தினேன். இல்லேன்னா என்ன ஆகியிருக்கும்? உங்க மானம், மரியாதையெல்லாம் சந்தி சிரிக்க வச்சி, உங்க பேரையும் பேப்பரிலே டமாரம் அடிச்சிருப்பாங்க!

ரகு: என்ன?

ராஜா: உங்க வரலாறு பூராவும் எங்கிட்ட ஒப்பிச்சிட்டாங்க ஸார். உங்க புருஷனேடு உங்களைச் சேர்த்து வைக்கிறேன்னு சொல்லியிருக்கேன். அதுக்காகத்தான் உங்ககிட்டே வந்து அலைகிறேன். இல்லாட்டி உங்களுக்கும் நமக்கும் இன்ன இருக்குது?

ரகு: ராஜா! உனக்கு சம்பந்த மில்லாத விஷயம்.

ராஜா: கல்யாணம் ஆன பெண்ணை நிர்க்கதியாவிடறது பொது விஷயம் ஸார்!

ரகு: அது என்னிஷ்டம்.

ராஜா: ஒவ்வொருத்தரையும் அவங்க இஷ்டப்படி விட்டதனுல்தான் உலகம் குட்டிச்சுவராய்ப் போச்சு, ரகு ஸார்! நம்மைப் பத்தி நாலு பேர் கிட்ட விசாரிச்சுப் பாருங்க. நான் நல்லவனுக்கு நல்லவன், ரெளடிக்கு ரெளடி. சாதாரணமா எனக்குக் கோவம் வராது...வந்தது...?

ரகு: ராஜா! அவளுக்கு இன்னும் ஏதாவது கொஞ்சம் பணம் கொடுத்துடறேன். எப்படியாவது அவளை மெட்ராஸுக்கு அனுப்பிச்சுடு.

ராஜா: பணமா......நாகரீகம் தெரிஞ்ச பொம்பிளையா இருந்தா ரொம்ப ரொம்ப சந்தோஷப்படு வாங்க...அவங்க பத்தாம் பசலியா இருக்காங்களே. தன்னுடைய கண வனே வேணுங்கருங்க... நான் என்ன செய்யறது?

ரகு: கணவன் விரும்பலேன்னு?

ராஜா: விரும்ப வைக்கிறேம். அட விரும்பமாட்டாராமில்லே...!

ரகு: ராஜா!

ராஜா: என் பொறுமையைச் சோதிக்க வேணும். வீணு அழிஞ்சு போகாதீங்க...மனப்பூர்வமான அன்புக்கு மதிப்பு அந்த அம்மா. அழுது அழுது உருக்குலேந்து போகுதுங்க. ஒழுங்கா அந்த உத்தமியோடு ஊருக்குப் போய்க் குடும்பத்தை நடத்துங்க. இல்லே, நான் சும்மா இருக்கமாட்டேன்.

ரகு: மெதுவாகப் பேசு ராஜா. உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன். இந்த இடத்தை விட்டுப் போய்விடு. என் அந்தஸ்தைப் பாழ்படுத்தாதே!

ராஜா: அந்தஸ்து! அயோக்யத் தனத்துக்குப் பேரு அந்தஸ்து. கண்ட பெண்களின் கடைக்கண் வீச்சிலே கருத்தை இழந்து கயவனைப் போலச் சுத்தறது அந்தஸ்து! மனச்சாட்சிக்கு விரோதமா மனம் போனபடி வாழறதுதான் அந்தஸ்தா? கட்டின மனைவியை நடுத்தெருவிலே விட்டுட்டு கல்யாணமாகாத பெண்ணுேட காரிலே சுத்தறதுதான் அந்தஸ்து!

ரகு: ராஜா......!

ராஜா: விபசாரிகளை விலைக்கு வாங்கி வீட்டிலே வைத்து கும்மாளமடிக்கிறதுதான் அந்தஸ்து!

ரகு: ராஜா...!

ராஜா: ஏன், உண்மையைப் பேசினுல் உதறல் எடுக்கிறதா? உங்க இந்த உருக்குலேந்த நிலையை சீர்திருத்திக் கொள்ள உங்கள் பாழும் அந்தஸ்து இடம் கொடுக்கல்லியா?

ரகு கோபம் தாங்காமல் ராஜாவின் கன்னத்தில் அறைந்து விடுகிருன். ராஜா பதிலுக்கு அவனை எதிர்க்காமல் ஆத்திரத்தை அடக்கிக் கொள்ளுகிருன்.

ராஜா: வணக்கம்! வருகிறேன்.

ராஜா தன்னைச் சந்தித்துப் பேசி தன் மனுேவேதனையை அதிகரிக்கச் செய்து விட்டதை மறைமுகமாக மனுேரமாவிடம் கூறுகிருன் ரகு. அவனை இனி தன் வீட்டினுள் நுழைய அனுமதிப்பதில்லையென்று மனுே தீர்மானம் செய்து விடுகிருள்.

ரகு: உம்—அவன் எப்பவுமே கொஞ்சம் துடுக்கானவன். அவங்கப் பனுலே முனனுக்கு வந்தேன். இவன் எங்கெல்லாமோ அலைஞ்சிக்கிட்டு கஞ்சிக்கில்லாமே தவிக்கிருன். பணம் வேணும்னு என்னைத் தொந்திரவு பண்ணுருன். வேற ஒண்ணுமில்லே!

மனுே: அப்படியா!

காட்சி 23

(ராணி வீட்டில்)

ராஜா: ராணி எங்கேம்மா?

சர: டான்ஸ் கிளாஸுக்குப் போயிருக்கா.

ராஜா: இந்த வேலையை நீங்க தான் செய்யணுமா?

சர: இதிலே எனக்கு ஒரு ஆறுதல்.

ராஜா: உங்க புருஷனை நான் பார்த்தேன்.

சர: (திகைப்புடன்) பார்த்தீங்களா?

ராஜா: உங்க புருஷர் நேர் பாதையை விட்டுட்டு கண்ணை மூடிக் கிட்டு. கல்லிலும் முள்ளிலும் நடந்து போகிருரம்மா!

சர: என்ன சொறீங்க ராஜா...?

ராஜா: மனிதனுடைய மனோ தத்துவத்தைப் பற்றிச் சொல்றேம்மா. செல்வத்தின் மத்தியிலே...நீச்சலடிக் கும் எந்த மனிதனும் போகத்தை விரும்புகிருன். ஆண்டவன் அமைத் துத்தந்த ஆடம்பரங்கள் அத்தனையும் அனுபவிக்கணும்னு ஆலாப் பறக்கி ருன். பணவெறியிலேமிதக்கிற அவன் நீதியை மறக்கிருன். தருமத்தை அவ மதிக்கிருன். கையிலிருக்கும் சுவை யான பழத்தை விசி எறிந்துவிட்டு, உச்சாணி கிளையிலிருக்கும் வெம்பிப் போன காய்க்காக மரத்தின் மேலே தாவி ஏர்ருன்...

சர: போதும், நிறுத்துங்க ராஜா! இனிமேல் எதுக்காக உயிர் வாழணும்?

ராஜா: நீங்க அவசரப்பட்டு எந்தமுடிவுக்கும் வரவேண்டாமம்மா. உங்க புருஷர் வேருெரு பொம்பிளை யினுடைய மையலிலே சிக்கிஅறிவைப் பறிகொடுத்து வருகிருர். அவசரப் பட்டு எந்த முடிவிற்கும் வரவேண் டாம். என்னை நம்புங்க...நான் மனதார நேசிக்கும் ராணியின் மேலே ஆணையாக என் உயிரைக் கொடுத்தா வது உங்களை உங்கள் கணவரோட சேர்த்து வைக்கிறேன்.

சர: ராஜா!...

ராஜா: இந்த கண்ணிர்மாத்திரம் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது.

ராஜா சரளாவின் குழந்தை நோயாக இருப்பதால் டாக்டரை அழைத்துவர விரைகிருன்.

மனோரமாவைக் காதலிக்கும் ரகு அவ ளைக் கல்யாணம் செய்து கொள்ளத் தீர்மானிக்கிருன். ஆனல், கல்யா ணத்தைத் தவிர்த்து விட்டுத் தங்கள் திட்டங்களை நிறைவேற்ற முயற்சிக் கின்றனர் மதுவும் மனோரமாவும். ரகு கம்பெனி கணக்குகளைப் பார்வை யிட விரும்புவதாகத் தெரிவிக்கவும், மது பதட்டமடைகிருன். இருந்தும் சமயோசிதமாகத் தப்பித்துக் கொள்கி ருன். ரகு வரும் வழியில் ராஜா ஒரு வனிடமிருந்து 'பிக்பாக்கெட்' அடித் துச் செல்வதைக் காண்கிருன். பண மிழந்தவன் ராஜாவைத் தொடரும் போது தடுத்து நிறுத்தி தான் நஷ்டஈடை ஏற்றுக் கொள்வதாக வும், ராஜா தனக்கு வேண்டியவ ஞனதால் விட்டு விடும்படியும் கேட் டுக் கொள்ளுகிருன். ஆனல், ராஜா வைப் பிடித்து போலீஸில் ஒப்ப டைக்கத் தீர்மானிக்கிறது கும்பல். சாட்சி சொல்ல ஒருவரும் வராததால் ராஜாவை விட்டு விடுகிருர்கள். ரகு ராஜாவிடம் பேச ஆரம்பிக்கிருன்.

ரகு: ராஜா, இப்படி வா! நீ எதுக்காகத் திருடணும்?

ராஜா: ஆ...இது என் பிஸின ஸிலே சகஜம். அடி வாங்கறதும் உண்டு. கொடுக்கிறதும் உண்டு.

ரகு: நீ இப்படி இருந்தா உன்னை நாலு பேர் மதிப்பாங்களா?

ராஜா: நீங்க மதிப்புக்காக வாழ றதுனலே, மனச்சாட்சிக்காக நாங்க வாழவேண்டியிருக்கு.

ரகு: அப்போ எனக்கு மனச் சாட்சி இல்லேங்கறியா?

ராஜா: இருந்தா இப்பொ மரணத் தோடு போராடிக்கிட்டு இருக்கிற குழந்தையைப் பற்றிக் கவலைப்படா மல் இருப்பீர்களா?

ரகு: ஆ...என்ன?

ராஜா: அதுக்கு மருந்து வாங்கத் தான் மானத்தை விட்டுப்போகிறேன்

ரகு: என் குழந்தைக்காகவா நீ திருடி அடிபட்டே?

ராஜா: மற்றவங்க சுகத்துக்காக நான் எத்தனையோ தடவை அடிபட் டிருக்கேன்—வாழ்க்கையிலே.

ரகு: என் குழந்தைக்காக நீ...

ராஜா: உங்க குழந்தைதான். நீங்க ஒதுக்கித் தள்ளும்போது அதை காப்பாத்த வேண்டிய உரிமை எனக்கு இருக்கே...

ரகு: என்ன, உரிமையா?

ராஜா: ம்...நானும் மனுஷன் குழந்தையும் மனுஷனுகப் பிறந்து விட் டது. இரண்டும் மனுஷ குலம் பாருங்க. பார்த்துக்கிட்டு சும்மா இருக்க முடியுமா?

ரகு: ஏன், அவுங்க கஷ்டப்பட ணும்? நான்தான் பணம் கொடுக்கி றேன்னு சொல்றேனே?

ராஜா : பணமா, சரி கொடுங்க ஸார்!

ரகு : நாளைக்குக் காலையிலே வந்து ஐயாயிரம் ரூபாய் வாங்கிக்கோ.

ராஜா : பூ ..இவ்வளவுதானா?

ரகு : பத்தாயிரம்.

ராஜா : போதாதே.

ரகு : பதினைந்தாயிரம்.

ராஜா : ஹூஹூம்.

ரகு : இன்னும் எவ்வளவுதான் வேணுங்கறே?

ராஜா : சட்டரீதியா ஒங்க சொத்து முழுக்க வேணும்!

ரகு : என்ன?

ராஜா : ஏன் ஸார். பதர்றீங்க. சொத்து போயிட்டா, மாடமாளிகை, மின்சார விசிறி, திண்டு மெத்தை, மதுரசம், பணத்திற்காக பல்லை இளிக்கிற அந்தப் பரதேவதையினுடைய சல்லாபம் எல்லாம் பறந்து போயிடுமேன்னு பயப்படறீங்களா?

ரகு : ராஜா...!

ராஜா : ஏன் ஸார்! அடிக்கப் போறீங்களா? இதோ பார்த்தீங்களா, வைரம் பாய்ந்த கைகள். அன்னைக்கு அந்தக் கற்புக்கரசி முன்னாலே உங்களை அவமானப் படுத்த வேண்டாமுன்னு அடங்கிக்கிட்டேன். வீணா உங்க உடம்பை கெடுத்துக்கிடாதிங்க. அப்புறம் உங்க இஷ்டம்.

ரகு : உன்னை அடிச்சதுக்காக நான் வருத்தப்படறேன் ராஜா! உனக்கு நல்ல மனசு. பிறத்தியாருக்கு எவ்வளவோ உபகாரம் செய்யறே. ஆனா, உன் பேச்சுதான் இதயத்தில் உளி கொண்டு பிளக்கிறது போலிருக்கு.

ராஜா : அவ்வளவு பாறையாயிட்டுது! இன்னும் அந்த இதயம் உடையிலேன்னா சம்மட்டி வைச்சு தாக்கப் போறேன், ஜாக்கிரதை! உங்க குழந்தை, உங்க செல்வம், நீங்க சீராட்டி வளர்த்த மகன், உங்க ரத்தத்திலே பிறந்த ஜீவன். உங்க காதலிலே பிறந்த அன்புக் கனி. அவனுக்காகவாவது, அந்த பழைய பாக்கிக்கு உயிர் கொடுங்க! இல்லேனா நாசமாப் போயிடுவீங்க.

ரகு, ராஜாவிடம் ரூபாய் நோட்டுகள் சில தருகிறான்.

ராஜா : நீங்க ஒரு நல்ல முடிவுக்கு வருகிற வரைக்கும் இந்தப் பிச்சைக் காசை செலவு பண்ண நான் தயாராக இல்லே.

ரகு : என்மனசு சரியாயில்லே ராஜா !

ராஜா : எங்கோ ஒரு மூலையிலே உரைச்சிருக்காப்பிலேருக்கு. நல்லா யோஜனை பண்ணுங்க ஸார், நல்லா யோஜனை பண்ணுங்க. மறுபடியும் சந்திக்கிறேன், உங்களை.

ராஜா பிரிந்து செல்கிறான்.

காட்சி 24

நாட்டியம் பார்க்கச் சென்ற ரகு, மது, மனோ மூவருக்கும் கலா மண்டல் டைரக்டர் ராணியை அறிமுகம் செய்து வைக்கிறார்.

டைர : ராணி நம்முடைய நாட்டிய மண்டலியிலேயே சேர்ந்து கொஞ்ச நாள் தான் ஆகுது.

மது : அதுக்குள்ளே என்ன ஆட்டம். நாட்டியத்திற்கு இந்தப் பெண் பிறந்திருக்கா அல்லது இந்தப் பெண்ணுக்காக நாட்டியம் பிறந்திருக்கானு எனக்கு இன்னும்புலப்படவே இல்லே.

டைர : (கிழவனைக்காட்டி) இவர் தான் பெண்ணின் தகப்பனார்.

மது: ஐ ஆம் வெரி கிளாட் டு மீட் யூ !

நாட்டியம் முடிந்து கிளம்புகிறார்கள்

கிழ : அப்போ, எங்களுக்கு நேரமாச்சு, வரட்டுங்களா?

மது : அப்போ உங்கவீடு எங்கே?

கிழ : கௌரோஜி தோட்டத்திலே!

மது : கௌரோஜி தோட்டத்திலா? சரியாய்ப் போச்சு. நம் வீட்டுப் பக்கத்திலேதான். அப்ப எங்க வீட்டுக்கு வந்துட்டு போங்க.

மனோ : நம்ப காரிலேயே போயிடலாம் ராணி!

ராணி : உங்கள் அன்புக்கு நன்றி. இன்னொருநாள் வர்றேன் அக்கா...

ரகு : என் காரிலே இடமிருக்கே!

மது : இடமில்லேன்னு டிரைவரை நடந்து வரச் சொன்னால் போச்சு. அதுகென்ன நடந்து வர்ரான்....

டைர : இவ்வளவு வற்புறுத்தினப்புறமும் மறுக்கக் கூடாதம்மா.

மது : அதுதானே?

கிழ : அம்மா....அம்மா....அவுங்க வீட்டுக்குத்தான் போயிட்டுத்தான் போவலாமே.

மனோ : வா...ராணி, போகலாம் வா.

மது : போங்க...போங்க...

மனோ : வாங்க...

(ரகு வீட்டில்)

ரகு : உங்க பொண்ணுடைய டான்ஸ் ரொம்ப பிரமாதமாஇருந்தது.

மது : ஆஹா...ஏ ஒன்! ஏ ஒன்!

கிழ : எல்லாம் உங்க தயவுதான்.

ரகு : மது, எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு.

மது : சரி...நீங்க போங்க...நான்...

கிழ : நமஸ்தே!

(ரகு போகிறான்)

கிழவனைத் தன் வலையில் சிக்க வைத்து ராணிக்குப் பரிசாக சில பொருள்களைக் கொடுத்து அவளையும் தங்கள் வலையில் வீழ்த்த முயற்சிக்கிறாள் மது. கள்ளங்கபடமற்ற ராணியும் கிழவனும் அவர்கள் பரிசாக அளிக்கும் பொருள்களைப் பெற்றுச் செல்கின்றனர்.

மது, பரிசாக அளித்தவற்றைப் பெருமையுடன் அணிந்து கொண்டு வரும் ராணியை இழித்துக் கூறி, தான் விரும்பிக் கொடுக்கும் பொருளை அலட்சியப்படுத்தி விட்டு, எவனோ கொடுப்பதை விருப்பமாக அணிந்து கொள்வதைக் கண்டிக்கிறான் ராஜா. தன் தவறையுணர்ந்த ராணி, அவன் மனதை நோக வைக்க விரும்பாமல் இனி அவனைத் தவிர, வேறு யார் எதைக் கொடுத்தாலும் அவன் விருப்பமின்றி பெற்றுக் கொள்வதில்லை என்று வாக்குக் கொடுத்து விடுகிறாள். ஆகவே, கிழவன் மறுபடியும் மது, மனோரமா இவர்களைக் கண்டு வரக் கூப்பிடும் போது ராணி அங்கு வர மறுத்து விடுகிறாள்.

ராணியின் எதிர்காலத்தை சோபிக்கச் செய்யத் தாங்கள் திட்டமிட்டிருப்

பதாகக் கூறும் மதுவின் வார்த்தைகளில் மயங்கிவிட்ட கிழவன், ராணியின் முன்னேற்றத்துக்கு அவளை மணக்கவிருக்கும் ராஜாவை சம்மதம் கேட்கவேண்டுமென்று கூறுகிறான். ‘ராஜா’ என்று கிழவன் சொன்னதும் மதுவும், மனோரமாவும் தங்கள் திட்டத்தின் வெற்றிக்குக் கிழவன் மகள் ராணியைக் கருவியாக்கிக் கொள்ளத் தீர்மானிக்கின்றனர். ராணி–ரகு இருவரையும் சேர்த்து விட்டால், நாடோடி ராஜா ஆத்திரங் கொண்டு ரகுவை ஒழிக்க முயலுவான்- ஆகையால் மனோரமா ரகுவின் காதலுக்குப் பாத்திரமாக வழியின்றி தன்னுடன், தாங்கள் ஏற்கனவே தீட்டியிருந்த திட்டப்படி இன்ப வாழ்க்கை நடத்தலாம் என்று முடிவு செய்து கொண்டு, ராஜாவை, ராணியிடமிருந்து பிரிக்க வேண்டி, கிழவனின் மனதைக் கலைத்து விடுகிறான் மது.

காட்சி 25

(மனோரமா வீடு)

மது : வாங்க...வாங்க...

கிழ ; நமஸ்காரம்.

மனோ ; ராணி வரல்லியா?

கிழ : அவ இன்னிக்கு வரலீங்க?

மது : ஏன் வரல்லே ... ஏதுக்கு, வரல்லே...எப்படி வராம ,இருக்கலாம்? உங்க பொண்ணுக்கு கொஞ்சம் புத்தி சொல்லுங்க.

கிழ : அதுக்கில்லீங்க, எங்க வீட்டிலே ராஜானு ஒரு பிள்ளை இருக்கிறான். அது மேலே அவளுக்கு அளவு கடந்த ஆசை. அவன் கிழிச்ச கோட்டை அது தாண்டாதுங்க.

மது கிழவனுடன் பேசிக் கொண்டிருக்கும் போது மதுவின் வேலைக்காரன் நந்தி வருகிறான். நந்தியைத் தனிமையில் சந்திக்கிறான் மது.

நந் : தெரிஞ்சுகிட்டு வந்துட்டேன் எஜமான்.

மது : என்னடா தெரிஞ்சுகிட்டே...சபாஷ். சொல்லு, சொல்லு.

நந் ; என்ன ஓட்டம் ஓடி வந்தேன் தெரியுமா?

மது : சரி...சொல்லு...சொல்லு...

நந் : அவளுக்கு அப்பா அம்மா கிடையாதாம்.

மது : அப்பா அம்மா கிடையாதா?

நந் : ஆமா...

மது : சீக்கிரம் சொல்லப்பா...

நந் : மூச்சு வரமாட்டேங்குது எஜமான்.

மது : அப்புறம் வரும் சொல்லு.

நந் : அந்த நாடோடி வீட்டிலே யாரோ சரளாங்கற ஒரு பொண்ணு இருக்காளாம். அவளுக்கு ஒரு பிள்ளை இருக்குதாம்.

மது : பிள்ளையா...எந்த ஊரிலே ருந்து வந்திருக்கா...?

நந் : மதராசிலேருந்து புருஷனை தாரை வார்த்து விட்டு இங்கே வந்து விட்டாளாம். அவளுக்கு ராஜா உதவி செய்யருணும்.

மது : சரளாங்கற ஒரு பொண்ணு. அவளுக்கு ஒரு குழந்தை. அவங்க ரெண்டு பேருக்கும் ராஜா 'ஹெல்ப்' பண்ணருன்...இல்லே?

நந் : ஆமா......அப்படீனு நம்பத் தகுந்த வட்டாரங்களிலிருந்து இந்த செய்தி கிடைச்சுது.. .எசமான்... .எச மான்...

மது : என்னடா?

நந் : ஒரு டீ வேணும்!

மது : என்னது? டீ...வேணுமா, யாருடா இவன், பெரிய ஸி. ஐ. டி. வேலையில்லே பண்ணிட்டு வந்திருக் கான். டீ வேணுமாம்! டேய் மாட்டுத் தொட்டியிலே கழுநீர் தண்ணி இருக்கு அள்ளிக்குடி, சரியாப்போயிடும்.

நந் : என்ன எஜமான்? எவ்வளவு இன்டரெஸ்டா ஓர்க் பண்றேன்... பச்சை தண்ணிகூட.

மது : அட சீ...போடா.

அவனை அனுப்பிவிட்டு கிழவனிடம் வருகிருன் மது.

மது : அன்னிக்கே சொல்ல ணும்னு நெனைச்சேன். அவனைப்பத்தி ஆனா...சே...நம்ப கண்ணுலே பார்க் காமே எப்படிச் சொல்றதுன்னு பேசாம இருந்துட்டேன்.

கிழ : என்னுங்க, எனக்கு ரொம்ப நாளாத் தெரியும் அவனை...

மது : எனக்கும் அவனை ரொம்ப நாளாகவே தெரியும்.

கிழ : ரொம்ப தங்கமான பிள் ளைங்க...அதுக்கும் ராணிக்கும் கல்யா ணம் கூட நடக்கப் போகுதுங்க.

மது : ஐயய்யோ....கல்யாணமா... என்ன பெரியவரே இது?

கிழ : ஏன், என்னங்க?

மது : நான் ஒண்ணு சொல்லட் டுமா? ஷோக்கா டிரஸ் பண்ணி நிறைய நகை போட்டு உங்க பொண்ணை கூட்டிண்டு போயி பாதாளமான ஒரு பாழும் கிணத் தைப் பாருங்க, பெரிய பாறை நடு விலே இருக்கணும். பேசாம பிடுச்சி தள்ளிடுங்க.

கிழ : (பதட்டத்துடன்) என்ன அப்படிச் சொல்றீங்க?

மது : என்னங்க போயும் போயும் ஒரு திருடனுக்கா—ஒரு ஸ்திரீ லோலனுக்கா உங்க பொண்ணைக் குடுக்கிறீங்க...?

கிழ : ராஜாவா ஸ்திரீலோலன்!

மது : பெரியவரே! உங்க வீட்டிலே சரளாங்கற ஒரு பொண்ணு இருக் காளா?

கிழ : இருக்குதுங்க.

மது : இருக்குதல்ல. அதுக்கு ஒரு குழந்தை இருக்கல்ல?

கிழ : ஆமாம்.

மது : சரிதான். அப்புறம் என்ன? அவ்வளவுதான். தீர்ந்து போச்சு.

கிழ : என்னுங்க. இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?

மது : எப்படித் தெரியுமா? பிரே யின், பிரெயின். அந்தக் குப்பையை எல்லாம் ஏன் கிளறுறீங்க?

கிழ : விஷயத்தைச் சொல்லுங்க.

மது : விட்டுத்தள்ளுங்க பெரிய வரே, அதெல்லாம் பழைய கதை, பழைய கதை.

கிழ : பரவாயில்லே சொல்லுங்க.

மது : இங்கே வாய்யா. இவனுக்கு அந்தப் பொண்ணு பழைய சிநேகிதி.

கிழ: அப்படியா சமாச்சாரம்.

மது: ஆமாய்யா ஆமாம். பட்டணத்திலே புருஷனை வைச்சிட்டு இங்கே ஓடிவந்துட்டா. அதானேயா இவன் மறைக்கிறான்.

கிழ: ஆமா, அந்தக் கொழந்தை?

மது: என்னய்யா இப்படிக் கேட்கிறே? இது உனக்குத் தெரியலே! அவன் மாதிரியே இல்லே. அவனுக்குத்தானய்யா பிறந்தது. அது தன் புருஷனுக்குத் தெரிஞ்சு போகவேதான் சொல்லாமக் கொள்ளாமல் ஓடி வந்திருக்காங்க.

கிழ: பின்னே ஏன் புருஷனை நெனைச்சுகிட்டு அழறா?

மது: என்னய்யா இப்படிக் கேட்கிறே? அடபோய்யா, அவ புருஷனை நினைச்சுக்கிட்டா அழறா? இல்லே, அவனை கல்யாணம் பண்ணிக் கொள்ளும்படி கேட்கிறா. அதுக்கு அவன் என்ன சொல்றானாம்—ராணியைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு பணம் சேர்த்துக்கிட்டு இவளைக் கல்யாணம் செய்துக்கறதா சொல்றானாம்.

கிழ: இவ்வளவு தூரம் ஆயிடுச்சா?

மது: ஒருவேளை, தன்னை எங்கே மோசம் செய்துடுவானோன்னு நினைச்சுக்கிட்டு அழுகிறாய்யா அந்தப்பெண். என்னமோ உங்க பொண்ணுடைய நன்மையை உத்தேசித்து சொல்றேன். இதெல்லாம் உங்க பொண்ணுக்குத் தெரிய வேண்டாம்.

கிழ: அயோக்ய ராஸ்கல், கூட இருந்தே குடியைக் கெடுத்துட்டானே சண்டாளன். இன்னிக்கே அவனை வீட்டை விட்டுத் தொரத்தாட்டி பாருங்க. என் வயிறு எரியுதே.

மது: அட இரய்யா, ஆனா உங்க பொண்ணு இதுக்கு சம்மதிப்பாளோ?

கிழ: சம்மதிக்காம போனா தோலை உரிச்சு தொங்கவிடமாட்டேனா? விஷம்னு தெரிஞ்சு எவனாச்சும் குடிப்பானுங்களா?

கிழவன் ராஜாவின் மேல் அடங்காத ஆத்திரமடைகிறான். மதுவின் துர்ப்போதனைக்குப் பலியான அவன் தான் கார் விபத்துக்குப் பலியாக இருந்தபோது உதவிய உத்தமன் ராஜாவை வீட்டை விட்டுத் துரத்த விரைகிறான்.

காட்சி 26

கிழவன் வீட்டையடைந்ததும் சந்தேகம் ஊர்ஜிதமாகும் வகையில் அங்கு ராஜாவும் சரளாவும் பேசிக்கொண்டிக்கின்றனர். மனம் வெதும்பி வாழ்க்கையில் இன்பம் காணாது, எதிர்காலத்தில் அவநம்பிக்கை கொண்டு சாகத்துணிந்த சரளாவுக்கு ஆறுதல் கூறிக்கொண்டிருந்த ராஜாவை கிழவன் தன் சந்தேகக் கண்கள் கொண்டு பார்த்து 'துரோகி' என்று தீர்மானித்து விடுகிறான்.

சர: ராணி மேலே இருக்கிற ஞாபகத்திலே எனக்குக் கொடுத்த வாக்குறுதியை மறந்துடப் போறீங்க.

ராஜா: மறக்கவா? எப்பவும் அந்த வாக்குறுதியின் ஞாபகம்தானே எனக்கு? அந்த சந்தோஷ வாழ்க்கைக்குத்தானே நானும் முயற்சி பண்ணிக்கிட்டிருக்கேன்.

சர: உங்களைத்தான் நம்பிக்கிட்டிருக்கேன்.

ராஜா: இன்னும் கொஞ்சகாலம் பொறுத்துக்குங்க.

கிழவன் திடீரென்று பிரவேசிக்கிறான்.

கிழ: இந்தக் குடியைக் கெடுக்கிறதுக்கு—அதுதானே?

ராஜா: (திடுக்கிட்டு) என்ன தாத்தா இது?

கிழ: தாத்தான்னு இன்னொரு தடவை கூப்பிடாதேடா! மோசக்காரப் பாவி! உன்னை யோக்யன்னு நம்பினதுக்கு நீ இதுவும் செய்வே இன்னமும் செய்வேடா. என் பெண்ணை மயக்கி என் குடும்பத்தையே நாசமாக்க வந்த பாவி!

சர: தாத்தா!

கிழ: நாசக்காரி...பேசுறியா இங்கே? பத்தினிபோல பசப்பவா பார்க்கறே? நீ சாகசம் பண்ணி சதி செய்யவா இந்த விட்டிலே காலடி வச்சே? இன்னும் என்னை முட்டாள்னு நினைச்சுக்கிட்டியா? உங்க நாடகம் வெட்ட வெளிச்சமாயிடுச்சு. கள்ளப் புருஷனோட சரஸமாடறதுக்கு இந்த வீடுதானா கிடைச்சுது? விபசாரி!

சர: ஹா...!

ராஜா : தாத்தா!

கிழ : துடிக்குதா மனசு? விஷயம் தெரிஞ்சு போச்சேனு வேதனை படறியா?

ராஜா : நிறுத்துங்க! என்னைப் பத்தி எதுவேணுமானுலும் சொல் லுங்க. இந்த உத்தமியைப்பத்தி ஒரு வார்த்தை சொன்னுகூட பொறுக்க மாட்டேன்...

கிழ : எப்படி பொறுப்பே? ரெண்டு பேருமா சேர்ந்துகிட்டு வய சான கிழவன்தானே, ஏமாத்திப்புட லாம்னு பார்த்திங்க...மானமுள்ள ஜன்மங்கள்ாயிருந்தா இந்த வீட்டிலே ஒரு க்ஷணம் கூடத் தங்கக்கூடாது.

ராணி : என்னப்பா இது?

கிழ : இந்தப் படுபாவிக்குப் பரிஞ்சு பேசாதே ராணி! உள்ளே போ! இன்னும் என்னடா பாக்கறே! என் மகளை கல்யாணம் பண்ணிக் கிட்டு அவளை வாழாவெட்டியாக் கிட்டு விபசாரியோட ஓடறதுக்குச் சூழ்ச்சி பண்ணின சண்டாளன் தானேடா?

ராஜா : தாத்தா!

ராணி : அப்பா! என்னப்பா இது, பைத்தியம் பிடிச்சவங்க மாதிரி பேசறீங்க?

கிழ : இன்னொரு தடவை இவன் பெயரை சொன்னுக்கூட உன் நாக்கை துண்டிச்சுப் போடுவேன்.

ராஜா : அம்மா, புறப்படுங்க. இனிமே ஒரு நிமிஷம்கூட இங்கே தங்கப்படாது. மத்தவங்களுக்கு உப சாரம் செஞ்சி அதனுலே துரோகி, சண்டாளன்னு பேரை எடுக்கிறதிலே நான் சந்தோஷப்படறேன்.

ராஜா சரளாவுடன் மோகனை எடுத் துக் கொண்டு கிளம்புகிருன்.

ராணி : ராஜா என்னையும் கூட் டிக்கொண்டு போங்க ராஜா!

கிழ : என்ன துணிச்சல் உனக்கு? பெத்த அப்பன் நான் சொல்றேன்? நாடோடியின் பின்னுலே ஓடறியா. தாயில்லாத பொண்ணுனு அருமை கண்ணு மாதிரி வளர்த்தேனே.. அதுக்குப் பலனு இது? மானங் கெட்டவளே...

ராணி : அப்பா! அப்பா! நான் அவங்களோடத்தான் போவேன்.

கிழ : என்ன அவனோட போவியா? என் கையாலே கொலை பண்ணினுலும் பண்ணுவேனே தவிர, அவனோட போறதை பார்த்துக்கிட்டு இருப்பேனு நினைக்கிருயா?

ராணி : கொலை பண்ணுங்கப்பா ...நான் தயாராயிருக்கேன் சாவ தற்கு...

கிழ : என்ன சொன்னே...என்ன சொன்னே?

கிழவன் ராணியை கோபாவேசத் தில் அடிக்க நெருங்கும்போது ராஜா குறுக்கிடுகிருன்.

கிழ : நீ யார்ரா தடுகறதுக்கு?

ராஜா : (ஒரு கத்தியை எடுத்துக் காட்டி) தாத்தா என்னைக் கொலை பண்ணுங்க. கள்ளங் கபடு தெரியாத பொண்ணு ராணி. அவளை இம்சிக்க வேண்டாம். என்னைக் கொலை பண் ணுங்க. அமைதி எங்கே, அமைதி எங்கேனு அலயற எனக்கு மரண அமைதியாவது கிடைக்கட்டும் உங்க கையாலே. ஏன், தயங்கிறீங்க. உங்க கையாலே கொல்லுங்க.

ராணி குறுக்கே வந்து விடவே கிழவன் ஒன்றும் செய்ய இயலாமல் தவிக்கிருன்.

ராணி : அப்பா!

கிழ : ராஜா நீ போயிடு! இந்த வீட்டை விட்டுப் போயிடு. மூளை குழம்புது. ரத்தக் கொதிப்பு ஏற் பட்டு நான் செத்துப் போயிடுவேன். போ ராஜா போ.

ராஜா : தாத்தா! உங்க மூளை குழம்பல்லே...தாத்தா உங்க மூளை யை யாரோ குழப்பியிருக்காங்க... எச்சரிக்கிறேன். ராணியை மாத்தி ரம் ஜாக்கிரதையா பார்த்துக்குங்க.

ராணி : ராஜா...என்னை விட்டுட் டாப் போறீங்க?

ராஜா : ஆமாம் ராணி! நீ என் னேட வந்துட்டா இந்த தள்ளாத வயசுலே உங்கப்பாவுக்கு ஆதரவு யார்?

ராணி : அப்பா, நல்லா இருந்தா குடும்பத்தை பிரிச்சுட்டீங்களே அப்பா. ஏன் அப்பா உங்க புத்தி இப்படி மாறிப் போச்சு.

கிழ : என் மனசை கெடுக்காதே யம்மா!

கிழவனிடமும் ராணியிடமும் விடை பெற்றுச் செல்கின்றனர் சரளாவும், ராஜாவும்.

சரளாவை இனி காப்பதற்கு தகுந்த வழியில்லாத ராஜா, ரகு தங்கியிருக்கும் மதுவின் வீட்டிற்கு அவளை அழைத்துச் செல்கிறான்.

காட்சி 27

ராஜா : வணக்கம் ஸார்!

ரகு திகைப்புடன் திரும்புகிறான். ராஜா, சரளா, குழந்தை மோகன் இவர்களைப்பார்க்கவும் அவன் திகைப்பு அதிகமாகிறது.

ராஜா தன் உண்மை விவரங்களை அம்பலமாக்கி விடுவானோ என்று பயப்படுகிறான் ரகு.

மனோ : அவயாரு?

ராஜா : ஒரு அனாதை!

மனோ : அனாதையா. அந்தக் குழந்தை?

ராஜா : அவ புருஷன் மூலமாய் அவளுக்குப் பிறந்தது?

மனோ : அப்படியானா அவ புருஷன் எங்கே?

ராஜா ; அவ புருஷனை இழந்து விட்டவ தாயே!

மனோ : பாவம், இந்த அனாதை அமங்கலியை...

ராஜா : அமங்கலின்னு நான் சொல்லலீங்களே!

மனோ : புருஷனை இழந்தவனா சொன்னியே?

ராஜா : ஆமா அம்மா. கைபிடிச்ச கன்னியை கண்கலங்க வச்சிட்டு கள்ளக் காதலியோட சல்லாபம் செய்யறவங்களைப் பற்றி வேறென்னம்மா சொல்ல முடியும்?

மனோ : யார் அந்தப் படுபாவி?

ராஜா : மானங்கெட்ட ஒரு பெண்ணுடைய தளுக்கிலும் மினுக்கிலும் மனதைப் பறிகொடுத்த ஒரு அப்பாவி!

ரகு : ராஜா...!

மனோ : இந்த மாதிரி கேஸ் நான் அடிக்கடி ரொம்ப கேள்விப்பட்டிருக்கிறேனே!

ராஜா : அம்மாவுக்கு என்னா உலக அனுபவம்! என்னா உலக அனுபவம்!

சரளாவை வேலைக்கு வைத்துக் கொள்வது பற்றி ரகுவின் சம்மதத்தை மனோ கேட்கிறாள். அவன் அதைப் பற்றி அவளையே முடிவு கட்டச் சொல்கிறான்.

மனோரமா சரளாவை வேலைக்காரியாக ஏற்றுக் கொள்கிறாள்.

மனோ : சரி வாம்மா, போகலாம்!

சரளா அவளைப் பின் தொடருகிறாள். ராஜாவைத் தனிமையில் அழைத்துப் பேசுகிறான் ரகு.

ரகு : என் நிம்மதியையே பாழ் படுத்திட்டே ராஜா!

89681

ராஜா : நிலைகெட்ட மனுஷனுக்கு நிம்மதி எப்பவுமே கிடையாது ஸார்! சத்தியத்தை மறந்தவங்களுக்கு சந்தோஷம் வராது. சலன புத்தி உள்ளவனுக்கு என்றைக்குமே சாந்தி கிடையாது. உள்ளே ஊழல்களை வச்சிக்கிட்டு ஊருக்குப் பெரிய மனுஷனா வாழ ஆசைப்படற நீயும் ஒரு மனுஷனா?

ரகு : போதும் நிறுத்து! உன் இஷ்டப்படி யெல்லாம் பேசலாமென்று நினைப்பா? உன்னாலே என் கௌரவம், அந்தஸ்து, மதிப்பு....

ராஜா : அந்தஸ்து! கௌரவம்! அந்தஸ்து! இன்னும் ஒரு வாரத்தில் அந்த உத்தமியை உன் பத்தினி ஸ்தானத்தில் நான் பார்க்கவில்லையானால் கோர்ட்டிலே நிக்க வைத்து உன் கொட்டத்தை அடக்குவேன். சமூக மேடையிலே ஏற்றி உன்னை சந்தி சிரிக்கச் செய்வேன். மனச்சாட்சியை மறந்து அந்தஸ்துக்கு அடிமையாகி போலி வாழ்க்கை நடத்தும் உன் முன்னால் நானே நீதி தேவனாகத் தோன்றி கடைசி மூச்சு உள்ள வரையில் நியாயத்துக்குப் போராடுவேன். நினைவிருக்கட்டும்! என் இறுதி எச்சரிக்கை இது!

ரகு : (நடுங்கியபடி) ராஜா!

ராஜா : வணக்கம் (போகிறான்)

சரளாவைச் சந்திக்கிறான் ரகு.

ரகு மேலும் இருபதாயிரம் ரூபாய் கொடுப்பதாகவும், விரைவில் அங்கிருந்து போய்விடும்படியும் சரளாவை வற்புறுத்துகிறான். சரளா அவனை மிகவும் கெஞ்சிக்கேட்டுக் கொள்ளவே முடிவில் அவனை அங்கிருக்க அனுமதிக்கிறான்.

காட்சி 28

ராஜா இரவில் ராணியைச் சந்திக்கச் செல்கிறான். சரளா, மோகன் இவர்களைப் பற்றி விசாரித்த ராணிக்கு விஷயத்தைக் கூறி விட்டு தான் பரிசாகக் கொண்டு வந்திருக்கும் நெக்லஸை அவளைப் போட்டுக் கொள்ளும்படி சொல்லுகிறான். ஆனால், அது திருட்டுச் சொத்து என்பதை அறிந்து ராணி வெறுக்கிறாள்.

ராணி: ராஜா! இதைப்பத்தி நினைக்கிற ஒவ்வொரு நிமிஷமும் என் மனசு எவ்வளவு வேதனை படுகிற துங்கறது உங்களுக்குத் தெரியுமா? அன்பே உருவான என் இன்ப ராஜா ஒரு ஜோப்படி திருடர்னு பெருமையா சொல்லிக்கிறதை நான் ரொம்ப வெறுக்கிறேன் ராஜா. இது எந்த ஏழைக்கிட்ட பிக்பாக்கெட் அடிச்ச பணமோ! இதைப் பறி கொடுத்தவன் வயிறு எப்படியெல்லாம் எரியுதோ? ராப்பகலாக உழைத்து தன் குடும்பத்தோட பசியைப் போக்கணும்னு இருந்த பணம் என் மார்பில் மாலையாகப் புரளணும்கறீங்களா? நம்ப வாழ்க்கையிலே இருக்கும் இந்தக் கறையைப் போக்க மாட்டீங்களா? உன் புருஷன் ஒரு ஜோப்படித் திருடன்னு மற்ற பெண்கள் பார்த்து சிரிச்சு கேலி செய்யும் நிலைமைக்கு கொண்டுவரா தேயுங்கள் ராஜா! கால் வயிற்றுக் கஞ்சி குடிச்சாலும் மானத்தோடு வாழணும் ராஜா!

ராஜா: ராணி—என்னை மன்னிச்சிடு. இனிமே நான் திருடவே மாட்டேன். 'சத்தியமா திருடவே மாட்டேன்'. ராணி என்னை நீ புது மனுஷனா மாத்திட்டே...

ராணி: ராஜா! இப்பதான் நீங்க நல்ல ராஜா!

ராணியின் விருப்பப்படி மாலையைத் திருடின இடத்திலேயே சேர்க்கச் சென்ற ராஜா, போலீஸார் வசம் சிக்கி விடுகிறான்.

ராணி: அப்பா! ராஜாவை போலீஸ்காரங்க பிடிச்சுகிட்டுப் போயிட்டாங்களாம். வாங்கப்பா பார்க்கலாம்.

கிழ: அந்த நாடோடியைப் பார்ப்பதற்கு முன்னே என்னை சாகடிச்சுட்டுப் பிறகு போம்மா.

ராணி அழுது கொண்டே உள்ளே போகிறாள்.

காட்சி 29

மனோ வீட்டில் வேலை செய்யும் சரளாவின் குழந்தை மோகன் ஒரு ஷர்ட்டை அழுக்குப் படுத்தி விடவே கோபங் கொண்ட மனோ இரக்கமின்றிக் குழந்தையை அடித்து விடுகிறாள். சரளா குழந்தையைக் காப்பாற்ற ஓடி வருகிறாள். ரகுவும் இதை கவனித்து விட்டுப் பேச செயலற்று நிற்கிறான்.

ரகு: குழந்தைதானே மனோ?

மனோ: ஆமா குழந்தை! அப்பன் பேர் தெரியாத குழந்தையை அடிச்சு வளர்த்தாத்தான் உருப்படும்.

மனோவின் சுடுசொல் ரகுவின் இதயத்தைப் பிளக்கிறது. சரளா எதிர்த்து வாதாட வலிவின்றி அழுகிறாள். தான் உயிருடனிருந்து கொண்டு, தன் கண் முன்னே நிராதரவான நிலையில் நிந்தனைக்குள்ளாகும் மோகனையும் சரளாவையும் பார்க்க ரகுவுக்கு கண்கள் கூசுகின்றன.

மது வெளியிலிருந்து வருகிறான்.

மது: மனு, இங்கே வா சொல்றேன். ஒரு முக்கியமான நியூஸ்.

மனோ: என்ன?

மது: இதுவரைக்கும் நமக்கு தொல்லை கொடுத்துகிட்டு இருந்தானே அந்த நாடோடிப் பய, அவனைப் போலீஸ்லே பிடிச்சு லாக்கப் பண்ணியாச்சு.

மனோ: தெரிந்த விஷயம்தானே?

மது: எனக்கு ஒரு யோசனை தோணுது.

மனோ: என்ன?

மது: அந்த ராணிக்கும் ரகுவுக்கும் முடிச்சு போட்டிட்டு நாம மெதுவா நழுவிட்டா அந்த ரௌடிப் பயலும் ரகுவும் சண்டை போட்டு மண்டையை உடைத்துக்கொள்வாங்க. நம்மளைபத்தி யாரும் நினைக்க மாட்டாங்க.

மனோ: ரொம்ப கரெக்ட்...நான் போய் ராணியைச் சரிப்படுத்தறேன்.

ராணியைச் சந்தித்து தான் ராஜாவின் விடுதலைக்குச் சகல ஏற்பாடுகளும் செய்து விட்டதாகவும், ஆகவே ராஜா விடுதலையானதும் தன் வீட்டுக்கு வருவதாகவும், அங்கே ராணியைக் காத்திருக்கும்படி அவன் கேட்டுக் கொண்டிருப்பதாகச் சாமர்த்திய

மாகக் கூறி ராணியைத் தன்னுடன் அழைத்துச் செல்கிருள் மனே.

மனேரமா, மதுவின் திட்டப்படி ராணியை ஏமாற்றி ரகுவிடம் ஒப்படைத்து விட்டு, தங்கள் சித்தப்பா இறந்து விட்டதால் உடனே ஊருக்குப் போகவேண்டுமென்று பொய் சொல்லி, ஏற்கனவே சேகரித்து வைத்த பொருள்களுடன் கிளம்பி விடுகின்றனர்.

ராஜா குற்றத்தை ஒப்புக் கொண்டதாலும், ஜெயிலிலே ஒழுங்காக நடந்து கொண்டதற்காகவும் குறிப்பிட்ட நாளுக்கு முன்பே விடுதலே செய்யப்படுகிருன். ராணியைக் காண விரைந்தவன், எதேச்சையாக வரும் வழியில் கண்ட மதுவின் காரினுள் தொத்திக் கொள்கிருன். ராணியைச் சிக்க வைத்துவிட்டு, ரகுவிடமிருந்து தாங்கள் தப்பித்துக் கொண்ட பெருமையைப் பேசிக் கொள்வதைக் கேட்டு காரை நிறுத்தி மது - மனேவை எதிர்க்கிருன் ராஜா. ஆனல், அவர்கள் தப்பி விடுகிருர்கள். ராஜா, ராணியை ஆபத்திலிருந்து மீட்க விரைகிருன்.

தனிமையில் விடப்பட்ட ராணியைக் கற்பழிக்க விரும்பி காமாந்தகாரன் ரகு அவள் அறைக்குள் நுழைகிருன்.

ரகு: ராணி உன்னேப் பார்க்க வேண்டும் போலிருந்தது.

ராணி: என்னேயா? இக்நேரத்திலா? இதுக்குத்தான எல்லோரும் கூடி சதி செய்து தங்கும்படி செய்தீர்கள்? அய்யா நான் ஒரு அனதை! ஆதரவு இல்லாதவள். உங்கள் மிருக வெறிக்கு என்னே பலிகொள்ள வேண்டாம்.

ரகு: இதைப்பற்றி பலநாட்கள் யோசித்தேன், என் மூளே குழம்பும் வரை யோசித்தேன். அதன் பலன் தான் இன்று இம் முடிவுக்கு வந்தேன்.

ராணி: இந்த நிலேயிலே உங்க சகோதரி இருந்தா, உமது மனேவியைக் கண்டு அன்னியன் வெறி கொண்டால், உமது தாய் மானம் இழந்தால், மனிதனுக உம்மால் உலாவ முடியுமா?

ரகு: ராணி! ஆயிரம் உபதேசங்களே அழகாகச் சொல்கிருய். ஆனல் அதைச் சிந்திக்கும் சக்தி எனக்கில்லே.

ராணி கையில் கிடைத்த பொருளால் ரகுவை அடித்து விடுகிருள். அவன் அவளேத் துரத்துகிருன். ராணியின் அலறல் கேட்கிறது. ராஜா அங்கு விரைந்து வந்து கண்ணுடிக் கதவுகளேயும் உடைத்துக் கொண்டு அறைக்குள் நுழைகிருன்.

ராஜா: டேய் பாவி! டேய் துரோகி!

ராணி: ராஜா!

ராஜா: ராணி!

ரகு: ராஜா!

ராஜா: மனேவியை மறந்தாய்! மற்ருெரு மாயக்காரியின் மோக வலேயில் விழுந்தாய். அடுத்தபடி இந்த அனதையான அபலே வாழ்வை அழிக்க முயன்ருய். இதுதான உன் அந்தஸ்து, கௌரவம்? சீ... நாயே!

ரகு: நீயார் என்னேக் கேட்க?

ராஜா: நான? உன் இறந்த கால சரித்திரத்தின் ஏடுகளே பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்னே புரட்டிப் படி. அது பதில் சொல்லும் நான் யாரென்று. நீ அனுபவிக்கும் சொத்திலே பாதி பாகத்தைப் பார்த்துக் கேள். அது சொல்லும் நான் யார் என்று? உன் உடம்பிலே ஓடும் ஒரு துளி ரத்தத்தைக் கேட்டுப் பார். உன் ஜீவனுக்குத் தெரியுமே வரலாறு. உன் அந்தராத்மா அறியுமே என் அந்தரங்கம். உன் ஹிருதய பீடத்திலே ஆட்சி செலுத்தும் அந்தஸ்து உன் கண்களுக்குக் கருப்புத் திரையிட்டு என்னேத் தெரியவொட்டாமல் மறைத்து விட்டது. தறுதலேயாயிருந்த என்னே பொறுப்புள்ள மனிதனுக்கிய இவள், என் அன்பிலே பிறந்த அணையா விள்க்கு, என்னே நீ வஞ்சித்து விட்டாய். அண்ண வென்று அழைக்க ஆவலோடு ஓடோடி வந்தேன். உன்னே அணைத்துக் கொள்ள ஆவல் கொண்டேன். நீ என்னே அறிந்தும் அறியாதவன் போல் நடந்து கொண்டாய். உன் பணத்திலே பங்கு கேட்டேன, உன் படோடோபத்தைக் கண்டு பொருமை கொண்டேன? ஒரு நிமிட இன்பத்திற்காக என் வாழ்வைக் குலேக்க நினேத்தாயே...இது தர்மமா? உன் ஆசைக்குகந்த தம்பிக்கு இதுதான் நீ செய்யும் பிரதிபலன? என் உடலிலே உணர்ச்சி செத்து

விட்டது. மனிதத் தன்மை என்னுள் மறைந்து விட்டது.

ரகு : தம்பி...

ராஜா : தகுதியல்ல அப்படி அழைக்க உனக்கு.

ராஜா : மனிதப் பிசாசாக மாறி விட்டேன்! எனக்கு வேண்டியதெல்லாம் ரத்தம்! ரத்தம்!

ராஜா கையில் துப்பாக்கியிடன் ரகுவைச் சுட ஓடி வருகிறுன். ரத்த பாசமற்ற அந்தச் சகோதரனை ரத்த வெறிக்குப் பலியாக்க விரும்புகிறுன் ராஜா. ஆனல், ராஜாவிடம் அடைக்கலமாக இருந்து தன் வாழ்வில் மறுமலர்ச்சி தேட விரும்பிய சரளா, தற்போது ராஜாவின் துப்பாக்கிக்கே இறையாகவிருக்கும் தன் கணவனுக்காகப் பரிந்து கொண்டு வருகிருள்.

சர : ராஜா...சுடு...சுடு...ராஜா... முதலில் என்னைச் சுட்டுவிட்டு பிறகு என் கணவரைச்சுடு. எந்தக் கணவருக்காக என் இன்பங்களனைத்தையும் துறந்து அனுதையாக பம்பாயில் திரிந்து உன்னிடம் அடைக்கலம் புகுந்தேனே, எவரைப் பிரிந்து பத்து மாதங்களை பத்து யுகங்களாகக் கழித்தேனே, எவருடைய கௌரவத்தைக் காக்கும் பொருட்டு என் மனதைப் பக்குவப்படுத்திக் கொண்டேனே அவருடைய உயிர். அவருடைய உடல் என் கண்முன் அழிக்கப்படுவதைக் கண்டு நான் வாழவா? ராஜா. நீ மாசு இல்லாமல் வாழ்ந்தாய். மற்றெருவர் சுகத்துக்காக வாழ்ந்தாய். இதோ அண்ணியென்று நீ அன்போடு அழைக்கக் கொடுத்து வைக்காத அபலை கெஞ்சுகிறேன். அவருக்கு முன் என்னை அழித்து விடு ராஜா!

ராஜா : அண்ணி!

ராணியை நெருங்கி சரளா புலம்புகிருள்

சர : ராணி! என் கணவரை மன்னித்துவிடு ராணி! உன் இன்ப ராஜாவின் சகோதரன் என்பதற்காக மன்னித்துவிடு! உன் ராஜாவின் உடம்பில் ஓடுகிற ரத்தம்தான் அவர் உடம்பிலும் ஓடுகிறது. அந்த ரத்தத் தொடர்புக்காகவது, அந்த 'ரத்த பாச'த்தைஎண்ணியாவது மன்னித்து விடு ராணி!

ரகு : தம்பி!

ராஜா : அண்ணு!

ரகு : தம்பி!

இருவரும் ஒருவரை யொருவர் அணைத்துக் கொள்ளுகின்றனர்.

போலி கௌரவம் ரகுவை மிருகமாக்கினுலும் 'ரத்த பாசம்' மீண்டும் அவனை மனிதனுக்கி விட்டது!

திடுதிப் பென்று கோடீஸ்வரி ஆனவள் சுதாராணி. கட்டிளம் கன்னி; வயது பதினெட்டு. திரண்ட செல்வத்திற்கு வாரிசான பின் கடல் கடந்த நாட்டுக்குப் பிரயாணமானுள். ஆனல், அது அவளுக்கு மரணயாத்திரையாக முடிந்து விட்டது! கொலை செய்யப்பட்டு விட்டாள்.

மரண யாத்திரை

துப்பறியும் நாவல்

சந்தேகிக்கப் பட்டவர் அநேகர். ஒவ்வொருவரையும் சந்தேகிக்க காரணம் இருந்தது. சந்தர்ப்ப சாக்ஷியமும் செத்து விடுகிறது. யார் உண்மையான குற்றவாளி என்று கண்டுபிடிக்க முடியாத நிலையில் துப்பறியும் நிபுணர்களான ராஜாமணியும் பம்பாய் அன்வரும் துப்புத் துலக்கி வருகிருர்கள்.

முடிவில் அன்வர் ஒருவனைக் குற்றவாளி என்று நிரூபிக்கிருர். ராஜாமணி மற்றெருவனைக் குற்றவாளி என்று கைது செய்கிருர்.

ஒரே கொலைக்கு இருவித வழக்குகள் எப்படித் தொடருவது?

'சிரஞ்சீவி'யின் கதைகளில் விறுவிறுப்புக்குப் பஞ்சமேது!

விலை ரூ. 1-8-0

ராமநாத் பப்ளிகேஷன்ஸ் :: சென்னை–14.

காட்சி 1

சுந்தரபுரி அரசனும் ராஜகுருவும் மந்திரியும் அரசனது குமாரர்களான சித்ராங்கதன், விசித்ராங்கதன், சுந்தராங்கதன் மூவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கின்றனர்.

அர : நீர்வளம், நிலவளம், குடிவளம் நிறைந்த ஓர் நாடு செழித்தோங்காது நிற்குமானல் அதற்கு முக்கிய காரணம் எதுவாய் இருக்கும்?

மங் : குடிமக்களின் குறுகிய மனப்பான்மை, உழைப்பின்மை, பொறுப்புணராமை...

குரு : அரசாங்கத்தின் ஆதரவில்லாமை !

அர : ஓரளவு உண்மை! அரசாங்கம் ஆதரவளிக்காததற்குக் காரணம்?

மங் : வருமானக் குறைவு. வரி கொடாமையின் விளைவு !

குரு : நாட்டு மன்னனின் நிர்வாகக் குறை.

அதுவரை மௌனமாக இருந்த அரசகுமாரன் சுந்தரன் எழுந்து தன் அபிப்பிராயம்கூற அனுமதி கோருகிருன்.

சுங் : இளைஞன் எடுத்துக்கூற அனுமதி யளித்தால்...

அர : அனுமதி மட்டுமல்ல, பொறுப்பும் உரிமையும் அளிப்பதென்றே உங்களுக்கு இச்சபையில் இடமளித்தது. ஐயமின்றிச் சொல் !

சுங் : அந்த நாட்டின் நிலைமைக்கு அடிப்படைக் காரணம் பொருளாதாரம் போதாது என்பதுதான் என் பரிபூர்ண நம்பிக்கை.

அர : அங்நாடு, எங்நாடென...?

சுங் : அறிவேன், நம் நாடே !

அர : சுந்தராங்கனது சூட்சும புத்தியைப் பார்த்திர்களா !

சுங் : மிக எளிது இது ! மாதா பிதாக்களின் கவலை தன் மக்களைக் குறித்தே. மன்னனது கவலை தன்

பாத்திரங்கள்

சிவாஜி கணேசன்	சுந்தராங்கதன்
ஜி. முத்துகிருஷ்ணன்	மதிவாணன்
வெங்கட்ராமன்	கட்டழகன்
லலிதா	பிரேமா
பத்மினி	மாதவி
ராகினி	மல்லிகா
டி. எஸ். பாலையா	நமக்ராம்
செல்லம்	குணசுந்தரி

வசனம் :

ஏ. டி. கே.
வி. என். சம்பந்தம்

டைரக்ஷன் :

ஆர். எம். கிருஷ்ணசாமி

நாட்டைக் குறித்தே. சில நாட்களாக என் சிற்றறிவில் இதுவே சிந்தனை.

சித் : பல நாட்களாக எங்கள் பொறுமையைச் சோதிப்பதும் பொருளாதார நெருக்கடிதான்.

விசித் : இளவரசர் என்ற கௌரவம் போய்விட்டது. 'பொக்கிஷத்தில் பணம் இல்லை, இல்லை' என்ற பெருங் கோஷம். வெளியில் சென்றால், 'வரிச் சுமை வரிச்சுமை' என்ற ஆரவாரம், கலகம்.

அர : பொருளாதார நிலை சீர் பட்டாலன்றி, பொது மக்கள் மனப் பான்மையும் கலகமும் குறையாது. ஆகவே, நம் நலனையும் நமது குடிமக்களின் நலனையும் எண்ணிப் புரட்சிகர



மான ஒரு புதுமையைப் புகுத்த விரும்புகிறேன்.

மந் : மனுதர்மத்துக்கு மாறுததாயின் மந்திரிக்குத் தடை இல்லை.

குரு : சந்தோஷம். பொருத்தமானதாயின் பழமையைக் கழித்துப் புதுமையைப் புகுத்தல் ஓர் பெருமை!

அர : வியாபாரம்?

குரு : வியாபாரமா!

சித் : அகௌரவம்...

விசி : அகௌரவம்.

மந் : அரசாங்கம் வியாபாரத்தில் ஈடுபடுவதா?

அர : அல்ல...அயல் நாடுகளுடன் அரசாங்கத்துக்குப் பொருத்தமான வியாபாரம்.

சித் : அப்படியாயின் சரி...கடைகள் வைக்க வேண்டுமோ என்று நான் கலக்க மடைந்தேன்.

விசி : ஆக்ஷேபமில்லை. பொருளாதாரம் பொங்கினால் போதும்.

அர : என் அருமைக் குமாரர்களே அதை ஆரம்பிப்பார்கள்.

சுந் : தந்தையே! தாங்கள் வகுத்துள்ள திட்டம் புரட்சிகரமானது. ஆனால், புதுமை அல்ல. மறைந்து போன பழமை. தன் நாட்டின் பொருளாதாரத்திற்காகப் பல வகைத் தியாகம் செய்வது தமிழ்நாட்டு மன்னர்களின் தொன்று தொட்ட பண்பு. நாங்கள் மூவரும் முயற்சி செய்வோம். வெற்றிகாணுவோம். தங்கள் கனவை நினைவாக்குவோம்.

சித் : பட்டத்திற்குரியவன் நான். இந்தத் திட்டத்தில் ஈடுபட இயலாது. இருவருமே சென்று...

விசி : ஏன், சுந்தராங்கதன் ஒருவனே போதும்.

அர : ஒருவன் பாடுபட்டுத்தேடி மற்றோர் கூட்டம் உண்டுகளித்து கண்டபடி வாழும் முறை அரண்மனையினின்றும் அகல வேண்டும். உழைக்க ஒருவன். உண்ண பலர். அது ஒழிந்தாலன்றி வீடு, நாடு எதுவும் உருப்படாது. பொருளாதாரமும் உயராது.

சித் : தந்தையே! இது புரட்சிகரமான பேச்சு. சட்ட விரோதம். மந்

திரி! என்ன மௌனமாய் இருக்கிறீர்?

அர: பொருளாதாரத்தை உயர்த்த போதுமான சேவை செய்து, வறுமை அகற்றி, செழுமை உண்டாக்கி எவன் பெருமை பெறுகிருனே அவனே பட்டத்திற்குரியவன்.

சுந்: தந்தையே! முடிவைப்பற்றி முடிவில் யோசிப்போம். முதலில் குடிகள் நிலையை உயர்த்துவோம். நான் சித்தம். கட்டளைக்குக் காத்திருக்கிறேன்.

அர: நாளை மூவரும் புறப்பட வேண்டும்.

காட்சி 2

சுந்தராங்கதன் தன் மனைவியின் நாடான சுவர்ணபுரிக்குக் கிளம்பிப் போகிருன். அங்கே அவன் மனைவி பிரேமா ஒரு ஸேட்டுடன் கொஞ்சிக் குலவுகிருள். அந்த ஸேட் அவளுடனேயே தங்கியிருக்கும்போது சுந்தராங்கதன் அங்குபோகிருன். அவள் அவனிடம் அன்பு கொண்டவள்போல் நடிக்கிருள். அரசரும் அங்கிருக்கிருர்.

பிரே: ஏனத்தான், என்னைப் பற்றிய நினைவே உங்களுக்கு இல்லையா?

சுந்: நினைவில்லை யென்ருல் நேரில் வருவேனு?

பிரே: ஆமாம், பேசுவதில்தான் நீங்கள் பெயர் பெற்றவராயிற்றே! வாருங்கள், சரியான தண்டனை விதிக்கப் போகிறேன்.

ஸேட்: சலாம் சர்க்கார், சலாம்!

சுந்: (அலக்ஷியமாக) ஹூ...ம்.

பிரே: இவர் ஒரு பெரிய பட்டு ஜவுளி வியாபாரி—நமக்ராம் சேட்;

சுந்: நமக்ராம் ஸேட்டா!

பிரே: அற்புதமான ஆடை அணிகளுக்குப் பிரசித்தி பெற்றவர். இதோ இது கூட இவர் கொடுத்த பட்டு தான்.

சுந்: அப்படியா?

சேட்: ஜீஹா! நம்மள் படே படே சர்க்காருக்கெல்லாம் பட்டுத் துணி தர்ரான். நிம்பள்கி க்யா ஹோனு? கொண்டாந்து தள்ரான்.

ஜாடையாக வெளியேறி விடுகிருன் அவன். பிரேமாவுடன் பேசி



விட்டுத் தன் ஆருயிர்த் தோழன் மதிவாணனைத் தோட்டத்தில் சந்தித்து அளவளாவுகிருன் சுந்தரம்.

சுந்: யாரை மறந்தாலும் ஆருயிர்த் தோழன் மதிவாணனை மறப்பேனு?

மதி: அதனுல்தான் ஏழெட்டு மாதங்களாக எட்டிக்கூடப் பார்க்க வில்லை...அதுதானே!

சுந்: அப்படி நினைக்காதே தோழா! அரசாங்க அலுவல்களை..

மதி: நீதான் சுமந்து கொண்டிருந் தாயா? ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் என்பதை நிரூபித்துக் காட்டுகிருயோ? இது தேவையா!

சுந்: உண்மையிலேயே பொருளாதார அபிவிருத்திக்கானவைகளைப் புரிந்து கொள்ளவே புறப்பட்டேன். பிரேமாவிடமும் உன்னிடமும் விவரத்தைக் கூறி விடைபெற்றுப் போகலாமென்றுதான் வந்தேன்.

மதி: ஆனால் ஒன்று, அயல் நாடு சென்று வந்தால் ஓர் அலாதி பெருமை உண்டு என்பதற்காக வெளிநாடு போய் வந்தும் விஷயம் தெரியாத சில மேதாவிகள் இருக்கிறார்களே, அவர்களைப் போல்...

சுந்: வீராப்புக்கு

வேட்டையாடும் வீணன் என்று நினைக்கிறாயா என்னை?

பிரேமா வருவது கண்டு மதிவாணன் எழுந்திருக்கிறான்.

சுந்: ஏன் எழுந்து விட்டாய்?

மதி: நீ சந்தோஷமாக இருக்க வேண்டிய நேரத்தை நான் சாதாரணமாக்க விரும்பவில்லை. வருகிறேன்.

சுந்: நண்பா...நண்பா...!

பிரே: அடடா! நல்ல நண்பர். எந்த நேரமும் நண்பர்தானா? பேசாமல் அந்த நண்பரையே கல்யாணம் செய்து கொள்வதுதானே?

சுந்: கோபம் கொள்ளாதே, என் கோமளமே! உன்னோடு கொஞ்சிக் குலாவத்தானே ஓடி வந்தேன்.

காட்சி 3

பிரேமாவிடம் விடை பெற்றுக் கொண்டுஅங்கிருந்துகிளம்புகிறான் சுந்தராங்கதன். வழியிலே ஆராய்ச்சி மன்றம் என்ற ஒரு மன்றம் இருப்பதைக் கண்டு குதிரையை விட்டிறங்குகிறான். அங்கே ஒரு பண்டிதர் ஏட்டிலிருக்கும் சில வரிகளைப் படித்துக் கொண்டிருக்கிறார்.

"கொண்டு வந்தால் தந்தை—கொண்டு வந்தாலும் வராவிட்டாலும் தாய்—சீர் கொண்டு வந்தால் சகோதரி—கொலை செய்வாள் பத்தினி—உயிர் காப்பான் தோழன்."

இதைக் கேட்டுச் சிரிக்கிறான் சுந்தராங்கதன்.

பண்: என்னய்யா கேலிச் சிரிப்பு?

சுந்: புலவர் பெருமக்களே! மன்னிக்க வேண்டும். அறிஞர் குழுவுக்கு நான் அருகதையற்றவனாயினும் என் அபிப்பிராயத்தைக் கூற அனுமதி வேண்டுகிறேன்.

1-ம் பண்: அபிப்பிராயம் கூற அனைவருக்கும் உரிமை உண்டு. என்ன உமது அபிப்பிராயம்?

சுந்: என்னதான் தந்தைக்கு மகன் தான்தோன்றியாகத் திரிந்தாலும் கேவலம் தனம் சேர்க்காத காரணத்திற்காக, மகனை வெறுக்கமாட்டான், மனமுள்ள தந்தை.

2-ம் பண்: ஆம், தோழர் கூறுவதில்...

3-ம் பண்: துளிக்கூட உண்மை இல்லை....மனமுள்ள தந்தை என்கிறீரே, அந்த மனமுள்ள தந்தை பணமுள்ள மகனைத்தான் பரிவோடு வரவேற்பான். இதுதான் முறை.

சுந்: முறையல்ல, முரண்! அந்தஸ்துள்ள மகனை விட அறிவுள்ள மகனைத்தான் அன்போடு வரவேற்பான் அப்பன்...இது அறிவுலகம் கண்ட உண்மை.

1-ம் பண்: அறிவைவிட பொருளை விரும்பும் அப்பன்கள்தான் நிறைந்திருக்கிறார்கள், இன்றைய நிலையில்.

சுந்: அவ்வாறு முடிவு கட்டுவது முற்றிலும் தவறு. பெற்ற மகன் பேரறிஞனாக வாழ்ந்தாலும சரி, பேடியாகத் திரிந்தாலும் சரி—பெற்றவனுக்குப் பிள்ளை மேல உள்ள பாசம் பிரிக்க முடியாதது. இதை மறுக்கவும் முடியாது.

அவர்களுக்கும் சுந்தராங்கதனுக்கும் வாய்ப்பேச்சு முற்றி, தன் இல்லம் வரை அப்படி நடக்காது என்று வீராப்புடன் கூறி, அதைச் செயலில் காட்டக் கிளம்புகிறான், சுந்தராங்கதன்.

காட்சி 4

பண்டிதர்களிடம் பேசிய சூட்டோடு தன் நாடு திரும்புகிறான் சுந்தராங்கதன்.

சித்: அரசே! இளவரசர் ஸ்ரீ... ஸ்ரீ...சுந்தராங்கதர் வருகிறார்!

அர: சந்தோஷம்! சுந்தராங்கதன் சுறுசுறுப்பு எந்தக் குமாரனுக்கும் இல்லை.

குரு: சந்தேகமென்ன!

சுந்: அனைவருக்கும் வணக்கம்.

மந்: வருட காலத்தில் எதிர்பார்த்த வெற்றி பருவ காலத்தில் கிடைப்பதென்றால் பெரும் விந்தையல்லவா?

சுந்: விசித்திரம் நிறைந்த இப்பிரபஞ்சத்தில் விந்தைகளுக்கென்ன பஞ்சம்?

குரு: கட்டக் கந்தைக்கும் கால் வயிற்று கஞ்சிக்குந்தான் பஞ்சம்!

அர: சுந்தரா, 'கண்டேன் சீதையை' என அனுமான் உரைத்தது போல் கொண்டு வந்தது என்ன, சொல்? எவ்வாறு எங்கே என்பதை பின்னர் அறிவோம்.

சுந்: கொண்டு வந்தது ஒன்றுமில்லை.

அர: என்ன, ஒன்றுமில்லையா!

மந்: பொருள் இல்லையேனும் பொருளாதாரத் திட்டங்கள். சாதனங்கள்...சாஸனங்கள்..?

சுந்: ஏதும் கொண்டு வரவில்லை!

அர: விரைவாகத் திரும்பி வந்ததன் விவரமென்ன?

சுந்: தங்களைக் கண்டு தகுந்த காரணங்களை எடுத்துக் கூற..

அர: காரணம் எதற்கு?

சுந்: திரவியங்கள் திரட்டி வராத

தற்கு திட்டங்களாயினும் நிறைவேற்றிக் கொண்டுவர முடியாததற்கு.

அர: போதும்; மூளையைக் குழப்புகிறது, உன் மூடச் சொற்கள். காணக் கண்கள் கூசுகின்றன.

சுந்: தந்தையே! பொருள் கொண்டு வராததா தங்கள் வெறுப்புக்கு மூலகாரணம்? ஓரிடந்தனில் நில்லாது உருண்டோடிடும் அற்பப் பொருள் மீது ஒப்புயர்வற்ற தந்தையின் உள்ளன்பு நிற்பது நியாயமா?...

அர: நிறுத்து உன் நியாய வாதத்தை! வாழ் நாளை வீணாக்கும் வகையற்ற பிள்ளை!

சுந்: அன்று புகழ்ந்த வாய், இன்று இகழ்கிறது. காரணம் பொருள் கொண்டு வரவில்லை.

அர: பொருள் கொண்டு வந்த பின் பேசு. அதுவரை என் எதிரில் வராதே! இந்நாட்டு எல்லைக்குள் நீ இருக்கக் கூடாது.

கோபமாகப் போய் விடுகிருர். மனமுடைந்து போகிருன் சுந்தராங்கதன்.

சுந்: அம்மா!

தாய்: சுந்தரா! உன்னைக் காணுமல் வாடி இருந்தேன். வந்து விட்டாயா! வா, உட்காரு!

அவளிடம் தந்தையின் கட்டளை பற்றிக் கூறுகிருன்.

தாய்: வெறுங்கையோடு வந்ததற்குத் தண்டனை, நாடு கடத்தல்... இது அநியாயம்...அக்கிரமம். இந்தப் பேரிடியை என்னுல் பொறுக்க முடியாது.

சுந்: தாயே! தூக்குத் தண்டனையல்ல; நாடு கடத்தல்.

தாய்: சுந்தரா! என் செல்வமே! அன்னிய நாட்டில் நீ அனுதை போல் அலைய வேண்டியதை நினைத்தால் என் இதயம் வெடித்து விடும் போலிருக்கிறது, உனக்காக உன் தந்தையின் பாதங்களில் வீழுந்து மன்னிப்புக் கேட்கிறேன் என்னுடன் வா!

சுந்: தாயே! தந்தையின் சுபாவம் தங்களுக்குத் தெரியாததா?

தாய்: தெரியும். உன் சுபாவமும் தெரியும். நான் சொல்வதுபோல் செய். நாட்டை விட்டு வெளியேருதே! அந்தப்புரத்திலேயே தங்கி இரு. இந்த மன நிலையில் உன்னைத் தனியே அனுப்ப மனம் துணியவில்லை.

சுந்: எத்தனை நாட்களம்மா என்னை நீங்கள் காப்பாற்ற முடியும்?

தாய்: நாட்களல்ல. பத்து மாதம் உன்னைச் சுமந்து பெற்று காப்பாற்றியதுபோல் எத்தனை வருஷமானுலும் காப்பாற்றுவேன். பொறுப்பு என்னது.

சுந்: அன்பின் பெருக்கால் தாங்கள் செய்வது அரசாங்க சட்டப்படி ராஜத் துரோகம் என்பதை அறிவீர்களா?

தாய்: அறிவேன். நன்ருய் அறிவேன். உனக்காக எவ்விதத் தண்டனைக்கும் உள்ளாவேன். ஆபத்தை

ஆனந்தமாய் வரவேற்பேன். அஞ்சாமல் அனுபவிப்பேன்.

சுந்: அம்மா! ஆலோசித்துப் பாருங்கள். அன்னையைக் காப் காப்பாற்ற வேண்டிய பிள்ளையை ஆபத்துக் காளாக்கலாமா? நான் அறியாச் சிறுவனல்ல — அரசாங்கத்தை ஏற்று நடத்தும் ஆற்றல் உள்ளவன். அன்னிய நாட்டில் அனுதைபோல் அலையமாட்டேனம்மா! அஞ்சவேண்டாம்: பெரும்பொருள்

திரட்டி வந்து என் தந்தையைப் பெருமிதமடையச்செய்கிறேன். விடை கொடுத்தனுப்புங்கள்...

தாய்: அவ்வளவுதான்! என் அச்சம் ஒழிந்தது. சொன்னபடி செய்வாய் என்பது நிச்சயம். சென்று வெற்றியுடன் விரைவில் திரும்பி வா!

சுந்: பரந்த கடலுக்கு உவமை கூறலாம், பெற்ற தாயின் உள்ளத்துக்கு உவமை கூறவே முடியாதம்மா. வருகிறேன்.

சொல்லிக்கொண்டே வெளியேறுகிறான் சுந்தராங்கதன்.

காட்சி 5

தாயிடம் விடைபெற்ற சுந்தராங்கதன் தன் சகோதரி குணசுந்தரியின்

வீட்டிற்குப் போகிறான். அவளும் அவள் கணவன் மதனனும் சுந்தராங்கதனை பிரமாதமாக வரவேற்று உபசரிக்கிறார்கள். போகப்போக, அண்ணனிடம் ஒன்றுமில்லை என்றறிந்த குணசுந்தரியின் நல்ல குணம் போய் விடுகிறது. அவனை அலக்ஷியப் படுத்துகிறாள் அவள். அன்று ஒரு நாள் சோற்றைப் பார்க்கச் சகிக்காமல் சமையற்காரனைக் கேட்கிறான் சுந்தராங்கதன்.

சுந்: இது என்ன?

சமை: சோறு ... என்னை மொறைச்சி என்னுங்க பண்றது?

கோபம் கொண்ட சுந்தராங்கதன் சோற்றை அவன் முகத்தில் வீசியெறிகிறான். அவன் நேரே குணசுந்தரியிடம் போகிறான். அப்போது அவள் தன் கணவனுடன் பேசிக்கொண்டிருக்கிறாள். அப்போது சமையல்காரன் அங்கு வருகிறான்.

சமை: தேவி!

குண: இதென்ன கோலம்?

சமை: நீங்க சொன்னபடி செஞ்சதுக்கு உங்கண்ணர் கொடுத்த வெகுமதி!

குண: அப்படியா?

நேரே சுந்தராங்கதனிடம் போகிறாள்.

குண: அளவுக்கு மீறி விட்டதே உன் அட்டகாசம்! என்ன இது?

சுந்: அவமதிப்பையும் அகம்பாவத்தையும் சகித்துக் கொள்ள என்னால் ஆகாது.

குண: அவர்கள் அனுபவம் மிகுந்த ஆட்கள். என் உள்ளக் கொதிப்பை எளிதில் உணரவல்லவர்கள்.

சுந்: உன் உள்ளக்கொதிப்பை வேலைக்காரர் மூலம் வெளியிடுவதின் சீர்கேட்டை உணர்ந்தாயா?

குண: அருமைத் தங்கையைப்

பார்க்க ஓர் அரசகுமாரன் வரவேண்டிய முறையை உணர்ந்தாயா? அந்தஸ்தையும் அதற்கேற்ற பண்புகளையும் மறந்து, அவமானத்திற்கும் ஏளனத்திற்கும் ஆளாக்க வந்தாய். யார் அழைத்தது?

சுந்: ஆசைக்கு அடிமையான அகங்கார சொருபமே! அற்ப சீர்வரிசை உன் அன்பை அகற்றிவிட்டது. மமதை என்ற மாளிகையில் நின்று, உதாசினம் என்ற காலால் உதைத்தாய். அடுக்காக உள்ள அவமரியாதைப் பாதையில் வீழ்ந்தேன். சகோதர பாசம் உன்னைச் சாந்தப்படுத்தும் என்று எண்ணினேன். ஆகாயத்தை அண்ணாந்து பார்த்து நின்றாய். தினக்குரல் காட்டினேன்; தீப்பொறி கக்கின உன் சொற்கள். இப்படிப்பார்! அந்தப்புரம் முழுவதும் அடைத்து வைக்கக்கூடிய சீர்வரிசை வாங்கலாம். எவ்வளவு பொன் பார்! பொன்னைக் கண்டவுடன் புன்னகை தோன்றுகிறதே! சீர்வரிசையைக் கண்டால் சிரிப்பு தோன்றி விடுமா? சீர்கொண்டு வந்தால் சகோதரி என்ற வாக்கியத்தைப் பொய்யாக்கி விடலாம் என்ற திடநம்பிக்கையுடன் உன்னைச் சோதித்தேன். வெற்றி பெறுவோம் என்று வீண்கர்வம் கொண்டேன். விஷப் பரீக்ஷையாய் முடிந்தது. வருகிறேன். வாக்கியத்துக்கு வெற்றி, எனக்குத் தோல்வி. வந்த வேலை முடிந்தது, விடைபெற்றுக் கொள்ளுகிறேன்.

சுந்தராங்கதன் போய் விடுகிறான்

காட்சி 6

சித்திராங்கதனும் விசித்திரனும் பொன் தேடப் போய்க் காட்டில் கரடியிடமும் திருடர்களிடமும் சிக்கித் தவிக்கின்றனர்.

இடையிடையே பிரேமாவின் நடவடிக்கைகளைக் கவனித்து வருகிறான் மதிவாணன். அவன் சுந்தராங்கதனின் உயிர்த் தோழனல்லவா? அவன் அடிக்கடி வந்து தன் செய்கைகளைக் கவனிப்பது கண்டு பயப்படுகிறாள் பிரேமா! சகோதரியிடமிருந்து கிளம்பி மனைவியிடம் வந்த சுந்தராங்கதனிடம் அவள், மதிவாணன் அடிக்கடி அந்தப்புரம் வருவதாகக் கூறி, கணவனின் நாட்டத்தை வேறு பாதையில் திருப்பி விடுகிறாள். மதிவாணனிடம் கோபத்தோடு போகிறான் சுந்தராங்கதன். அவனிடம் கோபமாகப் பேசும்போது, ஸேட்டிடம் அவள் கள்ளக்காதல் கொண்டிருப்பதைக் கூறுகிறான் அவன்.

மனப் போராட்டத்தின் இறுதியில் சுந்தராங்கதன் ஸேட்டிடம் வெங்கடாசலம் என்ற பெயரோடு வேலைக்கமருகிறான். ஆனால், மாறு வேடத்தில் ஸேட்டிடம் இருப்பதை அறியாத பிரேமா, அவன் போய் விட்டதாக நினைத்து ஒருபுறம் பயமும் ஒருபுறம் மகிழ்ச்சியும் அடைகிறாள்.

ஸேட்டிடம் வேலைக்கமரும் சுந்தராங்கதன் அவனுக்குப் பீடா செய்து தருகிறான். ஸேட் அரண்மனைக்குப் போகிறான். சுந்தராங்கதனும் அவனைத் தொடருகிறான். ஸேட்டின் கையில் பீடாவைக் கண்டதும் அதை அந்தமாதிரி தயார் செய்யக் கூடியவன் தன் கணவனே என்பதையறிந்த பிரேமா பெருந்தேவியுடன் சிப்பாய்களை அனுப்பி கணவனையே தீர்த்துவிடச் சொல்லுகிறாள். ஆனால், அவனை எச்சரித்துவிட்டு அவன் தப்பி விடுகிறான். நிலைமை மீறிவிட்டதையறிந்த பிரேமா இதை தன் தகப்பனாரிடம் திரித்துக் கூறுகிறாள்.

பிரே: அப்பனுக்கும் மகனுக்கும் தகராறு ஏற்பட்டு அரசாங்கத்தை விட்டே விலகப்பட்டாராம்.

அர: அதற்காக?

பிரே: 'அப்பாவுக்கு எதிராக நான் இந்த அரசாங்கத்தை ஆள வேண்டும். உன் தந்தையிடம் சொல்லித் தகுந்த ஏற்பாடு செய்' என்றார்.

அர: ஓஹோ!

பிரே: உங்களைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள் ஆள்வதற்கு? அவசரம வேண்டாம்' என்றேன் 'முடியாது. உடனடியாக வேண்டும்' என்று பிடிவாதம் செய்தார்.

அர: அப்படியா?

பிரே: அது மட்டுமல்ல அப்பா, அப்படிச் செய்யாவிட்டால் உங்களைக் கொன்று விடுவதாகவும் பயமுறுத்தினார்.

அர: என்ன? அவ்வளவு தூரம் வந்து விட்டானா அயோக்கியன்?

பிரே: உங்களைச் சொன்னால் என் உள்ளம் பதைக்காதா! என்ன ஆனாலும் ஆகட்டும் என்று எதிர்த்து வாதாடினேன். என்னையும் கொல்ல வந்தார்.

அர: ஆ! உன்னையும் கொல்ல வந்தானா?

பிரே: ஆம் அப்பா! நல்ல வேளையாக..

பெ. தெ.: நான் வந்து சேர்ந்தேனுங்க. இல்லாப்போனா இந்நேரம் என்னமோ ஆகியிருக்கும்.

அர: நீ ஏன் உடனே தெரிவிக்கவில்லை?

பிரே: எப்படியப்பா தெரிவிப்பது? அவ்வளவு கல்நெஞ்சம் படைத்தவளா நான்? கணவனாயிற்றே என்று யோசித்தேன்.

அர: கணவன்...! கயவன்! உப்பிட்டவனுக்கே உலை வைக்கத் துணிந்தவன்! கொலைகாரன்!... யாரங்கே!

சிப்பாய்கள் ஓடி வருகின்றனர்.

அர: துரோகி சுந்தராங்கதன் எந்த மூலையிலிருந்தாலும் தேடிப் பிடித்துக்கொண்டு வாருங்கள்!

சிப்: உத்தரவு!

காட்சி 7

சுந்தராங்கதன், கொலை செய்வாள் பத்தினி என்பதுகண்டு மனமொடிந்து போய் மேலும் விவரமறிய மங்களபுரி ராஜ்யத்திற்குப் போகிறான். கொண்டு வந்தால்தான் தந்தை என்பது நிரூபணமாகி விட்டது. கொண்டு வந்தாலும் வராவிட்டாலும் தாய் மனமுவந்து ஆதரிக்கத் துணிவாள் என்பதை அவன் தாயே நிரூபித்து விட்டாள். சீர்கொடுத்தால்தான் சகோதரி ஆசையோடிருப்பாள் என்பது, சகோதரி குணசுந்தரியின் மூலம் தெரிந்து விட்டது. பத்தினி கொலை செய்யவும் துணிந்து விட்டாள். உயிர் காப்பானா தோழன் என்பதை அறிய வேண்டும். இந்த எண்ணத்தோடு பைத்தியம் போல் நடித்து மங்களபுரி இளவரசி மாதவி-மந்திரி குமாரி மல்லிகா இருவரின் அன்புக்கும் பாத்திரனாகி விடுகிறான். சொன்னதையே திருப்பிச் சொல்லும் அவனைப் பைத்தியம் என்றே நினைத்து வைத்தியம் செய்யத் துணிகிறார் மங்களபுரி அரசர். மாதவிக்கு அந்தப் பைத்தியத்தின் மீது அபார ஆசை! அவனுக்கு ஓரளவு குணமாகிறது.

அன்று முதல் அவனையே 'தூக்கு தூக்கி'யாக நியமிக்கத் தீர்மானிக்கிறாள் மாதவி. அவர்களது ஆசிரியர் ஓய்வு பெற்று தன் மகன் சட்டாம்பிள்ளையை அரசர் அனுமதியுடன் அவர்களுக்கு ஆசிரியராக்குகிறார். ஆனால், அவன் ஒரு காமுகன். அவர்களுக்கு விபரீதமான பாடம் போதிக்கத் தலைப்படுகிறான். அதனால் அவர்கள் மறுநாளே பாடத்தை நிறுத்த குரு காணிக்கையோடு வருகிறார்கள்.

மாத: நமஸ்காரம்!

சட்: மாதவி பிறந்த நாளா?

மாத: இல்லே! குரு தட்சிணை!

சட்: ஏன்? உங்கள் கல்வி இன்னும் பூர்த்தியாக வில்லையே?

மல்: அது உங்கள் கருத்து. பூர்த்தியாகி விட்டதென்பதே எங்கள் கருத்து.

சட்: என்ன? இன்னும் ஒரு கதையைக்கூட முடிக்கவில்லையே?

மாத: ஒரு கதை... அதில் பாதி. அதுவே போதும். அதிலும் கதாநாயகனின் அவஸ்தைகளையும் உணர்ச்சிகளையும் நீங்கள் தத்ரூபமாக நடித்துக் காட்டினீர்கள். ரசித்தோம். அதுவே போதும். அதோடு கல்வியும் போதும்.

மல்: மேலும் ராஜகுமாரிக்குக் கல்யாணம் ஆகப்போகிறது!

சட்: என்ன, கல்யாணமா? எப்போது?

மல்: சீக்கிரத்தில்.

சட்: வரன் யார்?

மல்: உங்களைப்போல் புலவனல்ல. சாதாரண ராஜகுமாரன்!

அவள் வேறு ஒருவனை மணக்கப் போவதாக நினைத்துக் கூவுகிறான் அவன், அவள் மறுக்கவே கடைசியில் சாகத்துணிவது போல் மாதவியை பயமுறுத்தி தன்னை மணக்கச் சம்மதிக்கும்படிச் செய்துவிடுகிறான் சட்டாம்பிள்ளை. இரவு கோட்டைமணி அடித்ததும் காளிகோவிலில் மாதாவின் முன்பு காந்தர்வவிவாகம் செய்து கொள்ளச் சம்மதிக்கிறாள். இளவயதிலேயே மாதவி மல்லிகா இருவரும் ஒரே புருஷனை மணப்பது என்று தீர்மானித்தி

ருந்ததால் (!) இருவரையுமே மனைவிகளாக அடையச் சட்டாம்பிள்ளை தயாராகி விடுகிறான். இவ்விஷயத்தை அவன் தகப்பனாரிடம் சுந்தரன் தெரிவிக்கவே, இரவு கிளம்பத் தயாரான சட்டாம் பிள்ளையை ஒரு அறையில் போட்டுப் பூட்டிவிடுகிறார் ஆசிரியர். அத்துடன் நில்லாது அரசனிடமும் ஓடிப்போய் இதையறிவித்து தன் மகனை மன்னிக்கும்படி வேண்டுகிறார். அவர்கள் யாவரும் காளிகோயிலுக்குப் புறப்படுகின்றனர்.

இதற்கிடையே இருதோழியரை சாட்டாம்பிள்ளையிடம் தங்களைப்போல நடிக்கும்படிச் சொல்லிவிட்டு மாதவியும் மல்லிகாவும் மறைந்திருக்கின்றனர். அந்தத் தோழிகளை மாதவி–மல்லிகா என்றெண்ணி அங்கு வந்த தூக்குதூக்கி கேலி செய்கிறான்.

சுந் : ஆஹா ! அழகுச்சிலைகளே ! அந்தபுரத்துச் சுந்தரிகளே! உங்கள் அன்பன் கட்டழகன் இன்னுமா வரவில்லை? ஐயோ பாவம்! இப்படியே காத்துக்கொண்டே நின்றிருந்தால் உங்கள் கமலப்பாதங்கள் நொந்து விடாதா !

ஓஹோ ! உங்கள் கட்டழகனைத் தவிர யாரையும் கண்ணெடுத்துப் பார்க்க மாட்டீர்களோ? நீங்களன்றோ கற்புக் களஞ்சியங்கள்! பதிவிரதா சிரோன்மணிகளே ! உங்கள் கள்ளக் காதலை அமுலாக்குவதற்குக் காளிகோயில்தானா கிடைத்தது? அரசகுமாரிகள் மனது வைத்தால் அந்தப்புரத்திலேயே அரங்கேற்றியிருக்கலாமே உங்கள் நாடகத்தை!

தூக்குதூக்கி தங்கள் ஹாஸ்ய நாடகத்தில் குறுக்கிட்டதைக் கண்டு மறைவிலிருந்து மாதவியும் மல்லிகாவும் வெளிப்படுகின்றனர்.

மாத : ஏய், நிறுத்து ! அதிகப் பிரசங்கி !

சுந் : மாதவி...!மல்லிகா...! அப்படியானால் இவர்கள்? ஏது, இதில் கூடக் கள்ளத்தனமா? சரியான கைக்காரிகள்தான் நீங்கள் !

மாத : நீ எதற்காக இங்கு வந்தாய்?

சுந் : நீ எதற்காக இங்கு வந்தாய்?

அவர்களின் பேச்சு முற்றும்போது அரசரே வந்து மகளைக் கண்டபடி பேசுகிறார். இந்தக் கலவரத்தின் போது சுந்தராங்கதன் சுந்தரபுரி இளவரசன் என்பது வெளியாகிறது. அவனை சுவர்ணபுரி அரசரிடம் ஒப்படைக்கத் தீர்மானிக்கிறார் மாதவியின் தந்தை. மாதவி விசாரணைக்குத் தன்னையும் அழைத்துப் போகும்படிக் கெஞ்சுகிறாள்.

காட்சி – 8

சுவர்ணபுரி தர்பார் நடக்கிறது. சுந்தராங்கதன் மீது குற்றச்சாட்டு ஆரம்பமாகிறது.

மந்திரி : சுந்தரபுரி இளவரசன் சுந்தராங்கதன் இந்த சுவர்ணபுரி மஹாராஜனைக் கொன்று நாட்டைக் கவர சதி செய்தது முதற் குற்றச்சாட்டு. சதிக்கு உடந்தையாக இருக்கமறுத்த மனைவியின் குரல்வளையைப் பிடித்துக் கொல்ல முயன்றது இரண்டாவது குற்றம்...நீர் என்ன சொல்கிறீர்?

சுந் : நான் இந்தக் குற்றச்சாட்டுகளை ஒப்புக் கொள்ள மறுக்கிறேன். நாற்ற வாய்தான் இந்தப் பழிச் சொற்களை சொல்லியிருக்க முடியும். மாப்பிள்ளை, மாமனார் நாட்டைக் கவரக் காரணம்? நாடற்ற நாடோடியா? இல்லை, வீடற்ற வெறும் பரதேசியா நான்? எத்தனையோ நாடுகளை வென்ற எனக்கு இன்னும் ஒரு நாடு வேண்டுமென்றால் அதற்குப் பத்தினியின் பக்கத் துணையா வேண்டும்? சிறு நரியின் உதவி சிங்கத்துக்கு தேவையா, அமைச்சரே?

மந் : உமது மாரீச வாதம் இங்கு யாரையும் மயக்காது. தந்தையால் நாடு கடத்தப்பட்ட உமக்கு நாடேது? நாடு பிடிக்கச் சேனை ஏது? சேனை திரட்டச் செல்வமேது? சேர்ந்து சதி செய்ய இன்னொரு சீர்கெட்ட மூளை ஏது? அதனால் மதி கெட்டீர் ! சதிக்குச் சதியிடமே சகாயம் தேடினீர் என்று நான் சொல்கிறேன்.

அர : பிறந்த குடிக்குக் கொள்ளி வைப்பவள் என் பிரேமா அல்ல, என்பதை இந்தப் பதர் எப்படி அறிவான்?

பிரபு : அன்பார்ந்த நாயகி, இவரது அழகான திட்டத்திற்கு ஆசி கூறுவாள் என்று எதிர்பார்த்தார் போலிருக்கிறது.

மந் : தந்தை மட்டுமல்ல—கூடப் பிறந்த தங்கையும் வெறுத்துத் தள்ளினாளே உம்மை, காரணம்?

சுந் : அது என் சொந்த விஷயம்!

மாதவியின் தந்தை : நீ என் அரண்மனையில் ஒளிந்து கிடந்தது... பைத்தியமாகநடித்தது... உம்... அவைகளும் சொந்த விஷயங்கள்தானா ?

சுந் : ஆம்...

அர : ஏன் மங்களபுரியில் அஞ்ஞாத வாசம் செய்தாய்? அதற்குப் பதில் சொல் போதும்!

சுந் : அதுதான் என் சொந்த விஷயம் என்று சொன்னேனே!

அர : ஆஹா. வெளியிட முடியாத ரகசியமோ?

சுந் : இல்லை...வெட்கக் கேடு.

அர : யாருக்கு?

சுந் : உமக்கு— எனக்கு — இந்த நாட்டுக்கு.

அர : உன்மத்தம் பிடித்தவனே! என்ன உளறுகிறாய்?

சுந் : ஹ்...ஹ... ஹ... மல்லாந்து படுத்து உமிழ்ந்தால் எச்சில் மார் மீது தானே விழுமென்று பார்த்தேன். இப்போது, 'வெட்கக் கேடானாலும் வெளிப்படுத்து' என்று என்னை வற்புறுத்துகிறீர்! கேளும், சொல்கிறேன். மாசுண்டாள் உமது மகள். கைப்பிடித்த கணவனை வஞ்சித்தாள். பர புருஷனோடு கொஞ்சிக் குலாவினாள். தன் மானத்தை மட்டுமின்றி எல்லார் மானத்தையும் மண்ணாக்கிப் போட்டாள்.

அர : ஆ...! என்ன நெஞ்சழுத்தம்? எல்லை மீறிய இவனை இப்போது வெட்டி எறிகிறேன்.

மா. த : மஹாராஜா! பொறுமை! கற்பு கெட்டாள் உம் மனைவி என்கிறீரே, அப்போதே நீர் ஏன் அதை வெளியிடவில்லை?

சுந் : இந்த ஆபாசத்தை நான் யாரிடம் முறையிடுவேன்?

மந் : இதற்குச் சாட்சியங்கள்?

சுந் : முதல் சாட்சி என் தோழன் மதிவாணன். அவன் இங்கு இல்லை. இரண்டாவது தெய்வம். அது இங்கு வராது! மூன்றாவது கண்ணாரக் கண்ட என் கண்கள்.

அர : ஒழுங்கான ஆதாரம் காட்ட முடியாத ஒரு அயோக்யனின் அபாண்டத்தை யார்தான் நம்ப முடியும்?

சுந் : சந்தர்ப்பத்தின் சதியாலும் சூழ்நிலையின் சூதாலும் ஆதாரம் காட்ட முடியா விட்டால் மெய்யும் பொய்யாக வேண்டியதுதானா?

அர : சந்தர்ப்பம், சூழ்நிலை! இரண்டும் சந்தர்ப்பவாதிகளின் சாகஸச் சொற்கள்.

சுந் : மறம் நீக்கி அறம் காண்பவனன்றோ மன்னன்!

அர : ஹ... ஹ... ஹ... இருளில் ஒளி காணும் இந்திர ஜாலம் எனக்குத் தெரியாதே!

சுந் : பொற் கொல்லன் பேச்சில் மயங்கிப் பூமபுகாரின் வணிகனைக் கொன்ற பொறுப்பற்ற பாண்டியன் தானோ நீரும்?

அர : சீ! செய்த தவறுகளை மறைக்க மனைவிக்கு விபசாரப் பட்டம் சூட்டும் ஜெகப்புரட்டன். சரித்திரம் கண்டிராத சதிகாரன். சபையோர்களே! சொல்லுங்கள், இவன் குற்றவாளியா இல்லையா என்று?

பிறர் : குற்றவாளிதான்!

சுந் : குற்றவாளி! நான் குற்றவாளி...ஹ...ஹ... நாகம் கக்கிய நஞ்சை மாணிக்கம் என்று கூத்தாடி நடுநிலைமை தவறுவதா நாயகனின் மாண்பு? மனிதச் சதையை ருசிபார்க்கும் கழுகுக் கூட்டத்தில் மன்னனும் சேர்ந்து ரீங்காரிப்பதா நேர்மை? நீதியைச் சீர் குலைப்பதற்கா சிங்காசனம்? சத்தியத்தைச் சிதைப்பதற்கா செங்கோல்? தர்மத்தை தலைகுனிய வைப்பதற்கா தலைமுடி? உண்மையை ஒழிப்பதற்கா உடைவாள்? வெறும் அதர்மத்திற்கு நிழல் தருவதற்கா வெண் கொற்றக் குடை? நீதிச்சின்னங்களைப் பின்னப் படுத்தத் துணிந்து விட்ட அநீதிமானே! உன்னைத்தான் கேட்கிறேன், இது ஒரு நீதி மன்றமா? வேசியிலும் தாழ்ந்த மகளுக்காக வெட்கப் படாமல் விருது பேசும் வீணனே! உன்னைத்தான் கேட்கிறேன், நீ ஒரு வேந்தனா? சண்டாளச் சதிகாரிக்குச் சாமரம் வீசி, சுய நலம் கருதி, சூட்சுமத்தை ஆராய மறுத்து, அராஜகத்துக்குத் தூபம் போட்டு, மடமைக்கு மங்களம்பாட நினைக்கும் மாமிசப் பிண்டங்களே! உங்களைத்தான் கேட்கிறேன், நீங்கள் எல்லாம் மந்திரிகளா,

அக்ரமக்காரன் வேண்டி அமைச்சர் சூழாம் பாட, அறிவற்றோர் ஒத்தூத, தாழ்ந்தோர் தாளம்போட சதிராடும் செல்வச் சீமான்களே! உங்களைத்தான் கேட்கிறேன், நீங்கள் ஆண்களா பெண்களா? நியாய அநியாயங்களை நிறுத்துப் பார்ப்பதல்லவா

நீதி வேந்தனின் கடமை? அதற்கு உதவியாக இருப்பதல்லவா, அமைச்சரின் தர்மம்? இவர்கள் இருவரும் தங்கள் கடமையில் தவருமல் பார்த்துக் கொள்வதல்லவா பிரபுக்களின் பாங்கு? அதற்குப் பதிலாக இங்கு என்ன நடக்கிறது? கபடத்திற்கு கட்டியம்; அகந்தைக்கு ஆலவட்டம், பகல் வேஷத்திற்குப் பாராட்டு, சத்தியத்திற்குச் சாவுமணி—அடியுங்கள் அற்பர்களே நன்ருக அடியுங்கள்!

அபராதமேசெய்தறியாதஒருவனின் ஆயுளை முடிக்க ஆலசியம் காட்டாதீர்கள். நீதியை மிதித்து அநீதிக்குக் கொடியேற்றி கோர நர்த்தனமாடுங்கள். பாவமற்ற ஒரு பரிசுத்தவானின் ரத்தத்தால் பத்ரகாளி பிரேமாவுக்கு அபிஷேகம் செய்யுங்கள். நடக்கட்டும் உங்கள் நாசவேலை. மகிழட்டும் மன்னன். மண்ணில் விழும் என் தலையைப் பந்தாடி மகிழட்டும் மகள். ஹ...ஹ.. தெய்வம் பொறுக்குமா உங்கள் திருக்கூத்தை ?

அர : ஹ...ஹ. ..ராஜத் துரோகம் செய்ததோடு நில்லாமல் மனச்சாட்சியற்று மனைவி மீது பழிசாட்டி, துடுக்கான பேச்சாலும் துணிகரமான நடிப்பாலும் சபையை ஏமாற்ற முயன்ற இந்த மானங்கெட்டவனை மலை உச்சியிலிருந்து தலைகிழாக உருட்டித் தள்ளி விடுங்கள். உம்!

மதிவாணன் பிரவேசிக்கிருன்.

மதி : பொறுங்கள் மஹாராஜா, பொறுங்கள்!

அர : மதிவாணன்...!

மங் : மதிவாணன்...

மதி : பழத்தைத் திருடித்தின்னவனொருவனிருக்க பழத்தோட்டத்துக்குரியவனையா தண்டிப்பது? இளவரசர் நிரபராதி. நமக்ராம்சேட் பிரேமா விலாசத்தின் கதாநாயகன்.

அர : நமக்ராம் ஸேட் !

நமக்ராம் ஸேட்டைச் சேவகர்கள் இழுத்து வருகிருர்கள்.

நமக்ராம் ஸேட், பெருந்தேவி மூலம் உண்மை வெளியாகிறது. மன்னிப்பு பெறும் பிரேமா விஷம் உண்டு மடிகிருள்.

மங் : சகல மரியாதையுடன் சவத்தை அடக்கம் செய்யுங்கள்.

விசித்திரனும் சித்திரனும் வருகின்றனர்.

சுந்தராங்கதனின் தந்தை சுந்தரபுரி அரசர் வருகிருர்.

அர : சுந்தராங்கதா!

சுங் : அப்பா!

தாய் : சுந்தராங்கதா!

சுங் : அம்மா!

அர : சுந்தராங்கதா! என் தவறுகளை மன்னித்து விடு. இனி நீதான் இந்த நாட்டின் மன்னன்.

சு. தந்தை : சுந்தராங்கதா! பொருள் கொண்டு வராததற்காக உன்னைத் தேசப்பிரஷ்டம் செய்தபின் பிழையை நான் எப்போதோ உணர்ந்து விட்டேன், என் கண்மணி!

சுங் : ஹ......ஹ.....கொண்டு வந்தால் தகப்பன்—கொண்டு வந்தாலும் வராவிட்டாலும் தாய்—சீர் கொண்டு வந்தால் சகோதரி—கொலை செய்வாள் பத்தினி—உயிர் காப்பான் தோழன். இந்த ஐந்து வாக்கியங்கள் மீது ஒரு ஆராய்ச்சி மன்றத்திலே நான் விவாதம் நடத்தி அவற்றைப் பரீட்சிக்கவும் துணிந்தேன். முதல் மூன்று வாக்கியங்களையும் ருஜூப்பித்தார்கள் என் தங்கையும் தாயும் தந்தையும். நான்காவது வாக்கியத்தைப் பற்றி நான் கவலைப்படவேயில்லை. எந்த மனிதன் தன் காதல் மனைவியிடம் போய் அதைச் சோதிப்பான்? ஆனல், தற்செயலாக அதுவும் நிஜமானது. பிரேமாவின் மூலமாக ஐந்தாவது வாக்கியத்தை மெய்யாக்கி விட்டான் என் அன்பன் மதிவாணன். அனுபவத்தினுல் அறிஞன் எழுதும் எந்த வார்த்தைகளும் என்றும் அர்த்தமற்றுப் போவதில்லை.

மா. த. : உண்மை உண்மை! முக்காலும் உண்மை! மாதவி! இப்படி வா! பிரேமாவின் கடைசி விருப்பம் இப்போதே நிறைவேற்றி விட வேண்டும். துன்பத்தை இந்த இன்பத்தால்தான் துடைக்க விரும்புகிறேன்.

சுங் : மதிவாணு! என் இன்னுயிர் நண்பனே! இப்படி வா! உயிர் காப்பான் தோழன் என்பதை உணர்த்திய உத்தமனே! மல்லிகா ஏற்றுக் கொள் என் தோழனை. நண்பா! பெண்களில் மகா உத்தமி இவள். ஏற்றுக்கொள்.

மதி : உன் சித்தம் என் பாக்கியம்

சுந்தராங்கதன் - மாதவி, மதிவாணன்-மல்லிகா ஜோடிகளை யாவரும் வாழ்த்துகின்றனர்.

★